# தமிழரசு

1-7-1990 ரூ.1





மாண்புமிகு இந்தியத் துணைப் பிரதமர் திரு. தேவிலால் அவர்கள் சென்னைக்கு வருகை தந்த போது, அவர்களை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் விமான நிலையத்தில் அன்புடன் வரவேற்றார் (8.6.90)

# 21வது ஆண்டில் தமிழரசு

'தமிழரசு' 21-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. அரசின் அறிவிப்புகள், ஆக்கப்பணிகள், சாதனைகள் குறித்த செய்திகள், தமிழ்ச் சான்றோர்கள், தேசத் தலைவர்கள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகள், அறிவியல் புதுமைகள், கவிதை மாலைகள், மாணவர்க்குரிய கட்டுரை, கவிதைகள் என இப்படிப் பல்வேறு பயனுள்ள எழுத்தோவியங்களை வழங்கித் தொண்டாற்றி வருகிறது 'தமிழரசு'.

அரசின் சார்பில் நடத்தப் பெறும் ஏடு என்ற போதிலும், பொதுமக்கள் விரும்பிப் படிக்கும் பொலிவு மிக்க ஏடாக தமிழரசு விளங்கி வருகிறது.

'தமிழரசு' இதழுக்கு, தொடர்ந்து ஆதரவு அளித்துவரும் வாசகர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், முகவர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் எங்களது மனம் கனிந்த நன்றியைக் காணிக்கை ஆக்குகிறோம்.

—ஆசிரியர்




தமிழரசு

1-7-1990

திருவள்ளுவர் ஆண்டு 2021

ஆனித் திங்கள் - 17

மலர்: 21 இதழ்: 1


## இந்த இதழில்...


மக்களால் மக்களுக்கான வளர்ச்சி! முன்னுரிமைகள் வளர்ச்சிக்கான முன்மாதிரி!
—மாண்புமிகு முதலவர் கலைஞர் ... 2

நலம் பயக்கும் நிலச் சீர்திருத்தச் சட்டங்கள்
—மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் ... 5

புதிய ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் ... 8

உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்துவோம்!
—மாண்புமிகு ஊரக உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் உரை ... 9

இராமநாதபுரம் மாவட்டத்தில் ... 13

செங்கை-அண்ணா மாவட்டத்தில் தொழில் வளர்ச்சிப் பணிகள் ... 15

பாரதிதாசனின் பண்புகள் ... 17

அருங்காட்சியகம் ... 24

பிணி தீர்க்கும் பண்ணைக் கீரை ... 28

சேலம் மாவட்டத்தில் தொழுநோய் ஒழிப்புப் பணிகள் ... 30

அண்ணல் அம்பேத்கர் ... 33

கண்ணாடிக் குச்சியில் கைவண்ணம் ... 37

தலைசிறந்த தேசபக்தர் காயிதேமில்லத் ... 45

சென்னைத் துறைமுக வரலாறு ... 47


முகப்பில்: திருக்குற்றால அருவி



# மக்களால் மக்களுக்கான வளர்ச்சி!

டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரை.

**மா**ண்புமிகு பிரதமர் அவர்களே!

தேசிய வளர்ச்சிக்குழு உறுப்பினர்களே!

தேசிய முன்னணி அரசு அமைக்கப்பட்ட ஒரு சில மாதங்களுக்குள்ளேயே எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் செயல்திட்ட அறிக்கையைத் தயாரித்த மத்திய அரசையும், திட்டக்குழுவையும் நான் பெரிதும் பாராட்ட விழைகிறேன். அவ்வறிக்கையில் இடம் பெற்றுள்ள முன்னுரிமைகளை, நாங்கள் உளமார வரவேற்கிறோம் என்பதை, முதற்கண் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவை தேசிய முன்னணியின் தேர்தல் வாக்குறுதிகளுக்கு இணங்க உள்ளன; அவை நம்முடைய மக்களின் அடிப்படையான உடனடித் தேவைகளை நிறைவு செய்வதை நோக்கமாகக் கொண்ட வளர்ச்சிக்கான முன்மாதிரியாக விளங்குகின்றன.

இந்தச்செயலதிட்ட அறிக்கையை எங்களுடைய அரசும், மாநிலத் திட்டக்குழுவும் பரிசீலித்துள்ளன. எங்களுடைய விரிவான கருத்துக்களை நாங்கள் மத்திய திட்டக்குழுவிற்குத் தெரிவிப்போம். எனவே, நான் இச்சமயத்தில் முக்கிய பிரச்சினைகள் குறித்து மட்டுமே கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

### மக்களால், மக்களுக்கான வளர்ச்சி

இந்தச் செயல்திட்ட அறிக்கையில் போதிய அளவு வேலைவாய்ப்புகளைத் தோற்றுவித்தல், குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தல், அரசு செய்யும் நிதி ஒதுக்கீடுகள் அனைத்திலும் குறைந்தது பாதியேனும் கிராமப் பகுதிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுதல், திட்டமிடல்-செயற்பாடு ஆகியவற்றைப் பரவலாக்குதல், மக்கள் நுகர்பொருட்களைப் பெருமளவில் உற்பத்தி செய்யும் கிராமத்தொழில்கள், சிறுதொழில்கள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தல் ஆகியவை தலையாய தேவைகள். இவை இந்தியாவில் கடந்த 40 ஆண்டுக்கால திட்டமிட்ட வளர்ச்சியில் நேர்ந்திருந்த குறைபாடுகளைப் போக்குவதற்கான மாற்று வழிமுறையின் இன்றியமையா அம்சங்களாகும். இவற்றுக்கு, எங்கள் அரசு தாக்கல் செய்த இரண்டு வரவு-செலவுத் திட்டங்களிலும் முன்னுரிமை அளித்துள்ளோம்.

வேலைவாய்ப்பு, மகளிர் நலன், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோரின் பொருளாதார - சமூக - கல்வி வளர்ச்சிக்கும், குழந்தைகள் நலன், சத்துணவு ஆகியவற்றிற்கும் நாங்கள் முக்கியத்துவம் அளித்துள்ளோம். நம் நாட்டில் வளர்ச்சி என்பது மக்களால், மக்களுக்குக் காணப்படும் வளர்ச்சியாக இருக்கவேண்டும்; இல்லையெனில் அந்த வளர்ச்சியில் பொருளே இல்லை என்பதை இந்த செயல்திட்ட அறிக்கை தெற்றெனச் சுட்டிக்காட்டியிருப்பது எங்களுக்கு மகிழ்ச்சியளிப்பதாக இருக்கிறது.

### மாநிலங்களுக்குப் போதிய நிதி வசதி

இப்புதிய அணுகுமுறையில் பெரிய சிக்கல்கள் சில இருக்கின்றன. அவற்றை நாம் எதிர்கொண்டாக வேண்டும். இவற்றை நான் சந்திக்கத் தயாராக இருக்கிறேன். இந்தச்செயல்திட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ள முன்னுரிமைகள்-வேலைவாய்ப்பிற்கோ, கிராம வளர்ச்சிக்கோ பரவலாக்கப்பட்ட திட்டமிடும் முறைக்கோ, கல்வி, சுகாதாரம், குடிநீர் வழங்கல், வீட்டுவசதி ஆகிய அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கோ எதுவாயினும் சரி, அவற்றை முதற்கண் செயற்படுத்தவேண்டியது மாநிலங்களே ஆகும். மாநிலங்களுக்குப் போதிய நிதி வசதிகள் அளிக்கப்பட்டாலன்றி, இந்த முன்னுரிமைத் திட்டங்களைச் செயற்படுத்த முடியுமென்பதை நாம் எதிர்பார்க்க இயலாது. இதைச் செய்து முடிக்க முக்கியமான இரண்டே வழிகள் தான் இருக்கின்றன. அவை, நிதிக்குழு மூலம் நிதி பகிர்ந்தளிக்கப்படுவது. ஆண்டுத்திட்டங்களின் மூலம் திட்ட நிதியுதவி அளிக்கப்படுவது ஆகியவையே.

**எட்டாம் திட்டக் காலத்தில்**

எட்டாம் திட்டக் காலத்தைப் பொறுத்தவரை, ஒன்பதாம் நிதிக்குழு, அதன் முடிவைத் தெரிவித்துள்ளது. பகிர்ந்து கொள்ளத்தக்க வரிகளில் மிக முக்கியமான வருவாய் ஆதாரமான மத்திய ஆயத்தீர்வைகளில் மாநிலங்களின் பங்கை 1979-ல் ஜனதா அரசு பதவியில் இருந்த காலத்தில் 20 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக ஏழாம் நிதிக்குழு உயர்த்தியது. எட்டாவது நிதிக்குழு பற்றாக்குறை மாநிலங்களுக்குக் கூடுதலாக 5 சதவீதம் வழங்கிய போது, அனைத்து மாநிலங்களுக்கும் அது பற்றாக் குறை மாநிலமாக இருந்தாலும் அல்லது வேறு வகையிலான மாநிலமாக இருந்தாலும் அவற்றுக் குக் கிடைக்கக்கூடிய பங்கு 1984-89-ல் 40 சதவீதம் என்கிற அதேஅளவில் வைத்துக்கொள் ளப்பட்டது. ஒன்பதாவது நிதிக்குழு இந்துப்பங்கினை 8-வது திட்டக்காலத்திற்கு 37.5 சதவீதமாகக் குறைத்துள்ளது. மாநிலத்தின் வளர்ச்சிக்கான பொறுப்புகள் மிக அதிகமாக உயர்ந்துள்ளபோதிலும், 1979-84-ல் செய்யப்பட்ட ஒதுக்கீட்டைவிட தற்போது மாநிலங்களுக்குக் குறைவாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து நாம் கொண்டுள்ள இக்கருத்தினை மாநிலங்களும் ஏற்கும் என நான் நம்புகிறேன்.

**நிதிக்குழுவின் ஒதுக்கீடு:**

நிதிக்குழுவின் ஒதுக்கீட்டுப் பரிந்துரையில் காணப்படும் பலவேறு கடுமையான குறைகளையும் தங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விழைகிறேன். நிதிக்குழு மாநிலத்தின் நிதிவாயில்களை மிகையாக மதிப்பிட்டுள்ளது; மேலும், மாநிலங்களின் திட்டஞ்சாரா செலவினங்களைக் குறைவாக மதிப்பிட்டுள்ளது; ஒரு சில மாநிலங் களுக்கு மட்டுமே கணிசமாகப் பயனளிக்கக்கூடிய முறையில் ரூ.9,000 கோடி அளவுக்குக் கணிசமான ஒரு தொகையைத் திட்ட மானியமாக வழங்க நிதிக்குழு பரிந்துரை செய்துள்ளது. நிதிக் குழுவின் இந்த ஒதுக்கீடு 1968-ல் தேசிய வளர்ச்சி மன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட காட்கில் கோட்பாட்டிற்கு முற்றிலும் முரணானதாகும்.

> **தமிழகத் திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்குக!**

# முன்னுரிமைகள் வளர்ச்சிக்கான முன்மாதிரி !

## —முதல்வர் கலைஞர்



டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டார் (18.6.90).

### மாநிலங்களின் மத்திய நிதி உதவித்தேவையை ஆய்வு செய்ய ஒரு குழு

அணுகுமுறை அறிக்கையில் சிறப்பாகக் காட்டப் பட்டுள்ள முன்னுரிமைத் திட்டங்களை நிறை வேற்றுகிற ஒருநிலையில் மாநிலங்கள் வைக்கப் படுமானால், நிதிக்குழுவின் மேற்சொன்ன ஒதுக் கீட்டுப் பரிந்துரையினால் ஏற்படும் விளைவுகளைத் தேசிய வளர்ச்சி மன்றம் கடுமையாகக் கருதிப் பார்க்கவேண்டுமென நான் வலியுறுத்த விழை கிறேன். இந்நோக்கத்திற்காக 8-வது திட்டத்தில் மத்திய அரசின் நிதி ஒதுக்கீடுகள், நிதிக்குழுவின் பரிந்துரை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு மாநிலங் களின் மத்திய நிதி உதவித்தேவையை ஆய்வு செய்ய இம்மன்றம் ஒரு குழுவை அமைக்க வேண்டு மென நான் கருதுகிறேன். அந்த ஆய்வின் அடிப் படையில், மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக் குத் தேவைப்படும் திட்ட நிதியுதவியையும், திட்ட நிதியுதவியை மாநிலங்களுக்கிடையே எவ்வாறு பகிர்ந்தளிக்க வேண்டுமென்பதையும் தேசிய வளர்ச்சி மன்றம் முடிவுசெய்யலாம்.

### மக்கள்தொகைக் கொள்கை

மக்கள்தொகைக் கொள்கையைப் பொறுத்த வரையில், குடும்பநலத்திட்டங்களின் ஒருங்கிணைந்த

## மத்திய - மாநில அரசுகளின் உறவு குறித்து ஆய்வு

அணுகுமுறை வாயிலாக, பிறப்புவீதத்தை 22.5 என்கிற அளவுக்குக் கொண்டுவந்து இம்மாநிலம் ஒரு சாதனையை எய்தியுள்ளது என்பதை நான் மிக மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்ட விழைகிறேன். மாநிலங்களின் இந்த முற்போக்கு மக்கட்தொகைக் கொள்கை அம்மாநிலத்தின் பொருளாதார அரசியல் நலனுக்குப் பாதகம் விளைவிப்பதாக இருப்பதை நாம் உணர்கிறோம். உதாரணமாக முன்னர் பின்பற்றப்பட்ட 1971 மக்கள்தொகைப் புள்ளி விவரத்திற்குப் பதிலாகக் கூடுதல் ஆய்த்தீர்வை காரணமாக நிதி ஆதாரங்களை ஒதுக்குவதற்கு 1981 மக்கள்தொகையை 9-வது நிதிக்குழு அடிப் படையாக எடுத்துக்கொண்டுள்ளது. அத்தகைய செயல்நோக்கங்கள் அனைத்திற்கும் 1971-ஆம் ஆண்டு மக்கள்தொகைப் புள்ளிவிவரம் மட்டுமே இனி பயன்படுத்தப்பட வேண்டும். இம்மாநிலத் தில் மக்கள் தொகையைக் குறைத்ததன் காரண மாக நாம் நாடாளுமன்றத்தில் இரண்டு உறுப்பினர் பதவியை இழந்தோம். சட்டப்பேரவைத் தொகுதி களுக்கு வாக்காளர்களின் எண்ணிக்கை மாநிலத் திற்கு மாநிலம் வேறுபடுவதால், எதிர்காலத்தில் மக்கள் தொகையில் மாற்றம் ஏற்பட்டபோதிலும், மாநிலத்திலுள்ள நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையைத் தற்போதுள்ள அளவிலேயே வைத்திருப்பதைக் கருத்திற்கொண்டு, நாடாளு மன்றத் தொகுதிகளிலுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடு வதற்கு அனுமதிக்க வேண்டும்.

### மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்

இந்த அணுகுமுறை அறிக்கை அதிகாரங்களைப் பரவலாக்குதல், ஒருங்கிணைந்த பகுதி குறித்துத் திட்டமிடுதல் ஆகியவற்றைச் சரியான முறையில் வலியுறுத்துகிறது. இந்த அணுகுமுறையை நாங்கள் வரவேற்கிறோம். தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பணி களில், ஊராட்சி ஒன்றியங்களும், ஊராட்சிகளும், தீவிரப் பங்கேற்குமாறு செய்ய, நாங்கள் ஏற் கனவே பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இவ்வாறு சரியான வழிகளில் வலியுறுத்தப்பட்டி ருக்கின்ற இந்தச் செயல்திட்ட அறிக்கை, மத்திய அரசு மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் காட்டுகிறது. அதிகாரங்களைப் பரவலாக்குதல் என்கிற கொள்கையையும், நடைமுறையையும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவையாகவே நாங்கள் கருதுகிறோம்.

மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரங்களையும், நிதி ஆதாரங்களையும் வழங் கத் தயாராக இருந்தால் தவிர, உள்ளாட்சி அமைப்பு களுக்கு அதிக அதிகாரங்களையும் நிதி ஆதாரங் களையும் வழங்குமாறு மாநில அரசுகளைக் கேட்பது சாத்தியமாகாது. உகந்ததும் ஆகாது. இதைக் கருதி தான், தேசிய முன்னணி அரசு, ''உண்மையான கூட்டாட்சி முறையைக் கொண்டுவரவும், முன் பிருந்த மத்திய அரசு குவித்து வைத்திருந்த அதி காரங்களைப் பரவலாக்கவும்'' பொறுப்பேற்றுள்ளது. மேலும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 263-ஆம் பிரிவின்கீழ், பன்மாநிலக்குழுவை அமைத்தல் போன்ற பெரும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. குறிப்பாக, அவசரநிலைக் காலத்தில் 1976-ல் கொண்டுவரப்பட்ட, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 42-வது திருத் தத்தின் மூலமாக, ''தொழில் நுட்பக்கல்வி, மருத் துவக்கல்வி, பல்கலைக்கழகங்கள் உட்பட'', ''கல்வி'' ''வனங்கள்'', ''மக்கள்தொகைக் கட்டுப் பாடு, குடும்பநலன்'' ஆகியவற்றை மாநிலப் பட்டி யலிலிருந்து பொதுப் பட்டியலுக்கு மாற்றியதைத் தற்போது மாற்றவேண்டியது அவசியம் என்று நாங்கள் கருதுகிறோம்.

### மத்திய-மாநில அரசுகளின் உறவுகள்

வரிவிதிப்பு தொடர்பாக மத்திய மாநில அரசு களுக்கிடையே உள்ள உறவுகள், பொருளாதார சமூகத் திட்டமிடுதலில் மத்திய அரசின் பங்கு தொடர்பான வேறு பல பிரச்சினைகளும் இருக் கின்றன. செயல்திட்ட அறிக்கையின் நோக்கங் களையும், இலக்குகளையும் நாம் வெளியிட வேண்டு மாயின் அவற்றை நாம் மறுஆய்வு செய்யவேண் டியது அவசியமாகும். ''மாநில அரசுகள் தங்களு டைய தன்மானத்தை விட்டுக்கொடுத்து, மத்திய

41-ஆம் பக்கம் பார்க்க



# நலம் பயக்கும் நிலச் சீர்திருத்தச் சட்டங்கள்

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்

திரு நாஞ்சில் கி. மனோகரன்

விவசாயச் சீர்த்திருத்தங்களைப் பற்றியும், கிராமப்புற ஏழைமக்களின் நலனுக்கு உகந்த வகையில் அவற்றைச் செயல்படுத்துவது பற்றியும், விவாதிப்பதற்காகக் கூட்டப்பட்ட இந்த மாநாட்டில், தமிழக முதல்வர் சார்பில் கலந்து கொள்வது குறித்து மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில், 1948-ஆம் ஆண்டு வாக்கிலேயே அரசாங்கத்துக்கும், சாகுபடியாளர்களுக்குமிடையில் இருந்து வந்த ஜமீன்தாரிகள், இனாம் தாரர்கள் முதலிய இடைத் தரகர்களை ஒழிப்பதற்காக முக்கியமான பல்வேறு விவசாயச் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றப்பட்டன. தற்போது தமிழ் நாட்டில் நீதி மன்றங்கள் முன்பு பைசலாகாமலிருந்து வரும் ஒருசில வழக்குகள் நீங்கலாக, இடைத்தரகர் போன்ற நிலையிலுள்ள நில உரிமையாளர்கள் எவருமில்லை.

சாகுபடியாளர்களை நிலத்திலிருந்து வெளியேற்றுவதிலிருந்து பாதுகாப்பு அளிப்பது, அவர்கள் செலுத்த வேண்டிய நியாய வாரத்தை நிர்ணயிப்பது இந்த மாநிலத்தில் உள்ள நில உடைமையாளர்களுக்கும் பொது அறக்கட்டளைகளுக்கும் சொந்தமான நிலங்களைச் சாகுபடி செய்து வருபவர்களின் பெயரைப் பதிவு செய்தல் ஆகியவை போன்ற பல நிலகுத்தகைச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. தற்போது, இராணுவத்தினராயில்லாத நில உடைமையாளர்கள், குத்தகைப் பாக்கி செலுத்தாததற்காக நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தாலொழிய, சாகுபடியாளர்களிடமிருந்து நிலத்தைத் திரும்ப எடுத்துக் கொள்ள முடியாது.

தற்போது தனி நபர்களுக்கும் பொது அறக்கட்டளைகளுக்கும் சொந்தமான சுமார் 6,84,500 ஏக்கர் நிலம் சம்பந்தமாக, 4,94,000 பதிவு செய்யப்பட்ட சாகுபடியாளர்கள் இருந்து வருகின்றனர். பதிவு செய்யப்படாத சில சாகுபடியாளர்களும் இருக்கக் கூடும். இந்தச் சாகுபடியாளர்களுக்கு நில உடைமை உரிமையை வழங்குவது பற்றி அரசாங்கம் பரிசீலித்தது.

நிலச் சொந்தக்காரர்களுக்கு நட்ட ஈடு கொடுப்பதற்காக ஒரு பெருந்தொகை (ரூ.350 கோடி) தேவைப்படுவதாலும், இந்தத் திட்டத்துக்கு நிதியுதவி செய்ய நிதி வசதியமைப்புகள் தயங்குவதாலும், இது சம்பந்தப்பட்ட சட்டத்தை இயற்ற முடியவில்லை. இந்த நிலச்சீர்திருத்தத்தை விரைவில் செயல்படுத்துவதற்காக, இந்திய அரசோ, அல்லது நிதி வசதி அமைப்புகள் மூலமோ உதவ முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

தமிழக நில உச்சவரம்புச் சட்டம் 1960-ஆம் ஆண்டில் அமலுக்கு வந்தது. தற்போது, ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு விதிக்கப்பட்டுள்ள உச்சவரம்பு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் ஆகும். ஒட்டுமொத்தமான உச்ச வரம்பு நிலப் பரப்பு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் ஆகும். இந்தச் சட்டம் எங்கள் மாநிலத்தில் 30 ஆண்டு காலமாக அமலில் இருந்து வருவதாலும், தற்போது பெரும்பாலான நிலச் சொந்தக்காரர்களிடம் இருந்து வரும் நிலம், பாகப் பிரிவினைகள், விக்கிரயம், வாரிசு உரிமைகள் போன்ற காரணங்களின் விளைவாக இந்த உச்ச வரம்பை விடக் குறைவாகவே



**எந்தப் பிரச்சார இயக்கமும், அன்புவழி சென்றால்தான் வெற்றிபெற முடியுமே ஒழிய, பலாத்கார வழி சென்றால் ஒருபோதும் வெற்றிபெற முடியாது!**

**—தந்தை பெரியார்**

இருப்பதாலும், உச்சவரம்பை மேலும் குறைக்க வேண்டிய அவசியம் எதுமில்லை.

இருப்பினும், இந்தச் சட்டம் அமலுக்கு வர விருக்கும் தறுவாயில், முன்கூட்டியே சில நிலச் சொந்தக்காரர்கள் பினாமி பேரத்தில் ஈடுபட்டு, அதன் விளைவாக நிலங்கள் உச்ச வரம்புச் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிவிட்டிருக்கின்றனர். இந்த நிலங்களை மேற்கொள்ள வேண்டியதுதான், இப்போது அவசியமான விஷயமாகும். இந்த நிலச் சொந்தக்காரர்கள், யுக்தியைக் கையாண்டதன் மூலம், நிலங்கள் பெயரளவில் வேறு சிலர் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றின் விளைச்சலைத் தாங்களே தொடர்ந்து அனுபவித்து வர முடிகிறது. இதைக் கருத்தில் கொண்டுதான், தமிழக அரசு ஒரு சட்டம் கொண்டு வந்தது. சட்ட மன்றத்தில் அதற்கு அமோகமான ஒப்புதலும் கிடைத்தது. இந்தச் சட்டத்துக்குக் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் கிடைத்ததுமே, 1958 ஜனவரி 1-ந் தேதிக்கும் 1960-ஏப்ரல் 6-ந் தேதிக்கும் இடையில் நடந்துள்ள பினாமி நில மாற்றங்கள் குறித்து விசாரணை நடத்த நடவடிக்கைகள் எடுக்கும். நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் இந்த நிலங்களை மேற்கொள்வதற்கான சட்ட ரீதியான நடைமுறைகளை மேற்கொள்ளும்.

சாகுபடியாளர்கள் நிலங்களிலிருந்து வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாப்பு அளிப்பதற்காக, தமிழக அரசு அவ்வப்போது சட்டங்கள் இயற்றி வந்திருக்கிறது. வெள்ளத்தினாலோ அல்லது வறட்சியினாலோ விளைச்சல் பொய்த்துப் போகும் போதெல்லாம், குத்தகை வசூலை நிறுத்தி வைக்கவோ, ஒத்திவைக்கவோ பல சந்தர்ப்பங்களில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. பலர் விஷயத்தில், இப்போது இந்த குத்தகைப் பாக்கிகள் மிக அதிகமாகப் பெருகி விட்டுள்ளது. குத்தகைப் பாக்கி பூராவையும் சாகுபடியாளர்களால் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அண்மையில் இது சம்பந்தமாக ஒரு ஏற்பாட்டை உள்ளடக்கிய சட்டம் ஒன்று இயற்றப்பட்டிருக்கிறது. ஒரு மொத்தத் தொகையை உடனடியாகச் செலுத்தி விட்டால், மிச்சமுள்ள தொகை தள்ளுபடி செய்யப்படும் என்பது இந்த ஏற்பாடுகளில் ஒன்றாகும். குத்தகை பாக்கியில் ஒரு பகுதியை 5 ஆண்டு தவணைகளில் செலுத்தி விட்டால் மிச்சமுள்ள பாக்கித் தொகை தள்ளுபடி செய்யப்படும் என்பது மற்றொரு ஏற்பாடாகும். இந்த இரு ஏற்பாடுகளில் எந்த ஒன்றையாவது தேர்ந்தெடுக்கும் விருப்ப உரிமை சாகுபடியாளர்களுக்கு உண்டு. இந்தச் சட்டமும் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காகக் காத்து நிற்கிறது.

மாநில அரசினால் மேற்கொள்ளப்பட்ட 1.75 லட்சம் ஏக்கர் நிலத்தில், 1.37 லட்சம் ஏக்கர் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கிறது. அவர்களில் பெரும்பாலோர், ஆதி-திராவிட மக்களும் பழங்குடிப் பிரிவினருமேயாவர். அண்மையில் எங்களது அன்புக்குரிய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் சுமார் 5000 நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு நிலப்பட்டாக்கள் வழங்கினார் என்பதையும், அதில் 3,600க்கு மேற்பட்டவர்கள் ஆதிதிராவிடர்கள் என்பதையும் இங்கே குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இவ்வாறு நிலப்பட்டா பெற்றவர்கள், அந்த நிலங்களைச் சீர்செய்வதற்காக, எக்டேர் ஒன்றுக்கு ரூ. 2,500 என்ற அளவில் உதவி பெற அருகதை உடையவர்கள். இந்த உதவி விகிதம் வெகு காலத்துக்கு முன்பு எப்போதோ நிர்ணயிக்கப்பட்டதாகும். இதைத் தக்க முறையில் அதிகரிக்க வேண்டும். இந்த உதவி விகிதத்தை எக்டேர் ஒன்றுக்கு ரூ.10,000 ஆக உயர்த்த வேண்டுமென்றும், இந்தப் பொறுப்பை மத்திய அரசும், மாநில அரசும் 75:25 என்ற விகிதத்தில் ஏற்றுக் கொள்ளலாம் என்றும் யோசனை கூற விரும்புகிறோம். இதை இந்த மாநாடு பரிசீலிக்க வேண்டும்.

வழக்குகள் நீண்டு கொண்டே போவதும், தடையுத்தரவுகள் பிறப்பிக்கப்படுவதும்தான், நிலச் சீர்த்திருத்த அமல் தாமதமடைவதற்குக் காரணமாகும். எனவே, இதற்காகத் தனியாக ஒரு சிறப்பு மன்றத்தை அமைத்தால், நிலச் சீர்திருத்தங்களைத் துரிதமாக அமல் நடத்த முடியும் என்று கருதப்படுகிறது. நில நடுவர் மன்றம் ஒன்றை அமைக்க எங்கள் மாநில அரசு ஏற்கெனவே நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதற்குத் தேவையான சட்டபூர்வமான நடைமுறைகள் பூர்த்தியாகி விட்டன. இந்த நடுவர் மன்றம் விரைவிலேயே அமைக்கப்படும். இப்போது உயர்நீதி மன்றத்தின் முன்புள்ள மேல் முறையீடுகள், துரிதப் பைசலுக்காக இந்த நடுவர் மன்றத்துக்கு மாற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நடுவர் மன்றத்தில் நீதித்துறையைச் சேர்ந்தவர்களும், நிர்வாகத்துறையைச் சார்ந்தவர்களும் இருப்பார்கள். அதிகாரச் சார்பற்றவர்களை இந்த மன்றத்துக்கு நியமிப்பதை நாங்கள் விரும்பவில்லை.

கிராமப்புறங்களில் தனியார் நிலங்களில் வீடு கட்டிக்கொண்டு வசிக்கும் நிலமற்ற ஏழைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் சட்டத்தை 1971-ஆம் ஆண்டிலேயே முதன் முதலாக இயற்றியது தமிழ் நாடு தான். இவ்வாறு வீடு கட்டப்பட்டுள்ள மனையையும், அதையொட்டியுள்ள சொற்ப நிலத்தையும் அவர்களுக்கே சொந்தமாக்குவதுடன், அந்த மனைக்குப் போவதற்கான வழியின் மீது உரிமை அளிக்கவும் இந்தச் சட்டம் வகை செய்திருக்கிறது. இந்தச் சட்டத்தின் கீழ் இதுவரை 1.81 லட்சம் கிராமப்புற விவசாயத் தொழிலாளர்களுக்கும்,

கைவினைஞர்களுக்கும் வீட்டுமனைகளுக்கான உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தில் அண்மையில் ஒரு அபிவிருத்தியும் செய்யப்பட்டிருக்கிறது. 1990 ஏப்ரல் 1-ந்தேதியன்று இவ்வாறு அனுபவித்து வருபவர்களுக்கும், இந்தத் தகுதி விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. இதைத் தவிர, ஆண்டொன்றுக்குச் சுமார் 3 லட்சம் மனைகள் என்ற விகிதத்தில் மனைப்பட்டாக்களை அரசு வழங்கி வருகிறது என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்

நிலங்கள் சிறு சிறு துண்டுகளாகப் பிரிந்து நிற்காமல், ஒரு தொகுப்பாக இணைந்து இருக்கும்படி- அதாவது துண்டாடப் படாதபடி - பார்த்துக் கொள்ள வேண்டும் (Consolidation) என்று கூறப்படுகிறது. இதைச் சட்டத்தின் மூலம் கைகூடச் செய்ய முடியும் என்று நாங்கள் நினைக்கவில்லை. தமிழ்நாட்டைப் பொருத்தவரை, சிறு விவசாயிகள், சொற்ப நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் என்ற வகையில் மிக ஏராளமான பேர் உள்ளனர். இதைத் தவிர, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் பலருக்கும் பல்வேறு திட்டங்களின் கீழ் குறைந்த அளவு நிலங்கள் ஒதுக்கப்படுகின்றன.

இவர்கள் எல்லாம் தங்கள் பங்குக்குச் சிறிதளவு தியாகம் செய்ய முன்வந்தாலொழிய, ஓரளவு விட்டுக்கொடுக்க முன்வந்தாலொழிய, பெரிய நிலத்தொகுப்புகளை உருவாக்கும் சீர்திருத்தத்தைக் கொண்டு வருவது என்பது மிகவும் சிரமமான விஷயமாகும். எனவே, தற்போதைக்கு, சட்டத்தின் மூலம் கட்டாயப்படுத்தாமல், அவரவர் விருப்பத்துக்கு உரிய விஷயமாக இதை விட்டுவிட விரும்புகிறோம்; இருந்தபோதிலும், சம்பந்தப்பட்டவர்கள் இத்தகைய திட்டங்களுடன் வந்தால், அவர்களுக்குத் துணை புரிய அரசு எப்போதுமே தயாராக இருக்கிறது.

1967-லிருந்து 1976 வரை ஆட்சிப் பொறுப்பை வகித்து மீண்டும் 1989-லிருந்து ஆட்சிக்கு வந்துள்ள இந்த ஆளும் கட்சியானது, நிலச்சீர்த் திருத்தச் சட்டங்கள் அனைத்தையும் திறம்பட செயற்படுத்த வேண்டும் என்று அரசுக்குத் திட்டவட்டமாக அரசியல் கட்டளை பிறப்பித்துள்ளது. இந்த வகையில், பல சட்ட ரீதியான நடவடிக்கைகளும் நிர்வாக ரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, ஏற்கெனவே குறிப்பிடத்தக்க வெற்றியும் கிட்டியுள்ளது.

தற்போதுள்ள சட்டத்தில் உள்ள பொத்தல்களை அடைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அறக்கட்டளைகளுக்கும் நிறுவனங்களுக்கும் மாற்றப்படுவதன் மூலம் தற்போதுள்ள சட்டத்தின் பிடியில் அகப்படாமல் தப்பி விட்டிருக்கும் நிலங்களை எடுத்துக் கொள்வதற்காக, சட்டத்தைத் திருத்தவும் இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. எனினும், மதச்சார்பு அமைப்புகளுக்குச் சொந்தமான நிலங்களை கையகப் படுத்தும் எண்ணம் இந்த அரசுக்கு இல்லை.

நிலச் சீர்திருத்தச் சட்டங்களைச் சரிவர செயல்படுத்தும் பணியில் கிராமப்புறங்களில் உள்ள





**"சமூகக் கொடுமையானது அரசியல் கொடுமையை விடப் பயங்கரமானது ஆகும். ஆகையால், எவனொருவன் சமூகக் கொடுமையை எதிர்த்து நின்று துணிந்து போராடுகிறானோ, அந்தச் சமூக சீர்திருத்தவாதியானவன் அரசியல்வாதியை விட மிகுந்த தைரியசாலியாக மதிக்கப்படுவான்".**

பொது நல ஊழியர்களின் ஒத்துழைப்பையும் எங்கள் அரசு நாடுகிறது. கிராமப்புற ஏழை எளியவர்களுக்குப் பணக்கார நிலச்சுவான்தார்களுக்குமிடையில் ஏற்படும் தகராறுகளில் வருவாய்த்துறை அதிகாரிகளும் காவல்துறை அதிகாரிகளும் காட்டும் மனப்பான்மையில் மாறுதலை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் எடுக்க முற்பட்டுள்ளோம்.

எங்கள் மாநிலத்தில் பழங்குடி மக்கள் சொற்பம் பேரே வசிக்கின்றனர். அவர்களும் இங்குமங்குமாகச் சிதறிக் கிடக்கிறார்கள். 1981-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, பழங்குடிப் பிரிவினர் எண்ணிக்கை 5.20 லட்சம்தான்.

இது இந்த மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 1.07 சதவிகித அளவுதான். பழங்குடிப் பிரிவினர் கொஞ்சம் பேர்தான் இருக்கிறார்கள் என்ற போதிலும், இந்தியாவின் மற்ற மாநிலங்களில் உள்ள பழங்குடிப் பிரிவினருக்கு இருக்கும் அதே பிரச்சினைகள்தான் இவர்களுக்கும் இருக்கின்றன. ஒருபுறத்தில் சமூக, பொருளாதார, கல்வித்துறைகளில் இவர்கள் ஒரேயடியாகப் பிற்படுத்தப்பட்ட நிலையில் உள்ளனர். மற்றொரு புறத்தில், லேவாதேவிக்காரர்கள் கடும் வட்டியின் மூலமும், இவர்களுக்குச் சொந்தமான நிலங்களை அபகரிப்பதன் மூலமும் இவர்களைச் சுரண்டி வருகிறார்கள்.

பழங்குடிப் பிரிவினருக்காக ஒதுக்கப்பட்டுள்ள அரசாங்க நிலத்தை, மற்றவர்கள் அபகரிப்பதைத் தடுக்க, தற்போது வருவாய்த்துறையின் நிலை ஆணையில் ஒரு ஷரத்து இருந்து வருகிறது. மத்திய அரசு தெரிவித்துள்ள யோசனையைக் கருத்தில் கொண்டு, பழங்குடிப் பிரிவினரிடமுள்ள நிலத்தை மற்றவர்கள் பறித்துக் கொள்ளுவதைத் தடுப்பதற்காக எங்கள் மாநிலத்தில் ஒரு சட்டம் இயற்றுவது பற்றி எங்கள் அரசு பரிசீலித்து வருகிறது. விரைவில் ஒரு முடிவு எடுக்கப்படும்.

**(டில்லியில் நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டில் ஆற்றிய உரையிலிருந்து (12.6.90).**



## புதிய ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்

பொன்னேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு க. சுந்தரம் அவர்கள் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவருக்கு மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் 16.6.90 அன்று மாலை 6.00 மணியளவில் ஆளுநர் மாளிகையில் பதவிப் பிரமாணம் செய்துவைத்தார். அமைச்சர் திரு. க. சுந்தரம் அவர்கள் தமிழில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார். தொடர்ந்து ரகசிய காப்புறுதிப் பிரமாணமும் செய்து வைக்கப் பட்டது.

எளிய முறையில் நடைபெற்ற பதவியேற்பு விழாவுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் தமிழ்க்குடிமகன் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. டி.ஆர். பாலு அவர்கள், தலைமைச் செயலர் திரு. எம்.எம். இராஜேந்திரன், இ.ஆ.ப. மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அரசின் அறிவிப்புகள்—ஆக்கப் பணிகள்

★ சென்னையில் குடிசைப் பகுதிகளில் புதிய கழிவறைகள் கட்டத் தமிழக அரசு ரூ.5 கோடி நிதி வழங்கியுள்ளது. இந்த நிதியின் மூலம் சென்னையில் 14 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள குடிசைப்பகுதிகளில் புதிய கழிவறைகள் கட்டப் பட உள்ளன.

★ ஆதிதிராவிடருக்கும் பழங்குடியினருக்கும் ஒன்றாக இருந்து வந்த இட ஒதுக்கீடு மாற்றியமைக் கப்பட்டு, கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் ஆதி திராவிடருக்கு 18 சதவிகிதம் இட ஒதுக்கீடும், பழங்குடி மக்களுக்கு 1 சதவிகிதம் இட ஒதுக்கீடும் அளிக்கப்படுகிறது என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்.

★ ஆதரவற்ற விதவைகள், குழந்தைகள், தங்கு வதற்கெனத் தமிழகத்தில் 5 இடங்களில் புதிதாக மறுவாழ்வு இல்லங்கள் கட்டப்படும் என மாண்புமிகு சுற்றுலா அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.பி. கந்தசாமி அவர்கள் அறிவித்தார்.

★ நடப்பாண்டில் தமிழ்நாட்டில் 2,000 ஏழைப் பெண்களுக்குச் சமூக நலத்துறையின் மூலம் இலவசத் தையல் இயந்திரங்கள் வழங்கத் திட்ட மிடப்பட்டுள்ளது என்று மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் தெரிவித்தார்.

★ சென்னை மாநகரைத் தூய்மைப் படுத்திடப் போர்க்கால நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு அமைச்சர்கள் திரு. பொன்முடி, திரு. கோ.சி. மணி ஆகியோர் முறையே வள்ளுவர் கோட்டம் புதிய பூங்கா, ஆயிரம் விளக்குப் பகுதி களில் முதல் கட்டமாக இந்தப் பணியை 16.6.90 அன்று தொடங்கி வைத்தனர். இதில் மாணவர், பொது நல அமைப்பினர் கலந்து கொண்டனர்.

★ நடப்பு ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டத் தில் 115 இலட்சம் ரூபாய் செலவில் காடுகள் வளர்ப்புப் பணித் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.



# உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்துவோம்

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை அமைச்சர்*

## திரு கோ. சி. மணி

**மா**ண்புமிகு பிரதமர் அவர்களே! மாண்புமிகு துணைப் பிரதமர் அவர்களே! மாநிலங்களின் முதலமைச்சர்களே! மத்திய, மாநில அமைச்சர்களே! ஆளுநர்களே! துணை ஆளுநர்களே! நண்பர்களே!

இம்மாநாட்டில் பங்கேற்று எங்கள் மாநிலத்தின் சார்பில் 'பஞ்சாயத்து ராஜ்' மற்றும் நகர அமைப்புகள் குறித்த கருத்துக்களை எடுத்தியம்புவதில் பெரு மகிழ்வு அடைகின்றேன். இம்மாநாட்டைக் கூட்டி அனைத்து முதல்வர்களின் கருத்துக்களையும் அறிய மாண்புமிகு பிரதமர் அவர்கள் எடுத்த முயற்சியை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'பஞ்சாயத்து ராஜ்' தொடர்பான 64-வது அரசியல் சட்டத் திருத்த மசோதா மற்றும் நகர் பாலிகா தொடர்பான 65-வது அரசியல் சட்டத் திருத்த மசோதாக்களில் எவ்விதமான கலந்துரையாடலும் இன்றி முந்தைய மத்திய அரசு திருத்தங்கள் கொண்டுவர முனைந்தபோது எங்கள் முதலமைச்சர் அவர்கள் மாநில அரசுகளுக்குக் தங்கள் கருத்துக்களை எடுத்தியம்ப எந்த ஒரு வாய்ப்பும் அளிக்கப்படாதது குறித்து சுட்டிக் காட்டியிருந்தார்கள். ஆனால் தற்போது மத்திய அரசு மாநிலங்களைக் கலந்து ஆலோசிக்கின்ற இந்தப் புதிய அணுகுமுறை உண்மையில் மனதிற்கு மகிழ்வூட்டுவதாக உள்ளது.

இன்றைய தினம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் இரண்டு பொருட்கள்- 'பஞ்சாயத்து ராஜ்' மற்றும் நகர அமைப்புகளைப் பற்றியதாகும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஊராட்சி அமைப்புகள் இடைப்பட்ட வரலாற்றுக் காலத்திலேயே சிறப்பாகச் செயல்பட்ட பெருமை உடையது. நிலம், நீர்ப்பாசனம், நீதி நிர்வாகம், ஆவணங்கள் பராமரித்தல் போன்ற பல்வேறு வகையான ஊராட்சிப் பணிகளைச் செயல்படுத்திய பெருமை பண்டைத் தமிழ்ச் சமுதாயத்திற்கு உண்டு. இதே போன்று நாடு விடுதலை பெற்றபின் 1958-ஆம் ஆண்டிலேயே கிராம அளவில் அதிக அதிகாரங்களை அளிக்கும் சட்டத்தை இயற்றிய முதன்மை மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

மாவட்டக் கழகம் என்ற அமைப்பு தங்கள் அதிகாரங்களை முறையற்ற வழிகளில் கையாண்டதாலும், மக்களிடையே செல்வாக்கை இழந்து மக்களின் நலன்களில் அக்கறை காட்டாத அமைப்பாகச் செயல்பட்டதாலும் 1961-ஆம் ஆண்டு முதல் தேவையில்லையென்று சட்டமியற்றப்பட்டது.

தற்போது தமிழ்நாட்டில் இரண்டு நிலை (Two Tier) ஊராட்சி நிர்வாக முறை மட்டுமே உள்ளது. ஊராட்சிகளும் ஊராட்சி ஒன்றியங்களும் வட்டார அளவில் செயலாற்றுகின்றன. மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகவும், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நகராட்சித் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட மாவட்ட வளர்ச்சி மன்றம் இரண்டாவது நிலையாகச் செயல்படுகின்றது.

எங்கள் அரசு 1989-ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பு ஏற்ற உடனேயே தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி அமைப்புகளுக்கு நிதி ஆதாரங்களைப் பெருக்கித் தருவது, அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் உரிய அளவில் வழங்குவது, அரசின் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது போன்ற திண்ணிய நடவடிக்கைகளை மேற்கொண்டது.

1989-ஆம் ஆண்டில் ஊராட்சி மற்றும் நகராட்சிச் சட்டங்களில் விரிவான முறையில் திருத்தங்கள் பல இயற்றப்பட்டன. அனைத்து உள்ளாட்சி நிறுவனங்களின் பதவிக்காலம் 5 ஆண்டுகளாக நிர்ணயிக்கப்பட்டது. இந்த உள்ளாட்சி அமைப்புக்களின் பதவிக்காலமான 5 ஆண்டுகள் நிறைவடைவதற்கு முன்பான 6 மாத காலத்திற்குள், தேர்தல் நடத்தப்பட வேண்டுமென ஊராட்சி சட்டங்களில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் தேர்தலில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டோர் ஏற்கெனவே பதவி வகிப்போரின் பதவிக்காலம் முடிந்த உடனேயே காலதாமதம் இல்லாமல் பதவியேற்பதற்கு வசதி உண்டாகிறது. இதுபோன்ற திருத்தத்தை நகராட்சிச் சட்டங்களிலும் கொண்டு வர முடிவு செய்துள்ளோம். ஊராட்சி அமைப்புகளின் கால அளவினை நீட்டிக்கச் செய்யும் அரசின் அதிகாரம் திரும்பப் பெறப்பட்டுள்ளது.

அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் சுதந்திரமாகச் செயல்படுவதற்கு ஏற்றவகையில் தேவைப்பட்ட அதிகாரங்கள், ஊராட்சி ஒன்றியம் மற்றும் நகராட்சிகளுக்கு வழங்கிடும் வகையில் சட்டத் திருத்தங்கள் செய்யப்பட்டன. பல்வேறு துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டப் பணிகளைச் செயலாக்குதல், நடைமுறைப்படுத்துதல், ஆய்வு செய்தல், கண்காணித்தல் ஆகிய பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியக்குழுக்களுக்கு வழங்குவதற்கு ஊராட்சிச் சட்டத்தின் புதிய பிரிவு ஒன்று வகை செய்கிறது. நகராட்சி மற்றும் மாநகராட்சிச் சட்டங்களிலும் இத்திருத்தங்கள் கொண்டு வரப்பட உள்ளன.

ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் நிதி நிலைமைகளை ஆராய்ந்து, அவைகளின் நிதி ஆதாரங்களைச் செம்மைப்படுத்திக் கொள்வதற்கான பரிந்துரைகளைச் செய்யும் பொருட்டு ஐந்தாண்டுக்கு ஒரு முறை வல்லுநர் குழு ஒன்று அமைப்பதற்கு வகை செய்யும் விதத்தில் ஊராட்சிச் சட்டத்தில் மற்றும் ஒரு புதிய பிரிவு தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் குழு ஒன்று ஏற்கெனவே அமைக்கப்பட்டு, அது தனது அறிக்கையை இவ்வாண்டு செப்டம்பர் திங்கள் 30-ஆம் நாளுக்குள் அரசிடம் அளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. நகராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்கும் இவ்வாறு ஒரு வல்லுநர் குழு அமைக்க சட்டத்திருத்தங்கள் கொண்டு வர முடிவு செய்துள்ளோம்.

இந்தக் கூட்டத்திற்கான அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை ஒப்படைப்பது, தனியிட ஒதுக்கீடு செய்தல், உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களின் கால அளவு போன்ற திருத்தங்கள் ஏற்கெனவே எங்கள் மாநில சட்டங்களில் கொண்டு வரப்பட்டுள்ளன. உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்துவதற்காக எங்கள் அரசின் உறுதியான ஈடுபாட்டினை எடுத்துக் காட்டவே நான் இவற்றைக் கூறினேன். இவற்றை அந்தந்த மாநிலங்களிடமே விட்டுவிட வேண்டும் என்பதே எங்கள் கருத்தாகும்.

மேலும், தற்போது பரிந்துரை செய்யப்பட்ட அரசியலமைப்புச் சட்ட மாற்றங்களில் சில மாநில நிர்வாகத்தின் கீழ் வர வேண்டியவையாகும். உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்த பிரச்சினைகள் ஒவ்வொரு மாநிலத்திற்கிடையேயும் மாறுபட்டவைகளாக உள்ளன. மாநிலங்களுக்கிடையே சமூக அமைப்பு. அரசியல் தோற்றம், உள்ளாட்சிப் பகுதிகளில் உள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் ஆகியவைகளும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவையாக உள்ளன. குறிப்பாக, தற்போது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திருத்தத்திற்காகத் தெரிவிக்கப்பட்டுள்ள சில பரிந்துரைகள் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பொருந்தாது.

எனவே, மாநிலங்களில் உள்ள ஜனநாயக அமைப்புகளின் வளர்ச்சிக்குப் பொருந்தாத, தேவையில்லாத மாற்றங்களை எல்லாம் வலுக்கட்டாயமாகக் கொண்டு வரும் வகையில் மத்திய அரசின் அதிகாரங்கள் மிகைப்படுத்துவது கூடாது.

தற்போது குறிப்பிட்ட எண்ணிக்கையிலுள்ள கிராமங்கள் மற்றும் குக்கிராமங்கள் ஒரு ஊராட்சி மன்றத்தின் ஆளுகைக்குட்பட்டவைகளாக இருப்பதால், திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஏற்ற வகையில் உள்ளன. எனவே, இப்போது சட்டத் திருத்தத்தில் கூறப்பட்டுள்ளவாறு கிராமத்தின் வாக்குரிமை பெற்றவர்களைக் கொண்ட 'கிராம சபா' என்ற அமைப்பு, இதன் பொருட்டு தேவையில்லாதது மட்டுமின்றி, எளிதில் நிர்வகிக்கவும் முடியாததாகவும் அமைந்துவிடும்.

தமிழ்நாட்டில் பிரதிநிதித்துவத் தன்மை கொண்ட ஊராட்சி மன்றமே முடிவுகளை எடுக்கிறது. எனவே, ''கிராம சபா'' என்னும் கோட்பாட்டை நாங்கள் ஏற்கவில்லை.

ஊராட்சிகள் தவிர மற்ற அமைப்புகளிலும் நேரடித் தேர்தல் மூலம் 50 சதவிகிதத்திற்குக்குறையாமல் உறுப்பினர்களைச் சேர்ப்பது என்னும் கருத்து, நிர்வாகம் மற்றும் செயலாக்கத்தில் ஏராளமான பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடும். தமிழ்நாட்டில் கிராம அளவிலான ஊராட்சி மன்றங்

## ஓசூர் டி.வி.எஸ். சுசுகி ஆலை மீண்டும் திறக்கப்பட்டது.

**தருமபுரி மாவட்டம், ஒசூரில், டி.வி.எஸ். சுசுகி தொழிற்சாலை ஜூன் மாதம் 4-ஆம் தேதியன்று திறக்கப்பட்டது. இத்தொழில் தகராறு சம்பந்தமாய் பல்வேறு கட்டங்களில் அதிகாரிகள் முன்னிலையில், இரண்டு, மூன்று முறை பேச்சு வார்த்தை நடந்தது. இதற்கிடையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலையிட்டு ஆலோசனையும், அறிவுரையும் கூறினார். 29.5.'90 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்னிலையில் இறுதிக் கட்டப் பேச்சுவார்த்தை நடைபெற்று, அதன் வாயிலாக உடன்பாடு ஏற்பட்டது.**

## அம்பேத்கர் நூற்றாண்டு



உலகத்திலுள்ள எல்லாமே மாறுதலுக்கு உட்பட்டதுதான். சமுதாயமேயானாலும் சரி, தனிப்பட்ட மனிதனேயானாலும் சரி; காலத்தோடும் கால மாற்றத்தோடும் சேர்ந்து இணைந்து செல்லக்கூடிய மனப்பக்குவம் பெற வேண்டும். அதுவே உண்மையான நாகரிகம் ஆகும்.

நம்மை நாமே உயர்த்திக்கொள்ள வேண்டும். சுயமாக வாழ்வது எப்படி என்று கற்றுக்கொள்ள வேண்டும். தன்மானம் உடையவர்களாக வாழ வேண்டும். நாமாக முயற்சிசெய்து நம் அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். இவற்றைச் செய்தால், நாம் உயர்வது உறுதி''.

“சுயமரியாதையில்லாமல் வாழ்வதும், வாழ நினைப்பதும் மிகப் பெரிய அவமானமாகும். ஒவ்வொருவரது வாழ்க்கைக்கும் மிக முக்கியமான ஓர் அம்சமே சுயமரியாதை. சுயமரியாதையோடு நாம் ஒவ்வொருவரும் நெஞ்சை நிமிர்த்தி வாழவேண்டும்.

களுக்கும், கோட்ட அளவிலான ஊராட்சி ஒன்றியங்களுக்கும் இடையே நேரடித் தொடர்பு உண்டு. இது கிராமங்களுடைய கோரிக்கைகளை ஊராட்சி ஒன்றியக் குழுவில் எடுத்துரைக்கவும், ஒன்றியத் திட்டங்களை அவர்களது கிராமங்களில் நிறைவேற்றவும், ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு உரிமையையும், பொறுப்பினையும் அளிக்கிறது. ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கு நேரடித் தேர்தல் மூலம் சில உறுப்பினர்களைத் தேர்வு செய்யலாம் என்று பரிந்துரை செய்யப்பட்டுள்ள திருத்தமானது, மேற்கூறிய ஊராட்சி மன்றங்களுக்கும் ஒன்றியங்களுக்குமிடையே உள்ள நெருங்கிய தொடர்பைத் துண்டித்துவிடும் என்பதால் இந்தக் கருத்தை ஏற்கவியலாது.

அனைத்து உள்ளாட்சி நிறுவனங்களிலும், பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கும் இடஒதுக்கீடு செய்வதை வரவேற்கிறோம். ஊராட்சி மன்றம், மாநகராட்சிகளில் பெண்களுக்காக 30 சதவிகிதமும், ஊராட்சிகளில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்காகப் போதுமான அளவிலும், மாநகராட்சிகளில் அவ்வினத்தவர்களின் மக்கட்தொகை விழுக்காடுக்கேற்பவும் ஏற்கெனவே நாங்கள் இட ஒதுக்கீடு செய்ய சட்ட திருத்தங்கள் கொண்டு வந்துள்ளோம். நகராட்சிகள் சட்டத்திலும் இவ்வாறு செய்ய சட்டத் திருத்தங்கள் கொண்டு வர முடிவு செய்துள்ளோம். இருப்பினும் நகராட்சி தலைவர் பதவிகளில் தனியிட ஒதுக்கீடு செய்தல், மற்றும் பின் தங்கியவர்களுக்கும் தனியிட ஒதுக்கீடு செய்தல் போன்றவைகளைப் பொறுத்தமட்டில் அந்தந்த மாநிலங்களே முடிவு செய்யும்படி விட்டுவிட வேண்டும் என்று கருதுகிறோம். உள்ளாட்சித் தேர்தல்கள் தமிழ்நாட்டில் தலைமைச் செயலகத்தின் சம்பந்தப்பட்ட துறைகள் மேற்பார்வையில் நடைபெறுகின்றன. இதுகுறித்து, எந்தக் குற்றச்சாட்டும் இதுவரை வந்ததில்லை.

எனவே, இதற்காகத் தனியாக ஒரு தேர்தல் ஆணையம் வேண்டும் என்பது தேவையில்லை.

இதைப்போல, பெரிய நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் வார்டு கமிட்டி அமைத்தல், மாநகராட்சிகளில் பகுதிக்குழு அமைத்தல், உள்ளாட்சி நிறுவனங்களுக்கு நிதிக்குழு அமைத்தல் போன்றவற்றை மாநில அரசின் முடிவுக்கு விட்டுவிடுவதே நல்லது என்பது எங்களது கருத்தாகும். மற்ற நிர்வாக அமைப்புகளில் கொண்டு வர விரும்பும் மாறுதல்கள், புதிய குழுக்கள் அமைத்தல் போன்றவைகளை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.

இறுதியாக மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கும், இங்கு குழுமியுள்ள அனைவருக்கும் நான் உறுதியளிக்க விரும்புவது என்னவெனில் உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்த வேண்டும் என்ற ஆர்வத்தில் எமது அரசு ஏனைய எந்த அரசுக்கும் பின்தங்கியதல்ல.

அதே நேரத்தில், நாடு முழுமைக்குமாக ஒரே அளவாக வரையறுக்கப்பட்டவாறில்லாமல், அந்தந்த மாநிலங்களின் கலாச்சாரம் மற்றும் சூழ்நிலைக்கேற்ற வகையில், உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்தும் பொறுப்பை மாநிலங்களுக்கே விட்டுவிட வேண்டும் என்பதில் மற்றவர்களைப் போலவே நாங்களும் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கிறோம்.

இந்த உணர்வின் அடிப்படையில் தான், மாநிலங்கள் நிர்வகிக்கக் கூடிய பொருள்களில் எந்த ஒரு அரசியல் அமைப்புத் திருத்தமும் கொண்டு வருவதை நாங்கள் ஏற்க இயலவில்லை. ஒவ்வொரு மாநிலத்திலும் நிலவும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, அவர்களே தேர்வு செய்து ஏற்றுக் கொள்ளும் வகையில், விரிவான மாதிரி வழிமுறைகளைப் பற்றி மட்டுமே மாநிலங்களின் கருத்தினை மத்திய அரசு கேட்டறிய வேண்டும் என்பது எங்கள் கருத்தாகும்.

**புதுடெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர் மாநாட்டில் 11.6.90 அன்று ஆற்றிய உரை.**

# For
# Quality, Strength and Durability

SANKAR
I C
CEMENT

**THE INDIA CEMENTS LIMITED,**

827, ANNA SALAI, MADRAS-600002.

**FACTORIES:**

Sankarnagar, Nellai - Kattabomman District
Sankaridrug, Salem District.

# இராமநாதபுரம் மாவட்டத்தில்...

இராமநாதபுரம் மாவட்டத்தில் 1990-91-ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டம் 11 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. ரூ.7 இலட்சம் மானியம் இத்திட்டத்தில் வேளாண்மைத் துறையின் மூலம் வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்திற்கு 100 எக்டேர் பரப்பில் 14 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, மொத்தம் 1400 எக்டேரில் மானாவாரிப் பயிர்கள் சாகுபடிக்கு மானியம் வழங்கப்பட உள்ளது.

இராமநாதபுரம்- வேளாண் கோட்டத்தில் காவனூர், திருஉத்தரகோசமங்கை மற்றும் வாலாந்தரவை ஆகிய மூன்று கிராமங்களும், திருவாடாணை வேளாண்மைக் கோட்டத்தில் புல்லமடை, கருங்குடி மற்றும் கடம்பாக்குடி ஆகிய மூன்று கிராமங்களும், பரமக்குடி வேளாண் கோட்டத்தில் இராஜக்கல்பட்டி, அக்ரமேசி, மஞ்சூர் மற்றும் எஸ். கொடிக்குளம் ஆகிய நான்கு கிராமங்களும், கமுதி வேளாண் கோட்டத்தில் தேரிருவேலி, கீழச்சிறுபோது, நந்திசேரி மற்றும் திருமாலுகந்தான் கோட்டை ஆகிய நான்கு கிராமங்களும் அடங்கிய 14 கிராமங்கள் நடப்பு ஆண்டில் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டத்தில் மானாவாரிப் பயிர்களில் மகசூலைப் பெருக்கிடச் சிறப்புத்தொழில் நுட்பங்களைக் கடைப்பிடிக்க விவசாயிகளிடம் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட உள்ளன.

மழை நீரை மண்ணில் நிலை நிறுத்திட, கோடை உழவு செய்தல், கட்டுப்பாத்திகள் அமைத்தல், தாவரத் தடுப்பு அமைத்தல், ஆழச்சால் அகலப் பாத்தி அமைத்தல் போன்ற தொழில் நுட்பங்களைக் கடைப்பிடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பருவத்தில் பெய்யும் மழையினை முழுவதுமாகப் பயன்படுத்திட முன் பருவ விதைப்பு மேற்கொள்ளவும், மகசூலைப் பெருக்கிட அடிவுரமாக ஊட்ட மேற்றிய தொழு உரமிடவும், மேலுரமிடவும், ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளவும் இத்திட்டத்தில் மானியம் வழங்கப்பட்டு எல்லா விவசாயிகளும் கடைப்பிடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தில் விவசாயிகளில் வருவாய் உயர்ந்திட இருபோக சாகுபடி, தீவனப்பயிர்கள் சாகுபடி, ஊடு பயிர் சாகுபடி மற்றும் பயன் தரும் மரக்கன்றுகள் நடவு செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளன.

ஒருங்கிணைந்த மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தேர்வு செய்யப்பட்டுள்ள கிராமங்களில் 100 எக்டேர் பரப்பிற்கு அடியிற் குறிப்பிட்டுள்ள விவரப்படி, விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

1. கோடை உழவு ரூ. 180/எக்டேர்
2. ஊட்டமேற்றிய தொழு உரமிடுதல் ரூ. 60/எக்டேர்
3. இருபோக சாகுபடிக்கு விதை மற்றும் உயிர் உரங்களுக்கு ரூ. 50/எக்டேர்.
4. தீவனப் பயிர்கள் சாகுபடி ரூ. 50/எக்டேர்.
5. ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்புக் கருவிகள் ரூ. 50/எக்டேர்
6. தழைச் சத்து மேலுரமிடுதல் ரூ. 35/எக்டேர்

இத்திட்டத்தில் தேர்வு செய்துள்ள கிராமம் ஒவ்வொன்றிலும் 50 விவசாயிகள் மற்றும் சுற்றியுள்ள



பகுதிகளில் 50 விவசாயிகள் வீதம் 100 விவசாயிகளைத் தேர்வு செய்து, ஒவ்வொரு 100 எக்டேர் பகுதியிலும் மானாவாரிச் சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றி பயிற்சியளிக்கப் படவுள்ளது.

## தொழில் மையத்தின் பணிகள்

இம்மாவட்டத்தில் உள்ள தொழில் மையம் சிறு தொழில் ஊக்குவிப்பு முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

தொழில் முனைவோருக்கு இம் மையம் அனைத்து உதவிகளையும் செய்து தற்காலிகப் பதிவுச் சான்றிதழ்களை வழங்கியுள்ளது. 1989-90-ஆம் ஆண்டில் 491 தொழில் முனைவோருக்குத் தற்காலிகச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இது தவிர தங்களுடைய தொழிலைத் துவங்கி விட்டவர்களுக்கு அரசு வழங்கும் சலுகைகள் தொடர்ந்து பெறுவதற்கு ஏதுவாக நிரந்தரப் பதிவுச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. 1989-90-ஆம் ஆண்டில் 164 சிறு தொழில் நிரந்தரச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்தில் 31.3.90 முடிய 939 நிரந்தரச்சான்றிதழ்கள்வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கைத்திறன் விளைஞர்கள் மற்றும் குடிசைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் பற்றி கணக்கெடுப்பு எடுத்து சான்றிதழ்கள் வழங்கி அவர்கள் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கடனுதவி பெற வழிவகைகள் செய்யப்பட்டன. 1989-90-ஆம் ஆண்டில் இந்த இனத்தில் 587 பேருக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்தியப் பிரதமர் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், பத்தாம் வகுப்பு படித்து தேறியுள்ள 18 முதல் 55 வயது வரம்பிற்குள் உள்ள வேலையில்லாமல் உள்ளவர்களுக்கு சுய வேலை வாய்ப்புப் பெற தொழிலகங்கள் அமைக்கக் கடன் உதவி பெற இம்மையம் வழிவகைகள் செய்து வருகின்றது. 1989-90-ஆம் ஆண்டில் 424 இளைஞர்களுக்குக் கடன் உதவி வழங்க தேசிய வங்கிகளுக்குச் சிபாரிசு செய்யப்பட்டதில் 170 இளைஞர்களுக்கு ரூ.25.14 இலட்சம் கடன் உதவி வழங்கப் பட்டுள்ளது.

ஊரகத் தொழில் வளர்ச்சிக்காக மிகக் குறைந்த வட்டி விகிதமான 6¼% விழுக்காடு வட்டி விகிதத்தில் விதைப் பணமாகக் கடன் உதவி வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டில் இரண்டு தொழிலகங்களுக்கு ரூ.50,000/ கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

9.5.88-க்குப் பின்னர் தொடங்கப்பட்ட புதிய தொழிலகங்களுக்கு விற்பனை வரி மறுதளிப்பு அளித்து வட்டியில்லாக் கடனாக வழங்கப்படுகின்றது. கடந்த ஆண்டில் 4 தொழில்களுக்கு ரூ.1.30 இலட்சம் கடனாக வழங்கப்பட்டது.

கிராமக் கைவினைஞர் திட்டத்தின் கீழ், கிராமப்புற இளைஞர்களுக்கு அரசு மற்றும் தனியார் பயிற்சி நிலையங்களில் ஆறு மாதக் காலம் தொழில் திறன் அடைய பயிற்சி அளிக்கப்படுகின்றது. பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படுகின்றது. கடந்த ஆண்டில் 10 கைவினைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இத்திட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கும், பெண்களுக்கும் முன்னுரிமை வழங்கப் படுகின்றது.

சிறு தொழிலகங்கள் தாங்கள் தொழில்களைத் தொடர்ந்து நடத்துவதில் அரசுத்துறைகளில் அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண "ஒரு ஜன்னல் பொதுக் கருத்துக் குழு" என்ற அமைப்பு, மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு இயங்கி வருகின்றது. கடந்த ஆண்டு 12 கூட்டங்கள் நடத்தப்பட்டு 25 விண்ணப்பங்களுக்கு முடிவு காணப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தில் உள்ள தொழில் முனைவோர்களை ஊக்குவித்து அவர்களுக்கு அரசு வழங்கும் சலுகைகளைத் தொழில் தொடங்க ஊக்குவிப்பு முகாம்கள் 11 ஊராட்சி ஒன்றியங்களில் மற்றும் நகராட்சியிலும் 15 இடங்களில் முகாம் நடத்தப்பட்டு, 125 தொழில் முனைவோர்கள் அடையாளங் கண்டு தற்காலிகச் சான்றிதழ்கள் வழங்கப் பட்டுள்ளன.

உ. இரவீந்திரன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
இராமநாதபுர மாவட்டம்

## கொத்தடிமைகள் மீட்பு

மத்திய பிரதேச மாநிலத்தில் கல் உடைக்கும் கொத்தடிமைகளாக இருந்தவர்கள், தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சாரங்கி முயற்சியால் மீட்கப்பட்டு தங்கள் சொந்த கிராமங்களுக்கு திரும்பினர்.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் விருத்தாசலம் வருவாய்க் கோட்டத்தைச் சேர்ந்த திரு. எஸ்.வி. பாளையம், மலைக்கோட்டாலம், உலகியநல்லூர், ஆலத்தூர் கிராமங்களைச் சேர்ந்தவர்கள் 20 ஆண்டுகளுக்கு மேலாகக் கொத்தடிமைகளாக மத்தியப் பிரதேச மாநிலத்தில் இருந்து தொல்லைப்பட்டனர். இது தொடர்பாக, தங்கராசு என்பவர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மனு கொடுத்தார்.

திரு. தங்கராசு ஏற்கெனவே போபாலில் கொத்தடிமைத் தளையில் இருந்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, விடுதலை ஆனவர். அதன் அடிப்படையில் அவர்களை விடுவித்து அழைத்து வர ஏற்பாடு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிட்டார்.

# செங்கை-அண்ணா மாவட்டத்தில் தொழில் வளர்ச்சிப் பணிகள்

செங்கை-அண்ணா மாவட்டத்தில், மாவட்டத் தொழில் மையம் கடந்த நிதி ஆண்டில் தொழில் வளர்ச்சியைப் பெருக்கிட குறிப்பிடத்தக்க சாதனை புரிந்துள்ளது.

இலாபகரமாக செயல்படக்கூடிய தொழில் திட்டங்களைத் தயாரித்தல், தொழில்களைத் துவக்க வேண்டிய உரிமங்கள் பெற ஆணை செய்தல், வேண்டிய மூலப்பொருட்களைக் குறித்த காலத்தில், குறித்த விலையில் வழங்குதல், தொழில் திறம்படச் செயல்பட உதவும் வகையில் அதற்குத் தக்க தொழில் நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துவதில் ஆலோசனைகளைத் தக்க தருணத்தில் வழங்கி, போதுமான நிதியுதவி கிடைக்கச் செய்தல், தயாரிக்கப்பட்ட பொருட்களை விற்பதற்கு உதவி செய்தல் முதலான எல்லாப் பணிகளிலும் இம்மாவட்டம் சாதனை படைத்துள்ளது.

1989-90 நிதியாண்டில், புதிதாகத் துவங்கப்போகும் 4,143 தொழில் நிறுவனங்களுக்குத் தற்காலிக சிறுதொழில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு, நிதி நிறுவனங்களிடமிருந்து நிதிபெற்றுத் தொழில் தொடங்க அனைத்து உதவிகளும் செய்யப்பட்டுள்ளன.

கிராமியக் கடன் திட்டத்தின் கீழ் 1989-90-இல் 10 நபர்களுக்கு விதைப் பணம் கட்டுவதற்கு ரூ.2.42 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. கச்சாப் பொருட்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்கு இந்த நிதியாண்டில் 55-நிறுவனங்களுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேலும் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் உள்ள மூலப்பொருட்கள் பெற 186 மனுக்கள் பரிசீலித்துப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் 31.3.90 வரையில் 11,135 சிறுதொழில்கள் தொடங்க, நிரந்தர சிறுதொழில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிதியாண்டில் மட்டும் 1,327 நிரந்தர. சிறு தொழில்கள் தொடங்க சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

1989-90-இல் 25-தொழிலகங்களுக்கு வட்டியில்லாத விற்பனை வரிக்கடனாக ரூ.40.52 இலட்சம் வழங்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் பின்தங்கிய வட்டங்களாகிய பொன்னேரி, திருத்தணி, பள்ளிப்பட்டு, காஞ்சிபுரம், ஊத்துக்கோட்டை, உத்திரமேரூர், செய்யூர் மற்றும் மதுராந்தகம் ஆகிய வட்டங்களில் தொடங்கப்படும் சிறுதொழில் நிறுவனங்களுக்குப் பதினைந்து விழுக்காடு அல்லது ரூ.15 இலட்சத்திற்கு மேற்படாமலும் மாநில அரசு முதலீட்டு மானியம் வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் இந்த நிதியாண்டில் 58 தொழிலகங்களுக்கு ரூ.18.34 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க, 13-தொழில் நிறுவனங்களுக்கு ரூ.2.50 இலட்சம் மின்சார மானியமாக இந்த நிதியாண்டில் வழங்கப்பட்டுள்ளது. ஐ.எஸ்.ஐ. தரச் சான்றிதழ் வழங்கிய நிறுவனங்களுக்கு ஊக்குவிப்பு மானியமாக 13-நிறுவனங்களுக்கு ரூ.31,800 வழங்கப்பட்டுள்ளது.

நலிந்த தொழிற்சாலைகளுக்கு உதவி செய்தல் என்ற திட்டத்தின்கீழ், 6-நிறுவனங்களுக்கு ரூ.1.90 இலட்சம் கடன் உதவி அளிக்கப்பட்டு அந்த நிறுவனங்களுக்குப் புனர் வாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

படித்த வேலையில்லா இளைஞர்களுக்குச் சுயவேலைவாய்ப்பு ஏற்படுத்தும் நோக்கோடு, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் உதவியுடன் இந்த நிதியாண்டில் 1,072 படித்த இளைஞர்களுக்கு வங்கியின் மூலம் கடன் அனுமதி வழங்கப்பட்டு 31.3.90 வரையில் 605 நபர்களுக்கு ரூ.123.15 இலட்சம் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 467 இளைஞர்களுக்கு 1990-91-ஆம் ஆண்டில் கடன் தொகை வழங்கப்படவுள்ளது.

மேலும், சிறுதொழில் துவங்க முனைவோர்களுக்குக் கிராமப்புறங்களில் கூட்டுறவு முறையில் சங்கங்கள் அமைக்கவும், தொழில் நடத்த அனைத்து உதவிகளும் வழங்கப்படுகின்றன. தொழில் வளர்ச்சிக்கு வழி எங்கெல்லாம் இருக்கின்றதோ அங்கெல்லாம் தொழில் கடன்களை சிட்கோ மூலம் வழங்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வழங்கப்படுகின்றன.

செங்கை-அண்ணா மாவட்டத்தில் மாவட்டத் தொழில் மையம், வங்கிகள், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம் ஆகியவற்றின் மூலம் 1989-90ஆம் ஆண்டில் 1883 கிராமக் கைவினைஞர்களுக்கு ரூ.95.82 இலட்சமும், 2001-குடிசைத் தொழில் புரிவோர்களுக்கு ரூ.136.07 இலட்சமும், 3,319 சிறுதொழில் நிறுவனங்களுக்கு ரூ.3,608.65 இலட்சமுபு, 106 நிறுவனங்களுக்கு மாவட்டத் தொழில் மையம் கடன், நிதியுதவி மான்யமாக ரூ.63.78 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.3,904.32 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டு தொழில்கள் வளர பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிறுதொழில் நிறுவனங்களின் மூலமாகவும், குடிசைத் தொழில் கைவினைத் தொழில் நிறுவனங்கள் மற்றும் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழும் 1989-90ஆம் ஆண்டில் வேலைவாய்ப்புப் பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை 14,423 பேர் என்பது குறிப்பிடத் தக்கது.

திரு. பா. நாராயணமூர்த்தி
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்,
செங்கை-அண்ணா மாவட்டம்.

# Hotel Rajam

## NAGERCOIL

(The First Three Star Standard Hotel in Kanyakumari Dt.,)

**Centrally located, the Hotel is a real boon to Tourists & Businessmen visiting this part of the Country.**



**FACILITIES**

* 32 Well-furnished A/C & Non A/C Rooms
* Exclusive Luxury Suites
* Telephone, Shower, Hot & Cold Water, Channel Music & Colour TV in Rooms.
* Posh Air-conditioned Restaurant.
* Cosy AC Permit Room
* Colourful TV Lounge
* Large Conference Hall (To seat 1000) for Weddings, Functions & Conferences
* Mini Conference Hall (To seat 250)
* Roof Garden for pleasant Evening Functions.
* Telex facility
* Travel Counter to arrange Sight seeing Tours etc.,
* Shops displaying Tourists' requisites
* Express Laundry Service
* Exclusive Car-parking area.
* And many more facilities that a Three Star Hotel can ever dream of offering.

**WE ARE CLOSE TO**

**KANYAKUMARI** (Land's End) Just 20 mts. drive.
**SUCHINDRAM** (The famous Temple Town) Just 10mts. drive.
**VATTAKKOTTAI** (The exotic Sea-side Fort)
**PADMANABHAPURAM** (The magnificent Palace Complex of ancient Rulers)
**TRIVANDRUM** (The enchanting City of Kerala Culture & Art)
**KOVALAM BEACH** (The Beach Resort par excellence)
And many more places of immense Tourists' interests.

MEMBER - ASHOK RESERVATION SYSTEM(I.T.D.C.)

**Come – Visit Nagercoil – Stay at Rajam – Go sight seeing, and take back the most pleasant memories of a life time.**

MODERATE TARIFF – COMFORTABLE STAY – DELICIOUS FOOD – COURTEOUS SERVICE

Hotel Rajam, M.S. Road, Vadasery, Nagercoil – 629 001.
Tel. 4581 (10.lines) Grams : 'RAJSTAR' Telex : 436-204-Rajm-IN

Charl.

பாவேந்தர் நூற்றாண்டு:

# பாரதிதாசனின் பண்புகள்




**பு**துவை, மாதா கோயில் தெருவில் பன்னிரண்டு ரூபாய் வாடகையில் சிறு வீடு; தெரு நடையில் அறையொன்று. அதன் கதவிலும், உள் சுவரிலும் பல இடங்களில் - பற்பல கோணங்களில் - எழுதப்பட்டு, இல்லை - கிறுக்கப்பட்டிருக்கும் ''ராஜவேல் அண்ணா'' என்று.

அவ் அறைதான் என் அலுவலகம். வாத்தியார் எழுதும் கவிதைகளைப் பெயர்த்தெழுவது என் 'பிரதான' வேலை !

முதல் முறையாக என்னைப் பார்ப்பவர்களில் ஒரு சிலர், வாத்தியாரைக் கேட்டதுண்டு, ''தம்பி, யார்... உங்க பிள்ளையா ?'' என்று.

புன்சிரிப்புடன் பதில் சொல்வார், ''இல்லை...... எனக்கு ரொம்ப வேண்டியவன்... இங்குதான் இருக்கிறான்... இதோ... பண்ணுருட்டி... சொந்தவூர்'' என்று.

அறிமுகஞ் செய்கையில், பெயரைக் குறிப்பிட நேர்ந்தால் 'ராஜவேல்' என்பாரே தவிர, என்னையழைப்பது அப்படியல்ல. பெரும்பாலும், ''இவனே'' என்றுதான் கூப்பிடுவார்.

இது, 1936-ல் மட்டுமல்ல - இப்பொழுதும் அப்படித்தான்! 1952 பல பேர் மத்தியில் ''இவனே'' என்றால், ''ஏன்?'' என்பவன் நான்தான்.

-நா. இராசவேல்.

''கவி காளமேகம்'' படமெடுக்கப்பட்டது 1939ல், சென்னை அடையாற்றில் படப்பிடிப்பு. பெண்களில் பெரும் பாத்திரம் 'தாசி மோகனா'. இதையேற்று நடித்தவர் எஸ்.பி.எல். தனலட்சுமி. அவருக்குள்ள பல பாடல்களில் 'இராக மாலிகா'வும் ஒன்று. காதற்சுவையுள்ள எண்சீர்விருத்தம் அது. நம் புலவர் ஆக்கியது.

ஒத்திகைக்குப் பின்னொரு நாள், தனலட்சுமியின் முறையீடு கீழ் வருமாறு:- ''அண்ணா... விருத்தம் சிறிது சிக்கலாயுள்ளது; பாடும் போது ......'' புலவர், ''எங்கே உன் பாடத்தைக் கொடு'' என்று வாங்கி, ஒருமுறை அவ்விருத்தத்தைப் பார்வையிட்டார். அண்டையில் 'சாதிக்காய்ப் பெட்டிகள்' அடுக்கப்பட்டிருந்தன. நின்றபடியே, பெட்டி மேல் வைத்து எழுதினார். வினாடியில் பாடத்தைத் திருப்பித் தந்து, ''வேறொன்று எழுதியிருக்கிறேன், இதையும் படித்துப்பார்!'' என்று கூறிக்கொண்டே சென்றுவிட்டார்.

இந்நிகழ்ச்சியைக் கண்டவர்கள் டி.என்.இராமன், பி.எஸ். செட்டியார் உட்பட அநேகர்.

பழைய விருத்தத்தின் கருத்து சிறிதும் மாறாது, எளிய நடையினும் எளிய நடையில், புதிய எண்சீர் விருத்தம்! அப்பொழுதே பாடப் பட்டது. பாடியவர் மகிழ்ந்தது விந்தையல்ல; புலவரின் புலமையைப் போற்றாதார் அங்கொருவர் இல்லை!

* * *

புலவர்க்குத் தமது துணைவியைக் காட்டிலும் - புதல்விகள் மூவரைக் காட்டிலும் - புதல்வன் 'கோபதி' (மன்னர் மன்னன்)யிடந்தான் மிகுந்த 'பாசம்'. 'ஒரே மகன்' என்ற காரணம் போலும்!

'காளமேகம்' படமெடுப்பின் போது, நாளொன்றில் நிகழ்ந்தது உதாரணத்திற்கொன்று:-



'ஈஸ்வர் பாக்' என்ற கட்டிடத்தின் முகப்பில் பெரியதோர் அறை. படஉற்பத்திக் காரியாலயம் அது. அதையொட்டியதோர் உள் அறை. அங்கிருந்து, 'இவனே' என்றொலி கேட்டு, அலுவலகக் கணக்கன் நான் விரைந்து அண்டினேன். ஒரு நிலையில் நிற்காமல், ''தம்பியை... ஏண்டா இவனே... பாருடா அவனை....'' என்றெல்லாம் -கோவையின்றிக் கூறினார் கவிஞர். அவரது முகத்தில் வியர்வைத் துளிகள்; சொல்லில் சிறு தடுமாற்றம். நானும் குழம்பினேன்.

படுத்துள்ள தம்பியின் மார்பையும், நெற்றியையும் தொட்டுப் பார்த்துக் கொண்டே, 'தம்பிக்கொன்றுமில்லை; சிறு காய்ச்சல் தான்... இதோ வர்ரேன்'' என்று சொல்லிக் கொண்டே உட்புறம் ஓடினேன்.

'அமிர்தாஞ்சனத்' துடன் திரும்பினேன்; தடவினேன். அடுத்து, காப்பியைக் கொண்டு வந்தேன்; அருந்த வைத்தேன்.

ஐந்து நிமிடங்களில் தம்பி, தன்னை எதிர்த்து வந்த இருமலைக் களைப்பால் தாங்கியவாறு எழுந்தமர்ந்தான், உடலெல்லாம் வியர்த்தது. அப்பொழுதுதான் புலவரின் முகம் மாறியது; சுருட்டொன்றும் வாயினில் ஏறியது!

* * *

தமது மனைவி, மக்களிடத்தில் என்பதல்ல; பொதுவில் எவரிடத்தும் உள்ளன்புடையவர், கவிஞர். அதிலும், எளியவர்களிடம் இரக்கமுடையவர்; பேரன்புடையவர்.

ஆசிரியராக இருந்தவரை, வெளியூர் சென்றால் ஓரிரு நாட்களிலேயே திரும்ப வேண்டியவர். வினாடியும் வீணாக்காது, நண்பர்கள் பலரையும் ஒரே நாளில் காண்பார். 'தம்மைப் பிறர் வந்து காண வேண்டும்' என்ற 'தலைவர் மனப்பான்மை' அவரிடம் காண்பதரிது. உதாரணத்திற்கொன்று—

சென்னைக் கொருசமயம் வந்திருந்தபோது, பல்லாவரம் புறப்பட்டோம். 'ரயிலடி'யை விட்டு நடந்தோம். ஏறத்தாழ இரண்டு மைலுக்கு மேலும் சென்ற பிறகு - இடையில் ஒரு சிலர் வழி காட்டி விவரம் கூறிய பிறகு - ஒற்றையடிப் பாதையோரம் ஒதுங்கிய 'கூரை வீடு' ஒன்றைக் கண்டோம். காண வேண்டிய தமது முன்னாள் மாணவரையும் கண்டார், ஆசிரியர். பயணத் தொல்லையையும் மறந்தார். நலங்கேட்டு உரையாடினார். சிறு தொகையை வைத்துக்கொள் என்று உதவித்திரும்பினார். வழியெல்லாம் அம்மாணவர் பற்றி, அவரது குடும்பத்தைப் பற்றிக் கூறிவந்தார்; கேட்டுவந்தேன்.

மேலும், எளியவர்க் கிரங்கும் இயல்பினுக்கொன்று—

ஊரில், வீட்டுக் குறட்டின் படிக்கட்டில் 'கைலி' உடையுடன், சுருட்டுப் புகையுடன் அமர்ந்திருப்பார். தெருவே செல்லும் ஒருவர் - வாத்தியார் வீட்டையும் கடந்து சென்றவர் - திடீரெனத் திரும்புவார்.

வாத்தியார் எதிரில், தூண் ஒன்றின் துணையில் நின்று, தலையைச் சொறிந்து கொண்டே சொல்லுவார், ''ஒரு பத்து ரூபா வேணும்.. நாலாந்தேதி சம்பளம் வாங்கியதும்...'' என்று

தரையை அல்லது தெரு வெளியை உற்றுப் பார்த்து புகையை ஒரு முறை விட்டுக் கேட்பார் வாத்தியார், ''பத்து ரூபாயா?'' என்று.

''ஆமாம்'' என்பார் வந்தவர்.

''ஹூம்'' என்ற மூச்சுடன் கூறுவார் கவிஞர், ''பழநியம்மா... அவன் கிட்டே ஒரு பத்து ரூபா கொடுத்தனுப்பு'' என்று.

பின் திரும்பும் நான், அம்மா (கவிஞரின் துணைவியார்) விடம் செல்வேன். அம்மா மெதுவாக என்னிடம், ''எதற்கு?'' என்பார்கள்.

நான் : ''எவருக்கோ கொடுப்பதற்கு !''

தேதி அநேகமாக 28, 29 ஆக இருக்கும். நாட்டில் எங்கும் ''பொது நெருக்கடி'' உலவும் பருவம். வாத்தியார், தமது சம்பளத் தொகையை 'அம்மா'விடம் தந்தது போல் தந்து, உடனுக்குடன் ஐந்து, பத்தாக வாங்கித் தீர்த்துவிட்ட பத்து நாட்களுக்குப்பிறகு, அம்மா என் செய்வது? என்ன சொல்வது?

யாருக்கோ, எதற்கோ, எந்தக் கடன் தீர்க்கவோ, பதுக்கி அல்லது சேமித்து வைத்திருந்த தொகையையோ, எதையோ எப்படியோ தந்தாக வேண்டும். தருவார்கள். 'நிலைமை' முழுதும் அறிந்துள்ள 'இரண்டாங்கெட்டான்' நானும் வாங்கி வருவேன். வந்தவரும் வாங்கிச் செல்வார்!

திடீரெனக் கேட்பவர்க்குத் தடையின்றித் தருவது மட்டுமல்ல; கேட்பதும் அவ்வாறே!

''சென்னைக்குப் போகவேண்டும், பணம் இருக்கா?'' புலவரின் பொது அறிக்கை இது; அதுவும் மாலை ஆறு மணிக்கு மேல்.

மெய்யாகவே கையில் இல்லாதிருந்தால் ''இல்லை'' என்பார்கள் அம்மா.

''சுத்தமா, கொஞ்சங்கூட இல்லையா?'' என்பார் மறுபடியும்.

''செம்பாலடித்த காசு...?'' என்ற பதில் நகைச் சுவையோடு.

''பாப்பா.., தம்பி... உங்க கிட்டக் கூடவா?'' என்ற வேண்டுகோள், அடுத்தபடி!

''எங்க கிட்டே ஏதாம்?''

''நம்மையே கேக்கிறாரப்பா இவரு!'' என்றெல்லாம் மறுமொழிகள் பட்டாளையில்.



அம்மாவுக்குச் சிரிப்பு; வாத்தி யாருக்குந்தான். ஆனால் சுருட்டுப் புகையால் மறைத்துக் கொள்வார்.

''சரி!...எனக்கென்ன?... என் னென்னவோ கேட்டீங்களே.... அதெல்லாம் மெட்ராசிலே...'' என்று புலவரின் முறையீடு புரட்சி யாக மாறும்.

''உ.... ஊம்.... அப்படியின்னா சரி...'' என்று சொல்லிக் குதித் தோடுவர் மக்கள். சேர்த்து வைத்தது மறைத்து வைத்தது எல்லாவற்றையும் 'சல்லி' விடாது கொண்டுவந்து ஒப் படைப்பர். அதோடு, தத்தம் தேவை களைக் குறித்து 'ஜாபிதா'வும் தருவர்.

தேவையை மதிப்பிட்டால் பத்துப் பதினைந்து ரூபாய்க்கு மேலிருக்கும். தொகையை எண்ணினால் நாலைந் துக்குள்ளிருக்கும். மொத்தத்தில் பயணத்திற்கும் போதாது பணம்; என் செய்வார் புலவர்?

சிறிது நேரம் அமைதியாக உலவு வார். திடீரென 'மேஜை'யண்டை வந்து நின்றபடியே சீட்டொன்று எழுதுவார். 'இவனே' என்றென் னிடம் தந்து 'வாங்கி வா' என்பார்.

சிறிதும் தாமதியேன்; தயங்கேன். விரைந்து செல்வேன். வெளியில் வந்தபிறகே சிட்டின் 'தகவல்' உணர் வேன். வேறொன்றுமில்லை - நண்பர் ஒருவருக்கு எழுதியிருப்பார் 'கடன்' கேட்டு! குறித்த நபரும் தவறாது தருவார். சென்னைப் பயணமும் தொடங்கி நிகழும்.

ஆனால்,கடன் தந்த 'பத்தை'யும் கைச்சீட்டு மூலம் கடன் வாங்கிய 'இருபத்தைந்தையும், என் போன்று அடுத்துள்ளவர் தாம் நினைவுபடுத்த வேண்டும். அவ்வளவு மறதி அவருக்கு!

ஒரு சில சமயங்களில், தம்மிடம் பணம் இருப்பதாகவே எண்ணிக் கொண்டு பயணப்பட்டு விடுவார்; 'பஸ், ட்ராம்' முதலானவற்றிலும் அமர்ந்துவிடுவார். நடுப்பாதையில், உடன் செல்வர் தாம் குறிப்பறிந்து 'குட்டை' மறைக்கவேண்டும்!

**நம்** புலவர், வெறும் புலமை மட்டும் நிறைந்து, ஏட்டோடு, எழுத் தோடு நில்லாதவர்; செயலாற்ற வல்லவருங்கூட.கொடுமையைக் காண மறுப்பவர் மட்டுமல்ல; கண்டபோதே கண்டிப்பவர் அவர். எப்படி?

தொடக்கத்தில் குறிப்பிட்ட வாத் தியார் 'வாடகை' வீட்டின் மாடியில் எனக்குப் படுக்கை. நள்ளிரவு.

திடீரென, ''பளார், பளார்!'' என்ற முழக்கம் என்னை எழுப்பியது. விழித்தெழுந்து, துடித்து நின்று வெளியில் நோக்கினேன். நடுத்தெரு வில் இருவர் மத்தியில் வாத்தியார் நிற்கிறார். விரைந்தோடி வந்தேன். அதற்குள், இருவரில் ஒருவரை மேலும் அறைகிறார். அண்டினேன். என்னைப்போலவே விழித்துக்கொண்ட அக்கம் பக்கத்தோர் கூடினர். ''என் னங்க, வாத்தியார்?'' என்றனர்.

''திருட்டு ராஸ்கல் இவன்! நான் பார்த்துக்கொண்டேதான் இருந்தேன். இவன் மெதுவாக வந்தான்; படுப்ப தற்கு இடம் பார்ப்பது போல் நடித்தான்; இவரது பக்கம் படுத் தான்; நானும் கவனித்தேன். மிகவும் நெருங்கி, மெள்ள அவரது வேட்டி முனையின் 'முடிச்சி'யை அவிழ்த் தான்; இவரும் விழித்தார். ஓடிய வனை நானும் பிடித்துக் கொண் டேன்!... ஏண்டா? என்ன சொல்றே'' என்று இறுதியில் ஓர் அறை தரு வதற்குள், கள்வன் கைகூப்பி மன் னிப்புக் கோரினான். வாத்தியார் அவனை விட்டாலும்,கூடியவர் விட வில்லை; கைப்பற்றிக் கொண்டனர்.

இதுமட்டுமல்ல- எதிர்பாராது சட்டத்திற்கு மீறிய துணிவு கொள்வார் புலவர்.

கவிகாளமேகம் கதை, வசனம், பாடல் மூன்றையும் ஆக்கித் தந்தவர் கவிஞர்தாம். பி.எஸ். செட்டியார், நம் புலவரிடத்தில் பற்றுடையவர். இத்தொடர்பில் பாடுபட்டுழைத் தவர். எனவே இவரது விருப்பப் படி, ''வசனம், பாடல் - பாரதிதாசன்'' என்றும்,''கதை - பி.எஸ். செட்டியார்'' என்றும் விளம்பரப்படுத்திக்கொள்ள இசைந்தார் புலவர். ஆனால், நாள டைவில் ''கதை, வசனம் - பி.எஸ். செட்டியார்'' என்று வரத் தொடங் கியது விளம்பரம். ஓரிரு முறைகள் செட்டியாருக்குப் புலவர் எச்சரிக் கையும் செய்தார். பிழை திருந்த வில்லை. தொடர்ந்தும், அப்படியே வந்தது. புலவர் புரட்சிக் கவிஞரா யிற்றே! அலுவலகத்தில் அமர்ந்தபடி செட்டியாரை அழைத்தார்; அவரை எதிர் நிறுத்தி,

''என்ன பி.எஸ்.செட்டி! உனக்குப் பலமுறை சொல்லிவிட்டேன். தொடர்ந்து அப்படியே வருகிறது. இப்போ சொல்றேன்... என் தகவலில் ஜாக்கிரதையாக நடந்துகொள். ஏன் தெரியுமா? - நான் புதுச்சேரிப் பேர்வழி - சுட்டுடுவேன்!'' என்று விளாசினார்.

பிறர் அஞ்சத்தக்க தோற்றம், பீடு நடை, நிமிர்ந்த நோக்கு, கண்டிப் பான பேச்சு - இவையனைத்தும் புலவர் தம் பிறப்புரிமை. பற்றாக் குறைக்கு மீசையும் அலாதி! இந்நிலை யில் வாத்தியாரின் சுட்டு விரலையே ''துப்பாக்கி'' என்று கருதினார் போலும் செட்டியார்!

வாத்தியார் மிக விரைவில் உண்டு எழுவார். குளிப்பது, உடுப்பது, உண்பது முதலான அனைத்திலும் சுறுசுறுப்புள்ளவர்.

விருந்தினரை வரவேற்பதில் வாத்தியார் குடும்பமே சளைப்ப தில்லை. பெரும்பாலும் விருந்தின்றிப் புசிப்பதில்லை. புலவருக்குப் புலால் உணவில்தான் பற்றுதல், காய், கறிகளைக் காட்டிலும்! உள்ளன் போடு எவரையும் வரவேற்பார். போலி உபசரிப்பை என்றும் மேற்கொள்ளார். அவரது அகமும், புறமும் ஒன்றுதான்!

**இ**ரவில் நெடுநேரம் எழுத்தில் அல்லது பேச்சில் ஈடுபட்டிருந்தாலும், விடியற்காலையே விழித்தெழுவார். இரவு கண் விழித்த நேரத்தைக் கணக்கிட்டுப் பிற்பகல் வரையிலும் தூங்கும் வழக்கம் அவருக்கில்லை!

உறக்கத்தில் சிறிது ஒலித்தாலும் விழித்துக் கொள்வார். அது மட்டு மல்ல, ஒவ்வோர் சமயம் சினங்



கொள்வார். பகல உணவுக்குப் பின் சிறிது நேரம் உறங்குவதும் உண்டு.

ஒருநாள், வீட்டில் வளரும் கோழி; தன் கால்களில் கட்டிய கயிறு சிக்கியதால் குதித்ததோடில்லை; கூவியும் விட்டது. அம்மா அதைச் சரிப்படுத்த முயல்கையில் மேலும் கூவியது. வாத்தியார் விழித்துக் கொண்டதோடில்லை; எழுந்தோடி அம்மாவை 'அறைந்து'ம் விட்டார். அம்மா வாய் பேசாது நடுங்கிப் போனார்கள். நாங்கள் கதிகலங்கிப் போனோம்! எப்போதேனும் வாத்தியார் இப்படித்தான்!

சிறிதேனும் அறிமுகமில்லாத ஒருவரை, எவ்வகை விசாரணையுமின்றி முதல் நாளே முழுதாக நம்புவார். பலலாண்டு பழகிய என் போன்றவன் மீதும், பிறர் சொல்வதை நம்பித் திடீரென ஐயுறுவார். அடுத்த நாளே அல்லது மிக விரைவிலேயே ஆராய்ந்து உண்மையைத் தெரிவார். உரியவரிடம், ''நான் நினைத்தது தவறுதான்'' என்றுரைத்து வருந்துவார். பொய்யனை உடனே விலக்குவார்.

'முகத்துக்காக' என்று எதையும் செய்யார். 'சரி'யெனத் தோன்றுவதைத்தான் செய்வார்; சொல்வார்.

அண்மையில், ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் பதவியில் இருக்கையில், திருச்சி வானொலி நிலையத்தில், ரெட்டியார் தலைமையில் கலை நிகழ்ச்சி ஒன்று! அதில் நம் புலவர்க்கும் பங்குண்டு.

ஆனால், அதே நாளில், தில்லையில் 'ஊழியர்' ஒருவரின் திருமணத்தை நடத்தித் தரவே இசைந்தார்.

ரெட்டியார் அவர்களை மதிப்பவர் கவிஞர். என்றாலும், வானொலி மூலம் அன்றைய சேவையைவிடத் திருமண நிகழ்வே பெரிதெனக் கொண்டார்!

கவிஞர் நல்ல ரசிகர். இசை, நாடகம், நடனம், சிற்பம், ஓவியம் முதலான கலைகள் அனைத்திலும் பற்றுதல் உடையவர்; இளைஞர்களிடத்தே மதிப்புடையவர். கலைகளை ஆராய்வதில் கருத்து வேற்றுமை-கட்சி வேற்றுமை துளியும் இல்லாதவர். மாற்றாராயினும் அவர்தம் மாண்பினை, புலமையைப் பாராட்டும் பண்பினர்.

இப்படிப் பற்பல நண்பர்கள் அமையப் பெற்ற வாத்தியார், பாரதிதாசன் காசருமை தெரியாதவர். 'புலமை' ஒன்றுதான் அவரது சொத்து; அவருக்கமைந்த துணிவும், நேர்மையும் அச்சொத்தினைப் பாதுகாக்கும் அரண்கள்!

இனியும், இந்நாட்டுக்குத் தேவையாகும் அவரது கவிதைகள், வெள்ளப் பெருக்கெனப் பாய்ந்திடக் கோருவோமாக!

*(பொன்னி-1951 பாவேந்தர் மலர்)*


வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் இதயங்கனிந்த

நல்வாழ்த்துக்கள்

**மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை லிமிடெட், மேலூர் - 625 106. மதுரை மாவட்டம்**

தந்தி: ''மெல்நூல்''

தொலைபேசி: அலுவலகம்: 242 மேலூர்
தனி அலுவலர்: 241 மேலூர்
தனி அலுவலர்: 43584 மதுரை (இருப்பிடம்)

**தயாராகும் தரமான நூல் ரகங்கள்**

**20 நெ. முதல் 60 நெ. வரை சிட்டம், முறுக்கு மற்றும் கோன் நூல்கள்**

நவீனப்படுத்தப்பட்ட இயந்திரங்களைக் கொண்டு திறமைமிக்க தொழிலாளர்களின்முழு ஒத்துழைப்புடன் தரமான நூல்கள் தயாரிக்கப்படுகின்றன.

தங்களின் நூல் தேவைகளுக்கு எங்களை அணுகவும்.

எஸ்.எஸ். ஜவாஹர் பாபு, எம்.ஏ.,
மாவட்ட வருவாய் அலுவலர்/
தனி அலுவலர்

# பார்த்தோம் படித்தோம்

முதல்வர் கலைஞர் அறிவித்த அடுக் கடுக்கான சலுகைகள்- தொகுப்பு என் போன்ற மாணவர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கின்றன.

—கு. இளங்கோ
குமுக்கோட்டை
(இராமநாதபுரம் மாவட்டம்)

பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழாவினை ஒட்டிய கவிதை என் உள் ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. கவிஞர் சாமி. பழனியப்பன் அவர்களுக்குப் பாராட்டு.

—ப.அ. சண்முகம்
களம்பூர்
(திருவண்ணாமலை
சம்புவராயர் மாவட்டம்)

16.5.90 இதழில் மாணவர் பக்கத்தில் வெளிவந்த அறிவுரை நன்றாக இருந்தது.

—மு. வேதபுரி,
கோட்டுப்பாக்கம்
(திருவண்ணாமலை
சம்புவராயர் மாவட்டம்)

'அம்பேத்கார் அந்தாதி' என்னும் தலைப்பில் கவியரசு இளந்தேவன் எழுதிய கவிதை தேனாய் இனித்தது.

—எம். சேகர்,
தோட்ட நாவல்
(செங்கை-அண்ணா மாவட்டம்)

வளரும் வேளாண்மைப் பகுதியில், தானியங்களைப் பாதுகாக்கும் முறை பற்றிய கட்டுரை பயனுள்ளதாக இருந்தது.

—அஞ்சாலை
கத்திரிசேரி
(செங்கை-அண்ணா மாவட்டம்)

'தொழிலாளர் வர்க்கத்தின் வெற்றிச் சின்னம்'— மே தின நினைவுத் தூண் கட்டுரை பயன்படும்படியாக இருந்தது.

—ஏ. கந்த சுவாமி
திருப்பூர்
(கோயம்புத்தூர் மாவட்டம்)

## மேடைப் பேச்சுக்குப் பயன்படும் 'தமிழரசு'

"தமிழரசு தமிழ், ஆங்கில இதழ்கள் மிக நன்றாக இருக்கின்றன.

"தமிழக அரசு நலத்திட்டங்கள், விழாக்கள், முதல்வர் உரைகள், திட்டப் பணிகள், புள்ளி விவரங்கள் முதலி யவை நன்றாகவும் தெளிவாகவும், மேடைப் பேச்சுக்குப் பயன்படும் வகை யிலும் வெளிவருவது குறித்து தங் களுக்கும் தங்கள் குழுவினருக்கும் என் னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"ஆங்கில இதழும் வெளி மாநில அரசுகளும், மக்களும் தமிழக அரசின் செயல்திட்டங்களைப் புரிந்து கொள் வதற்கு வாய்ப்பாக உள்ளது. மேலும் பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா இதழ் மிக நன்றாக இருந்தது.

"எனக்கே பல விவரங்கள், தங்கள் இதழ் பார்த்த பிறகுதான் தெரிய வந்தன.

"தங்களுக்கு மீண்டும் என் பாராட்டுக்கள்."

—ஈ.ஆர். கிருஷ்ணன்
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
தலைவர்:
சேலம் தமிழ்ச் சங்கம்

பெரியார் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் கட்டுரை மூலம் அரசின் ஆக்கப் பணிகளை அறிய முடிந்தது.

எம்.எஸ். வேலுமணி
கா. மேட்டுப்பாளையம்,
(பெரியார் மாவட்டம்)

'இதய நோயைத் தவிர்ப்போம்' கட்டுரை இதயத்தைத் தொட்டது.

—சு. கவிதா,
வளவனூர்
(தென் ஆர்க்காடு மாவட்டம்)

வேளாண்மைப் பகுதியில், தானியங் களைப் பாதுகாக்கும் முறை பற்றிய கட்டுரையும், இதய நோயைத் தவிர்ப்போம் கட்டுரையும் சிறப்பாகவும், பயனுள்ளதா கவும் இருந்தது.

—வி. வீரராகவன்
(உழவர் ஆய்வு மன்ற அமைப்பாளர்)
கண்ணபிரான்புரம்
(செங்கை-அண்ணா மாவட்டம்)

இதய நோய் பற்றிய கட்டுரை, வரு முன் காத்திட உதவுகிறது.

-ஜெ. கண்ணன்
உ. மேரூர்
(திருச்சிராப்பள்ளி மாவட்டம்)

பாவேந்தர் நூற்றாண்டுத் தொடக்க விழா பற்றிய தமிழ்ப்பித்தனாரின் தொகுப்பு 1.5.90 இதழில் கண்டேன். அருமை. பெற்றோர் ஆசிரியர் கழக வெள்ளி விழாக் காட்சிக் கோலமும், கட்டுரையும் நன்றாக இருந்தது.

—ப. முருகேசபாண்டியன்
கரப்பாடி
(கோவை மாவட்டம்)

## பாவேந்தர் நூற்றாண்டு:



கருத்தூற்று மலையூற்றாய்ப்
பெருக்கெடுக்க வேண்டும்;
கண்டதைமேற் கொண்டெழுதிக்
கட்டுரையாக் குங்கால்
தெருத்தூற்றும் ஊர்தூற்றும்;
தம்முளமே தம்மேல்
சிரிப்பள்ளித் தூற்றும்; நலம்
செந்தமிழ்க்கும் என்னாம்?

# திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

## எளியவர் வாழ்வு ஏற்றம் பெற எமது ஆக்கப் பணிகளில் சில துளிகள்

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் - 1990-91

| | |
|---|---|
| ஒதுக்கப்பட்ட நிதி | ரூ. 248.335 லட்சம் |
| பயன்பெறுவோர் | 7894 பயனாளிகள் |
| கிராமப்புற இளைஞர் சுயவேலைவாய்ப்புப் பயிற்சி பெறுவோர் | 665 இளைஞர்கள் |

**சிறப்பு அம்சம்**

| | |
|---|---|
| 1) தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/பழங்குடியினர் | 50 சதவீதம் ஒதுக்கீடு |
| 2) பெண்களுக்கும், பெண்களைத் தலைவியாகக் கொண்ட குடும்பத்தினருக்கும் | 40 சதவீதம் ஒதுக்கீடு |

### ஜவகர் வேலைவாய்ப்புத்திட்டம் - 1990-91

| | | | |
|---|---|---|---|
| மொத்த நிதி ஒதுக்கீடு | ரூ. | 451.32 | லட்சம் |
| ஆதி திராவிடர்களுக்குத்தொகுப்பு வீடுகள் | | 1700 | |
| தார்ச்சாலை போடுதல் | | 70 | கி.மீ. |
| மெட்டல் சாலைகள் | | 37 | கி.மீ. |
| பள்ளிக்கூடங்களுக்கு கட்டடங்கள் | | 15 | |
| ஊராட்சி மன்றங்களுக்கு கட்டடங்கள் | | 40 | |
| சமூக நலக்காடுகளுக்கு | ரூ. | 20.07 | லட்சம் |
| ஊராட்சிகள் மூலம் செய்யப்படும் பணிகள் | ரூ. | 78.04 | லட்சம் |
| மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம் மூலம் நிறைவேற்றப்படும் பணிகள் | ரூ. | 22.40 | லட்சம் |

**திரு. ஆர். புஹாரில், இ.ஆ.ப.**
கூடுதல் ஆட்சித்தலைவர் (வளர்ச்சி)
மற்றும் திட்ட அலுவலர்.
மா.ஊ.வ.நி., திருநெல்வேலி

**திரு. எஸ். இராசரெத்தினம், இ.ஆ.ப.**
பெருந்தலைவர் மற்றும்
மாவட்ட ஆட்சித்தலைவர்,
மா.ஊ.வ.நி., திருநெல்வேலி

## டோக்கியோ

உலகத்தின் மிகப்பெரிய நகரங்களில் டோக்கியோவும் ஒன்று. ஜப்பானின் தலைநகரமான டோக்கியோவில் 74,621 உணவு விடுதிகள் உள்ளன. இவை தவிர, 2,800 சிற்றுண்டிச் சாலைகள் உள்ளன.

டோக்கியோவில் 37 இலட்சம் மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. டோக்கியோவில் மட்டும் சுமார் ஒரு இலட்சம் டாக்ஸி ஓட்டுபவர்கள் உள்ளனர். 24மணி நேரமும் டாக்ஸிகள் இங்குக் கிடைக்கும். இவை தவிர 50,000 பதிவு செய்யப்பட்ட கார்கள் உள்ளன. மேலும் 40,000 கார்கள் ஜப்பானின் மற்ற நகரங்களில் ஓடுகின்றன.

டோக்கியோவின் மக்கள் தொகை 260 இலட்சம் ஆகும். இதில் 120 இலட்சம் பேர் 65 வயதிற்கு மேற்பட்டவர்கள் என்றாலும் டோக்கியோ ஓர் இளைஞர்களின் நகரமாகவே காட்சி தருகிறது. இங்குள்ளவர்களின் சராசரி வயது முப்பத்தாறு ஆகும்!

உலகத்தின் மிகப்பெரிய சில்லறை நாள் அங்காடிகள் (மார்க்கெட்டுகள்) இங்குள்ளன.

240 திரையரங்குகள் உள்ள இந்த நகரத்தில் 184 கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் உள்ளன. உலகத்தின் மிகப்பெரிய கட்டடங்கள் சில இங்கே உள்ளன. உலகத்தின் மிகப் பணக்கார நாடு ஜப்பான்!

## சிங்கப்பூர்

சிங்கப்பூரின் மக்கள் தொகை சுமார் 25 இலட்சம் ஆகும். பரப்பளவு 620 சதுர கிலோ மீட்டர் ஆகும்.

சிங்கப்பூரில் வெளிநாட்டுப் பயணிகளுக்காக மட்டும் 51 உணவு விடுதிகள் இருந்தன. அவைகளில் 16,440 அறைகள் உள்ளன. இவைதவிர 141 பதிவு செய்யப்பட்ட உணவு விடுதிகளும் இருந்தன. அவற்றில் 300-க்கு மேற்பட்ட அறைகள் உள்ள உணவு விடுதிகள் 27 ஆகும். 100 முதல் 300 வரை அறைகள் உள்ள உணவு விடுதிகள் 19 ஆகும்.

சிங்கப்பூரின் தேசியப் பல்கலைக் கழகத்தில் 6 மில்லியன் டாலரில் கம்ப்யூட்டர்கள் உள்ளன. அந்தப் பல்கலைக்கழக நூல்நிலையத்தில் 12 இலட்சம் நூல்களும், 9,400 மாத, வார, பருவ இதழ்களும் உள்ளன. 'தமிழ் முரசு' என்ற தமிழ் தினசரியும் வெளிவருகிறது.

உலகத்தின் மிகவும் சுத்தமான சுகாதாரமான நகரங்களில் சிங்கப்பூரும் ஒன்று!

—தகவல்: நா. ஜகந்நாதன்



# பலரும் போற்ற வாழ்ந்திடலாம்

- கவிஞர் பூங்கோவன்



எதையும் நன்றாய்த் தெரிந்துகொள்;
இயல்பாய் வாழப் புரிந்துகொள்;
விதைக்கும் விதையே கனியாகும்
விளையும் பயிரே மரமாகும்!

அதையும் இதையும் எண்ணாமல்
அறிவால் நன்மை சேர்த்திடுவாய்
புதிதாம் சிந்தனை பரப்பிடுவாய்
புன்னகை வாழ்வில் நிறைத்திடுவாய்!



அறிவியல், கணிதப் பாடங்கள்,
ஆழ்ந்தே கற்றுத் தேர்ந்திட்டால்,
பொறியியல் வல்லுநர் ஆகிடலாம்;
புதுப்புதுப் தொழிலை வளர்த்திடலாம்!

பொருளியல் கற்றுத் தேர்ந்திட்டால்
பொருளியல் நிபுணர் ஆகிடலாம்;
பொருளா தார வளர்ச்சிக்காய்
புதுப்புதுத் திட்டம் தீட்டிடலாம்!

சட்டக் கல்வி தேர்ந்தெடுத்தால்,
சமமாய் நீதி வழங்கிடலாம்;
பட்ட துன்பம் போக்கிடலாம்;
பலரும் போற்ற வாழ்ந்திடலாம்!






# வேலூர் அரசு அருங்காட்சியகம்

வே. ஜெயராஜ்

காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், வேலூர்.

அருங்காட்சியகம் இன்று கல்வி புகட்டும் கல்விக் களஞ்சியமாகச்செயல்பட்டு வருகிறது. ஒரு நாட்டின் ஒவ்வொரு பகுதியும் அதற்கே உரித்தான சுற்றுப்புறச் சூழல், பண்பாடு, கலை போன்ற தெளிவான சிறந்த பண்புகளைக் கொண்டுள்ளது. இவற்றை, தொடர்புடைய அரும்பொருட்கள், மற்றும் மாதிரிகள் வழி எடுத்தியம்பும் இடமே அருங்காட்சியகமாகும்.

மாவட்டங்கள்தோறும் அருங்காட்சியகங்கள் என்ற முனைப்பில் தமிழ்நாடு அரசு மாவட்டத் தலைமையிடங்களில் அந்தந்த மாவட்ட கலை, பண்பாடு, வரலாறு, சிறப்புக் கூறுகள் ஆகியவை சம்பந்தப்பட்ட பொருட்களைச் சேகரித்து பாதுகாத்து அருங்காட்சியகங்களைத் தொடங்கி வருகிறது. இதன் அடிப்படையில் இது ஐந்தாவதாகும்.

வேலூர் நகரத்தின் மையப்பகுதியிலுள்ள வேலூர் நகராட்சி, தியாகி சனாப் வி.எம். உபயதுல்லா (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்) பேருந்து நிலையத்தை ஒட்டி அமைந்துள்ளது இந்த அருங்காட்சியகம். 1906-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது இந்த அருங்காட்சியகம். 6.9.1985 முதல் பொதுமக்களின் பார்வைக்காகத் திறக்கப்பட்டு, இயங்கி வருகிறது.

இவ்வருங்காட்சியகம் பல நோக்கு அருங்காட்சியகமாகும். இது ஏழு கூடங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. அருங்காட்சியகம் அமைந்துள்ள கட்டிடமே தனது பண்டைய சாயலால் வருவோரை வரவேற்கிறது. அருங்காட்சியக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள

மர, கல் சிற்பங்கள்





ஓவியக் கூடம்

சிற்பத் தோட்டத்தில் கல்சிற்பங்கள், கல்வெட்டுக்கள், பீரங்கிகள் ஆகியவை குறிப்புகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

அருங்காட்சியகத்தின் நுழைவாயிலை ஒட்டி வடஆர்க்காடு (இன்றைய வட ஆர்க்காடு அம்பேத்கர் , திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்கள்) மாவட்டக் கூடம் அமைந்துள்ளது. ஒளியூட்டப் பெற்ற மாவட்ட வரைபடம் ஒன்றும் சிறப்புமிக்க இடங்களின் நிழற்படங்களும் ஒளியூட்டப்பெற்ற படங்களும் இம்மாவட்டச் சிறப்பியல்புகளை விளக்குகின்றன.

இதனையடுத்து, சிற்பக்கூடம் அமைந்துள்ளது. தமிழகச் சிற்பிகளின் கைவண்ணத்தைப் பகரும் தட்சிணாமூர்த்தி, கிருட்டினன் போன்ற மரச்சிற்பங்கள் காட்சியில் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் படிமக்கலை உன்னத நிலையினை அடைந்துள்ளதை எடுத்துக்காட்டும் வண்ணம் சோழர்கால நடராசர், தேவி போன்ற பஞ்சலோகச் சிற்பங்களும், பிற்காலச் சிற்பங்களும் காட்சியில் அமைந்துள்ளன.

இந்தியாவில் பண்டைய காலம்தொட்டு, புழக்கத்தில் இருந்த அச்சுக்குத்திய (புரானா) காசுகள் முதல், இந்திய-ஆங்கிலேய நாணயங்கள் வரை தேர்ந்தெடுக்கப்பட்ட முப்பத்திரண்டு நாணயங்களின் உலோக வார்ப்பு மாதிரிகளும் அவற்றின் வரைபடங்களும், நிழற்படங்களும், தொடர்புடைய அரசர்களின் ஆட்சி எல்லைகளைக் குறிக்கும் வரைபடங்களும் இணைக்கப்பட்டு, இந்திய வரலாறு விளக்கப்பட்டுள்ளது.

அடுத்து, வடஆர்க்காடு அம்பேத்கர் மற்றும் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்களின் தொல்வரலாறு, மரபு இனநூல் ஆகியவை பற்றிய பொருட்கள், மாதிரிகள், நிழற்படங்கள் வழி கூறப்பட்டுள்ளன. இருபது அடி அகலமுள்ள காட்சிப் பெட்டியில் அமைந்துள்ள குன்றுகளின் இயற்கைப் பின்னணித் தோற்றத்தில் காணப்படும் இருளர்கள், மலையாளிகள் மற்றும் இலம்பாடிகளின் கருவிகள், இப்பிரிவின் மனம் கவர் பகுதி எனலாம். இம்மாவட்டத்தைச் சார்ந்த புரிசை என்னும் இடத்தில் சிறப்பாக்கப்பட்ட தெருக்கூத்துக் கலையின் அணிகலன்கள் அடுத்த காட்சிப் பெட்டியில் உள்ளன. காட்டு நாய்க்கன் இனத்தவர்கள் மணமக்களைச் சுமந்து செல்லப் பயன்படுத்திய பல்லக்கு, காட்சியில் இடம் பெற்றுள்ளது.

ஓவியக் கூடத்தில் பொதுவாக, தமிழ்நாட்டின் வளர்கலை வல்லுநர்கள், குறிப்பாக இம்மாவட்டங்களைச் சார்ந்த ஓவியர்கள் தீட்டியுள்ள ஓவியங்கள் கண்கவர் காட்சியாக உள்ளன.

இம்மாவட்டங்கள் பல கைவினைப் பொருட்களுக்குப் பெயர் பெற்றவை என்பதை இங்கு உருவாக்கப்படும் கூடைகள், கரிகிரி வழுவழுப்பான பாண்டங்கள், முடையூர் மாக்கல் சிற்பங்கள், வந்தவாசி கோரைப்பாய், ஆரணிப்பட்டு போன்றவற்றால் தெளிவாக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து வருவது இயற்கையியல் கூடமாகும். இக்கூடத்தில் தாவரவியல் பொருட்கள், பூச்சிகள், வண்டுகள், பறவைகள், ஊர்வன, சங்குகள், தொல்லுயிர்ப் படிவங்கள், பாறைகள், புகைப்படங்கள் ஆகியவை வழியாகத் தாவரவியல், விலங்கியல் மற்றும் புவியியல் சார்ந்த குறிப்புகள் விவரிக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து 20 அடி நீளமும் 10 அடி அகலமும் கொண்ட உருவமாதிரிக் காட்சிப் பெட்டியில் தாவரங்கள் மற்றும் விலங்குகள் ஒன்றையொன்று எங்ஙனம் சார்ந்துள்ளது என்பதும் அவை வசிக்கும் சுற்றுச் சூழலும் மனதை ஈர்க்கும் வண்ணம் சித்தரிக்கப்பட்டுள்ளன. இங்கு போலி உயிரினமாக்கப்பட்ட மிருகங்கள் மற்றும் பறவைகள் மலைப்பாங்கான புதர்க்காட்டுப் பின்னணியில் அமைக்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டங்களின் வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் அரும்பொருட்கள் இனங்கண்டு கொள்ளப்பட்டு, சேகரிக்கப்பட்டு வருகின்றன. சேகரிக்கப்பட்டுள்ள பொருட்களின் மீது ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறப்புக் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. சிறப்புத் தலைப்புகளில் திங்கட் சொற்பொழிவுகள் அருங்காட்சியகத்திலும் அவ்வப்போது கல்லூரிகள், பள்ளிகள் மற்றும் ஆய்வு நிறுவனங்களிலும் சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்தப்படுகின்றன.

வேலூர், அரசு அருங்காட்சியகம் வரலாறு, கலை, பண்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்கும் பாதுகாப்பகமாகவும் கல்வி புகட்டும் கல்விக் களஞ்சியமாகவும் செயல்படுகிறது.

அரசு அருங்காட்சியகம், வேலூர், வெள்ளி, இரண்டாம் சனி, குடியரசு தினம், சுதந்திர தினம், அண்ணல் காந்தியடிகள் பிறந்த தினம் தவிர மற்ற நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்திருக்கும். நுழைவுக் கட்டணமில்லை.

வட ஆர்க்காடு அம்பேத்கர் மற்றும் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்களின் சிறப்பினைக் கண்டு களிக்க அருங்காட்சியகம் நம்மை அழைக்கிறது



# வளரும் வேளாண்மை

### பாமாயில் கெடாது இருக்க...

என்ணெய் விலை ஏறிவரும் இந்நாளில், பெரும்பாலோர் பனை என்ணெய் உபயோகிக்கிறார்கள். இந்த என்ணெயின் விலை மலிவாக இருப்பதோடல்லாமல், தரத்திலும் மற்ற என்ணெய்களைப்போல் சிறந்து உள்ளது. ஒருவகைப் பனைமரத்தின் பழங்களிலிருந்து எடுக்கப்படுவதே இந்தப் பனை என்ணெய்.

வைட்டமின் 'ஈ' என்ணெய்களில் இருந்தால், அந்த என்ணெய் அதிக நாட்களுக்குக் கெடாது இருக்கும். ஆனால், நம் உபயோகத்தில் இருக்கும் பதனிடப் பட்ட பனை என்ணெ'ய்'யில் வைட்டமின் 'ஈ' குறைவாக உள்ளது. ஏனென்றால் சுத்திகரிப்பு செய்யும்பொழுது இந்த வைட்டமின் 'ஈ' நீக்கப்பட்டு விடுவதால் பதனிடப்பட்ட என்ணெய் விரைவாகக் கெட வாய்ப்பு அதிகமாகின்றது. அதனால் சுத்திகரிக்கப்பட்ட என்ணெய்,விரைவாகக் கெடாமல்,பாதுகாப்பது எப்படி என்று பல விதமான கொள்கலன்களில் வைத்து வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

ஈயம், கண்ணாடி, ஜாடி, டின் மற்றும் பிளாஸ்டிக் கொள்கலன்களில் சேமித்து வைத்து என்ணெய்யின் தரம் ஆராயப் பட்டது. வேதிமரங்களின் அளவைக் கணக் கிட்டுஎன்ணெய்யின்மாற்றங்களை ஆராயும் பொழுது எல்லாவற்றையும் விட டின் கொள்கலன்களில் சேமித்து இருந்த என்ணெய்யே தரம் பாதிக்கப்படாமல் இருந்தது. அதனால் பாமாயில் என்ற சீனப்பனை என்ணெய்வைச் சேமிக்கும் பொழுது, மற்ற கொள்கல்ன்களைவிட டின்னில் சேமித்து வைத்தால் அதிக நாட்களுக்குத் தரம் கெடாமல் இருக்கும்.

### நெல் அரவை ஆலைக்கழிவு நீரினால் சுற்றுப்புறத்திற்கு ஏற்படும் தீமைகளும், தவிர்க்கும் முறையும்

நெல்லைப் புழுங்க வைப்பது பழங் காலந்தொட்டு வழக்கத்தில் இருந்து வரும் ஒன்றாகும். நெல்லை, குளிர் நீரில் இரண்டு மூன்று நாட்களுக்கு ஊற வைத்த பிறகு வேக வைப்பது வழக்கம். இவ்வாறு ஊற வைப்பதால் நீரில் நுண்ணுயிர்கள் பெருகி, அதில் ஒருவித துர்நாற்றமும் ஏற்படுகிறது.

இந்தக் கழிவு நீரை நீக்கும் பொழுது நுண்ணுயிர்கள் பரவி சுற்றுப்புற சூழ்நிலை கெடுகின்றது. நீரில் நுண்ணுயிர்களை தடுப்பதற்காக வெந்நீரில் ஊற வைக்கும் புதிய முறை ஏற்படுத்தப்பட்டது. இந்த நெல் ஊற வைத்த கழிவு நீரினால் நெல் அரவை ஆலையின் சுற்றுப்புறத்திற்கு ஏற் படும் கெடுதலைத் தவிர்க்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வேளாண் பதனஞ்செய் துறையில் ஆராய்ச்சி நடத்தப்பட்டது.

குளிர் நீரில் ஊற வைக்கும் பொழுது வரும் கழிவு நீரில் கெடுதல் விளைவிக்கும் அளவில் நோய் உண்டாக்கும் கிருமிகள், மற்றும் துர்நாற்றம் உண்டாக்கும் நுண் ணுயிர்கள் பெருகிக் காணப்படுவது அறியப்பட்டது. மற்றும் இந்தக் கழிவு நீரை மண்ணில் பாய்ச்சும் பொழுது கழிவு நீரில் உள்ள ஊட்டச் சத்தினால் மண்ணிலுள்ள நுண்ணுயிர்களும் பெருகி, அவைகளுக்கு இடையில் ஏற்படும் போட் டியினால்வேரின்ல்,தழைச்சத்தைச் சேர்க்கும் நுண்ணுயிர்களாக ரைசோபியம், அசோஸ் பைரில்லம், மற்றும் அசோட்டோபாக்டர் அழிக்கப்படுகின்றது.

ஆனால் வெந்நீரில் ஊற வைத்து பதனஞ் செய்யும் பொழுதுவரும் கழிவு நீரில் நுண்ணுயிர்கள் மிகக் குறைவாக இருப்பதாக ஆராய்ச்சியில் அறியப்பட்டது. மண்ணில் உள்ள நுண்ணுயிர்களும் பாதிக்கப்படுவதில்லை. ஆகையால் குளிர் நீரில் ஊறவைத்த கழிவு நீரை வெளி யேற்றும்போது கிருமி நாசினியான சோடியம் ஹைப்போ குளோரைட் 7 சதம் சேர்த்தும், வெந்நீரில் ஊறவைத்த கழிவு நீரில் ஒரு சதவீதம் சேர்த்தும் வெளியேற்றுவதால் நுண்ணுயிர்களால் சுற்றுப்புறத்திற்கு ஏற்படும் தீமையும், துர் நாற்றமும் தவிர்க்கப்படுகின்றது.

### நூற்புழுவைக் கட்டுப்படுத்த பாலித்தீன் விரிப்பு

நாற்றங்கால் பயிர்களான கத்தரி, தக்காளி, மிளகாய் போன்றவற்றில் வேர்முடிச்சு நூற்புழு அதிகச்சேதம் விளை விக்க வல்லது. நூற்புழுக்கொல்லிகளை உபயோகித்துக் கட்டுப்படுத்தும் முறை நடைமுறையில் உள்ளது.

## பாண்டியன் கூட்டுறவு சிறப்பு அங்காடி,
## 162, பாலஸ் ரோடு, மதுரை - 1.

**எங்கள் குறிக்கோள்**

**குன்றாத தரம்!** **குறையாத எடை!!** **கூடுதலில்லாத விலை!!!**

**இல்லங்களுக்குத் தேவையான**
**மஞ்சள், மளிகைப் பொருட்கள், அரிசி, எண்ணெய், சீனி,**
**குழந்தைகள் உணவு, பால் உணவு, வாசனைப் பவுடர்கள்**
**சோப்புகள் சலவை சோப்புகள்**
**மற்றும்**
அனைத்து வகை அழகுசாதனப் பொருட்களையும்
ஒரே இடத்தில் வாங்கிடலாம்.
எச்.எம்.டி., டைட்டன் கைக்கடிகாரங்கள் உண்டு.
மிக்ஸி, கடிகாரம், கட்டில், பீரோக்கள் உண்டு.

**சிறப்பு அம்சங்கள்**

1) அங்கத்தினர்களுக்கு 2% தள்ளுபடி
2) டோர் டெலிவரி வசதி உண்டு.
3) கல்யாணம் மற்றும் விசேட காரியங்களுக்கு மொத்த விலையில் சப்ளை.
4) மருந்துகளுக்கு விற்பனை வரி கிடையாது.
5) வாடிக்கையாளர்களின் பிக்ஸட் டெபாசிட்டுக்கு கூடுதல் வட்டி.
6) சுயசேவை விற்பனை வசதிகள்.

(ஒப்பம்) இரா. நல்லதம்பி,
இணைப்பதிவாளர்/தனி அலுவலர்.


மண்ணிலுள்ள வெப்பத்தையும், ஈரப்பதத்தையும் அதிகப்படுத்த வெள்ளை பாலித்தீன் காகிதத்தை விரித்து ஆராய்ச்சி செய்து நல்ல பயன்கண்டுள்ளோம். மண்ணிலுள்ள வெப்பம் 14 டிகிரி சென்டிகிரேடு வரை உயர்வதால் நூற்புழுக்கள் சாகடிக்கப்படுகின்றன. தக்காளி நாற்றங்காலில் இம்முறை நல்ல பயனைக் கொடுத்துள்ளது. கோடைகால வெப்பத்தை இந்த முறையில் நாற்றங்கால் பயிரில் நூற்புழுக்களைத் தடுக்க இது ஒரு நல்ல முறை.

இந்த முறையில் நாற்றங்கால் பாத்தி கட்டி, தொழு உரமிட்டு, பாலித்தீன் காகிதத்தால் மூடி, ஓரங்களின் வழியாக காற்று புகாமல், மண்ணால் மூடி, குறைந்தது 25 நாட்கள் வைக்கவேண்டும். பிறகு பாலித்தீன் காகிதத்தை நீக்கி, மண்ணைக் கிளறி, விதைத்தால் நல்ல பயன் கிடைக்கும். இந்த நிலங்களில் ஒரு மாத காலம்வரை களைச்செடிகள் முளைப்பதில்லை. பாலித்தீன் காகிதம் 800 கிராம் பருமனுள்ளதே சிறந்தது. ஒரு கிலோ பாலித்தீன் காகிதம் விலை நாற்பது ரூபாய். நான்கு சதுர மீட்டர் பரப்பில் இடப்(நாற்றங்காலுக்கு), போதுமானது. ஒருமுறை உபயோகித்த பாலித்தீன் காகிதம் மேலும் நான்கு, ஐந்துமுறை உபயோகத்திற்கு வரும். மேலும் விளக்கமான தகவலுக்கு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நூற்புழுத்துறையை அணுகலாம்.

### பயறு வண்டினைக் கட்டுப்படுத்தி ஊக்குவிக்கப்பட்ட வெள்ளைக்களிமண்

பயறுவகை தானியங்களை விதைக்கவோ அல்லது உணவுக்காகவோ சேமிக்கும் பொழுது அவற்றை கெலஸோபுரூக்கஸ் என்னும் வண்டுகள் தாக்கி அதிக சேதத்தை உண்டாக்குகின்றன. இவ்வண்டுகள் வெள்ளை நிற முட்டைகளை பயறு விதைகளின் மீது ஒருவித பசை போன்ற திரவத்தால் ஒட்டி இடுகின்றன. முட்டையிலிருந்து வெளிப்படும் காலில்லாப் புழுக்கள் தானியங்களைக் குடைந்து சென்று உண்டு வளர்கின்றன. புழுக்கள் தானியங்களுக்குள்ளேயே கூட்டுப்புழுவாகி விதைகளில் துளையை ஏற்படுத்தி தாய் வண்டுகளாக வெளிவருகின்றன வண்டுகளின் தாக்குதலால் தானியங்களின் உட்பகுதி அரிக்கப்பட்டு சேதமாவதுடன் ஓட்டைகளும் தோன்றுகின்றன. துளையுண்ட தானியங்களை விதையாகவோ, உண்ணவோ பயன்படுத்த முடியாது.

பயறுவகைத் தானியங்களைப் பூச்சிகளினின்று பாதுகாக்கப் பல முறைகள் பின்பற்றப்பட்ட போதிலும் ஊக்குவிக்கப்பட்ட வெள்ளைக் களிமண் உபயோகிப்பதன் மூலம் வண்டுகளைச் சிறந்த முறையில் கட்டுப்படுத்தலாம். இக்களிமண் அலுமினா மற்றும் சிலிக்கன் டை ஆக்ஸைடு முதலிய பொருட்களைக் கொண்டது. இக் களிமண்ணை உபயோகிப்பதால் மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் எவ்விதத்தீங்கும் இல்லை. விதைகளின் முளைப்புத் திறனும் பாதிக்கப்படுவதில்லை. பக்குவம் செய்யப்படாத களிமண் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து தருவிக்கப்பட்டு அடர் கந்தக அமிலம் கொண்டு அதிக வெப்பம் கொண்ட உலைகளினுள் ஊக்குவிக்கப்படுகிறது.

ஊக்குவிக்கப்பட்ட களிமண்ணை நூறுகிலோ விதைக்கு ஒரு கிலோ என்ற அளவில் நன்கு கலந்து, மூடப்பட்ட கலன்களிலோ அல்லது பாலிதீன் சாக்குப் பைகளிலோ காற்றுப் புகாதவாறு சுமார் ஓராண்டு வரை பூச்சிகளிலிருந்து பாதுகாக்கலாம். இக்களிமண் துகள்கள் கூரிய முனைகளைக் கொண்டுள்ளதால் வண்டுகள் தானியங்கள் மீது ஊர்ந்து செல்லும் போது அவற்றின் மேல் தோலில் சிராய்ப்புகள் ஏற்பட்டு உடலிலிருந்து நீர் வெளியேறி நீர்ப் பற்றாக்குறையால் பூச்சிகள் இறந்து விடுகின்றன. தானியங்களை உணவுக்காக உபயோகப்படுத்தும் முன்னர் நீரில் நன்கு கழுவிவிட்டால் களிமண் முற்றிலும் அகன்றுவிடும். ஊக்குவிக்கப்பட்ட களிமண் பூச்சியியல் துறையில் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

விவசாயிகள் இந்த எளிய உத்தியைக் கடைப்பிடித்து பயறுவகைத் தானியங்களில் பூச்சிகள் வராமல் தடுக்கலாம்.

**வேளாண் தகவல் பணி மையம்,**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்.**



# பிணி தீர்க்கும் பண்ணைக் கீரை

ஏ.ஆர்.என். துரைராஜ்

கீரை வகைகளில் பண்ணைக் கீரையும் ஒன்று.

பயிரிடும் நிலத்தைப் பொதுவாக, பண்ணை என்று அழைப்பார்கள். பண்ணையில் வளர்ந்து உணவாகப் பயன்படும் கீரை இனமாகையால் 'பண்ணைக் கீரை' என்னும் வழக்குச் சொல் இக்கீரைக்கு அமைந்து விட்டது.

பண்ணைக் கீரையானது தண்டுக் கீரை இனத்தைச் சார்ந்தது. இது செவ்வல், கரிசல் நிலங்களில் தானே கிளைச் செடியாக நான்கடியிலிருந்து ஐந்து அடி வரை வளரும்.

இப்பண்ணைக் கீரையில் இரண்டு வகை உண்டு. ஒன்றின் இலை அகலமாக இருக்கும்; இலைகள் பெரிதாகவும் சிறிது சிவப்பு நிறம் கொண்டதாகவும் இருக்கும். இப்பெரிய இலைகளைக் கொண்ட கீரையே உணவிற்குச் சிறந்ததாகும். ஏறத்தாழ அரைக்கீரையின் சுவை உடையதாக இருக்கும். மற்றொரு வகை, இலை அகலமாய் இராமல் நீண்டு சிறுத்திருக்கும். இவ்வாறு சிறுத்துள்ள கீரையை ஆண் பண்ணைக் கீரை என்பர். குணத்திலும் செய்கையிலும் இரண்டும் ஒன்றே எனலாம். ஆனாலும், சுவையைப் பொறுத்தவரை அகலமான இலையைக் கொண்ட பண்ணைக் கீரையே சிறப்புடையதாகும்.

இதற்கு 'நறும் பண்ணை', 'சிறு பண்ணை', 'புனல் பண்ணை', 'புற் பண்ணை' என்ற பல பெயர்கள் உள்ளன.

பண்ணைக் கீரை முற்றிவிட்டால் வெள்ளையான - கதிர் போன்ற பூக்களைப் பூத்து நிற்கும். இப்பூக்கள் வெண்மை நிறம் பெற்றும் பூக்கதிர்கள் பால்நிற வெண்மை பெற்றும் திகழும். ஆனால், முதிர்ந்த பூவில் விதைகள் தோன்றும். முதிர்ந்த கீரையும் தண்டும் உணவுக்கு உதவாது. ஆனால், இளம் தண்டையும் கீரையையும் உணவில் சேர்த்துக் கொண்டு உண்ணலாம். பருவத்தில் பறித்த கீரையும் அதன் தண்டும் மிகச் சுவையுடையதாக இருக்கும். மற்றும் பண்ணைக் கீரையின் இலையை, கொழுந்தாகப் பறித்துச் சமைத்து உண்ணலாம். இக்கீரையின் இலை, கொழுந்து, பூ, விதை ஆகிய அனைத்தும் மருத்துவத்தில் கையாளப்படுகின்றன.

### தீரும் வியாதிகள்:

உடலில் காணும் உள் அழலை, குடல் சம்பந்தப்பட்ட நோய், தோல் சம்பந்தப்பட்ட நோய், அஜீரணம், கரப்பான், இரணம், கிரந்தி, சொறி-சிரங்கு, மேகவூறல், கப இருமல், இரத்தபேதி, சீதபேதி, மூத்திரத் தாரை நோய், மலமிளக்கு, பெரும்பாடு மற்றும் பல நோய்களை இக்கீரை குணப்படுத்துகிறது.

இப்பண்ணைக் கீரையை எடுத்துச் சுத்தம் பார்த்து, பருப்புடன் கடைந்து சாதத்தில் சிறிது நெய் விட்டுச் சாப்பிடலாம். அல்லது வேகவைத்து வெங்காயம், பச்சை மிளகாய் உடன் கரைத்த புளி சேர்த்துக் கடைந்து சாதத்துடன் போட்டு உண்ணலாம். இது குடலைச் சுத்தி செய்து, குளிர்ச்சியைத் தருவதுடன், கரப்பான், கிரந்தி, இரணம், மேகவூறல் ஆகிய நோய்களை நீக்குகிறது.

### மலக்குடல், ஜீரணக்குடல் ஆகியவை வலுப்பெற

இப்பண்ணைக் கீரையை எடுத்து முதலில் சுத்தம் பார்த்து, பருப்புடன் சேர்த்து, இஞ்சி, கொத்தமல்லி, பெருங்காயம், கறிவேப்பிலை போட்டுக் கடைந்து, சிறிது நெய்விட்டுச் சாதத்தில் போட்டுச் சாப்பிட்டால் மலக்குடல், ஜீரணக்குடல் ஆகியவை வலுப்பெறுவதுடன், உடல் சக்தியும் பெருகி, சர்ம நோய்கள் யாவும் நீங்கி நலம் பெறும்.

### பெரும்பாட்டின் உதிரப் போக்கைக் கட்டுப்படுத்த:

இக்கீரையினுடைய பூக்களை மட்டும் (சுமார் 10 பூக்களைப்) பறித்து, சுத்தம் பார்த்து, பிறகு 400 மில்லி நீரில் போட்டுக் காய்ச்சி, வடிகட்டி காலை-மாலை அருந்திவர உதிரமாகப் போகும் பெரும்பாட்டுப் போக்கு 3 நாட்களில் நின்று நலம் பெறும்.

### குறிப்பு:

ஒருவருக்கு நாட்பட்ட வயிற்றுப் போக்கு இருந்தால், இதே கஷாயத்தையே அருந்தி வந்தால் வயிற்றுப் போக்கையும் கண்டிக்கும் தன்மை பெற்றது இக்கீரை.

**விதையின் பயன்:**

இக்கீரை விதையினால் கப இருமல், இரத்த பேதி, மூத்திரத் தாரை நோய் ஆகியவை நீங்கு கின்றன.

முதலில் விதைகளை எடுத்துச் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு அவற்றை உலர்த் திய பிறகு இருபது கிராம் அளவு ஆவதுபோல் தூள்செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

முதலில் 10 கிராம் தூளை எடுத்துக்கொண்டு 200 மில்லி பசும் பாலில் போட்டுக் காய்ச்சி, காலை-மாலை மூன்று நாட்கள் அருந்திவர கப இருமல், இரத்தபேதி, மூத்திரத் தாரை நோய் சம்பந்தமான அனைத்து நோய்களும் நீங்கி நலம் பெறும்.

**குறிப்பு:**

உப்பு, புளி, காரம் இவைகளை மட்டுப்படுத்தி இச்சா பத்தியம் இருக்க நன்மை தரும்.

இளங்கீரைகளையும், தண்டுகளை யும் மட்டுமே உணவாகக் கொள்ள வேண்டும். இந்தக் கீரையில் 85 விழுக்காடு கொழுப்புச் சத்தும், 2.3 விழுக்காடு நார்ச்சத்தும், 6.0 விழுக் காடு மற்றைய மாவுப் பொருள் களும் இருக்கின்றன.

சித்த மருத்துவத்தின் தந்தை எனக் கருதப்படும் 'குறுமுனி', இக் கீரையின் சிறப்பைத் தெளிவாகக் கூறுகிறார்.

**"பண்ணைக் கீரையது பற்று மலமிளக்கும்**
**உண்ணுங் குடலுக்கிதங் கொடுக்கும்-**
**பெண்ணே கேள்**
**சீதங் கரப்பாள், சிரங்குபுண் மாற்றி விடுங்**
**கோதங்கிலை யதனைக் கொள்"**

இக்கீரையை உணவுக்காகப் பயிரி டலாம்: நல்ல உரமுள்ள நிலத்தில் விதைகளை நெருக்கமில்லாதபடி தெளித்து இலேசாக மண்ணைத் தூவி மூடவேண்டும். சிறிது வைக் கோலைப் போட்டு மூடுவதும் நல்லது.

விதைத்தவுடன் பூவாளியைக் கொண்டு தண்ணீர் தெளிப்பது சாலச் சிறந்தது. விதைத்த மூன்றாம் நாள் வைக்கோலை அகற்றிவிட வேண்டும். விதைக்கப்பட்ட நான்காம் நாள் எல்லா விதைகளும் முளைத்து வளர ஆரம்பிக்கும். முளைக்க ஆரம்பித்த காலகட்டத்தில் அடிக்கடி நீர் விடக்கூடாது. விதைத்த 15 நாட்களுக்கு மழை இல்லாமல் இருப்பது நல்லது. அவ்வாறு மழை பெய்தால் முளைத்த கீரைகள் யாவும் அழுகிவிடும்.

கிராமங்களில் தொன்றுதொட்டு நடைபெற்று வரும் ஜல்லி கட்டு என்னும் மாடு பிடிக்கும் நிகழ்ச்சி யின்போது பல தோரணங்கள் கட்டு வார்கள். அதிலே இந்தப் பண் ணைப் பூவையும் கட்டி மாலையாகப் போட்டு, மாட்டை விரட்டுவது நம் தமிழ்நாட்டின் பழக்கங்களில் ஒன்றாகும்.

குடல் பலம் இழந்தவர்களும், குடல் இரணம் உள்ளவர்களும் நலம் பெறுவதற்கு இக்கீரை ஒரு வரப் பிரசாதம் ஆகும். எனவே, இக் கீரையை நல்ல முறையில் வீட்டுத் தோட்டத்தில் பயிரிட்டு நம் உணவில் சேர்த்துக் கொள்வது நம் உடல் நலத்திற்கும், உணவுச் சிறப்பிற்கும் மிகவும் அவசியம்.


WITH
BEST
COMPLIMENTS
FROM

**N. MANI MOZHIAN, M.A.,**
**MANAGING DIRECTOR**

**Residence**

1, Bulabai Desai Road,
Chockikulam,
Madurai - 625 002.

**Phone :** 44759

NEW COLLEGE HOUSE,
2, TOWN HALL ROAD,
MADURAI - 625 001.

**Phone :** 24311- 27145

AND

**SRI V.K.K. PLAY GROUP MATRICULATION SCHOOL**
**3 - Ratnasamy Nadar Road,**
**Chokkikulam,**
**Madurai - 625 002.**

**Phone: 44701.**

சேலம் மாவட்டத்தில்...

# தொழுநோய் ஒழிப்புப் பணிகள்

சேலம் மாவட்டத்தில் 1987 பிப்ரவரிக்கு முன் இருந்த 37,11,991 மக்கள் தொகையில் 44,464 பேர் தொழுநோயால் பாதிக்கப்பட்டு இருந்தனர். அதுவரை ஒருமருந்து (டேப்சோன்) கொடுத்து சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. அதற்குப்பின் புதிய சக்தி வாய்ந்த கூட்டு மருந்துகள் சிகிச்சைத் திட்டம் டேனிடா உதவியுடன் பிப்ரவரி 1987-இல் தொடங்கப்பட்டது. பிப்ரவரி 1987-இல் இருந்து டிசம்பர் 1989 வரை, அதிக தொழுநோய்க் கிருமிகளுடைய நோயாளிகள் 2,563 பேர், குறைவாகக் கிருமிகளுடைய நோயாளிகள் 22,597 பேர் ஆக, 25,160 நோயுற்றவர்கள் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுச் சிகிச்சையளிக்கப்பட்டனர். ஆக, நோயால் பாதிக்கப்பட்ட 69,624 பேர்களில் புதிய கூட்டு மருந்துகள் மூலம் 41,340 பேர்கள் (2,827 எம்.பி. 38,513 பி.பி) பூரண குணம் பெற்றனர். தற்போது 14,318 நபர்கள் கூட்டு மருந்துச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

**கூட்டு மருந்துகள் சக்தி வாய்ந்தவை**

புதிய கூட்டு மருந்துகள் தொழுநோயைக்குறுகிய காலத்தில் குணப்படுத்தக் கூடியவை. அதிக சக்தி வாய்ந்த இவை, கிருமிகளை விரைவில் அழிக்கின்றன. இம்மாத்திரைகள் டென்மார்க்கிலிருந்து தருவிக்கப்பட்டவை; இவை அட்டைகளில் வழங்கப்படுகின்றன.

சேலம் மாவட்டம் முழுவதும் அரசு தொழுநோய்க் கட்டுப்பாட்டு நிலையங்கள் 8 மூலமும் தன்னிச்சைச் சேவை நிறுவனங்கள் 2 மூலமும் தொழுநோய்க்குக் கூட்டு மருந்துச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்தத் தொழுநோய் சிகிச்சை நிலையங்கள் சேலம், ஆத்தூர், இராசீபுரம், நாமக்கல், ஆட்டையாம்பட்டி, திருச்செங்கோடு, எடப்பாடி, மேட்டூர் அணை, செட்டிப்பட்டி, சேலம் அரிசிப்பாளையம் ஆகிய இடங்களிலிருந்து செயல்படுகின்றன.

**சிகிச்சைத் திட்டம்**

ஒவ்வொரு சிகிச்சை நிலையத்திலும் தொழுநோய்க்காகச் சிறப்புப் பயிற்சி பெற்ற மருத்துவர், தொழுநோய்ப் பணியாளர்கள், மேற்பார்வையாளர் மற்றும் தொழில் நுட்பப் பணியாளர்கள், தொழுநோய் ஒழிப்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இந்நிலையங்கள் வீடுவீடாகச் சென்று கணக்கெடுப்பு, தோல் பரிசோதனை, பள்ளி மாணவ மாணவியர் பரிசோதனை போன்ற முறைகளின் மூலம், புதிய நோயாளிகளைக் கண்டு பிடித்துப் புதிய கூட்டு மருந்துச் சிகிச்சை வழங்குகின்றன. அரசு தொழுநோய் கட்டுப்பாட்டு நிலையம் ஒவ்வொன்றும் 20 கிளை நிலையங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிளை நிலையப்பகுதியிலும் 28 நாட்களுக்கு ஒருமுறை குறிப்பிட்ட நாளில் மருத்துவக்குழு சென்று சிகிச்சையளிக்கிறது. காலை 6 மணிக்குத் தொடங்கும் சிகிச்சை, பிற்பகல் வரை நீடிக்கிறது. ஒரு கிளை நிலையப்பகுதியில் 5 முதல் 8 வரை சிகிச்சை நிலையங்கள் உள்ளன.

தொழுநோயாளிகளுக்குக் கை கால்களில் புண், வீக்கம் போன்ற தொந்தரவுகள் ஏற்பட்டால் மருத்துவமனையில் சிறப்புத் தொழுநோய் மருத்துவப் பகுதிக்கு அனுப்பப்பட்டு சிகிச்சையளிக்கப்படுகிறது. ஆத்தூர், இராசீபுரம், சேலம், சங்ககிரி ஆகிய ஊர்களில் இம் மருத்துவப் பகுதிகள் உள்ளன.

**தொழுநோய்க் கல்வி மற்றும் சமுதாய ஈடுபாட்டுத் திட்டங்கள்**

தொழுநோய்க்குச் சிகிச்சையளிப்பதுடன் நலக்கல்விப் பிரச்சாரங்கள் மாவட்டம் முழுவதும் தீவிரமாகச் செய்யப்படுகின்றன. ஆசிரியர்கள், மாணவர்கள் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள், உறுப்பினர்கள், மகளிர் மன்ற உறுப்பினர்கள், இளைஞர்கள், தொழிற்சாலையில் பணிபுரிவோர், முடி திருத்துவோர், ஆரம்ப சுகாதார நிலையப் பணியாளர்கள் போன்ற பலருக்கு சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சியின்போது தொழுநோயின் ஆரம்ப அறிகுறிகள், புதிய கூட்டு மருந்துகளின் பயன் போன்றவை விளக்கிக் கூறப்படுகின்றன. இப்பயிற்சி பெற்ற பலர், ஆரம்ப நிலையிலுள்ள நோயாளிகளைச் சிகிச்சை பெறுவதற்கு அனுப்பி வைக்கின்றனர். தொடர்ந்து சிகிச்சை பெற அவர்களைத் தூண்டுகின்றனர்.

புதிய அணுகுமுறைகளின் மூலம் பல சமூகக்கல்வி நிகழ்ச்சிகள், விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. தொழுநோய் ஒழிப்புத் திருவிழா, ஊனத்தடுப்பு சிகிச்சை முகாம், தோல்நோய் சிகிச்சை மற்றும் தொழுநோய் கண்டு பிடிப்பு சிகிச்சை முகாம் போன்றவற்றை நடத்தப் பொதுமக்கள் பெரிதும் ஒத்துழைக்கின்றனர். பொருள் உதவி செய்தும் உடல் உழைப்புத் தந்தும் தொழுநோய்ப் பணியாளர்களுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்கின்றனர். இக்கருத்தரங்கங்களில் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் நோயில் இருந்து

குணம் பெற்றவர்கள், பொது மக்களுடன் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

இந்தப் புதிய அணுகுமுறைகளைப் பற்றி அறியத் தமிழக முழுவதிலுமிருந்து தொழுநோய் ஒழிப்பு நலக் கல்வியாளர்கள் சேலத்திற்கு வந்து 5 நாட்கள் பயிற்சி பெற்றனர். புதிய கூட்டு மருந்து பற்றியும், தொழுநோய் ஆரம்ப அறிகுறிகளைப் பற்றியும் மக்களிடையே பரவலாக எடுத்துக்கூறப் பல்வேறு விளம்பரச் சாதனங்களும், முறைகளும் பயன்படுத்தப்படுகின்றன. படக்காட்சி, பொருட்காட்சி, சினிமா சிலைடுகள், சுவரொட்டிகள், சுவர் வண்ணம், அறிவிப்புப் பலகைகள், புகைப்படங்கள் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன. ஊர்வலங்கள், பாதயாத்திரை, நொடி வினா-விடை, பொதுக் கூட்டங்கள், பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி போன்றவை நடத்தப்படுகின்றன. நாளிதழ்கள் மூலமும், வானொலி மூலமும் இச்சேவைச் செய்திகள் மக்களுக்குப் போய்ச் சேருகின்றன.

சேவைநிறுவனங்களான ரோட்டரி சங்கம், அரிமா சங்கம், நேரு இளைஞர் நற்பணி மன்றம் போன்றவை பெரிதும் ஒத்துழைக்கின்றன. தொழுநோயால் பாதிக்கப்பட்ட இளைஞன் ஒருவனின் உண்மை வாழ்வினை ஒட்டி, "புதிய மனிதன்" என்னும் திரைப்படம் சேலத்திலேயே எடுக்கப்பட்டது. இப்படத்தை மருத்துவ இயக்குநர், பல பிரதிகள் வழங்கி தமிழகம் முழுவதும் காண்பிக்க ஏற்பாடு செய்துள்ளார்.

முழுமையாகக் குணமடைந்த நோயாளிகள் 2 முதல் 5 ஆண்டுகள் வரை கண்காணிக்கப்படுகிறார்கள். இவர்கள் 6 மாதங்களுக்கு ஒருமுறை பரிசோதனை செய்யப்படுகின்றனர்.

### தொழுநோய் சிறப்புப் பயிற்சி

1987-இல் தொழுநோய்த் துறையைச் சார்ந்த மருத்துவ அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் 356 பேருக்குக் கூட்டு மருந்துச் சிகிச்சைப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பணியிடைப் பயிற்சியும் அவ்வப்போது அளிக்கப்படுகிறது. ஆரம்பச் சுகாதார மருத்துவர்கள், சித்த மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் 239 நபர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

### திட்ட ஆய்வுக் கண்காணிப்பு

மாவட்ட அளவில் மாதாந்திர ஆய்வுக் கூட்டங்களும், தொழுநோய்க் கட்டுப்பாட்டு நிலையங்களில் மாதாந்திர மதிப்பீட்டுக் கூட்டங்களும் நடத்தப்படுகின்றன. இக்கூட்டங்களில் பணி நடைமுறைப் படுத்துவதிலுள்ள சிக்கல்கள், பிரச்சனைகள் குறித்துக் கருத்துரைகள் தெரிவிக்கப்படுகின்றன.

மாதாந்திர அறிக்கைகள், பதிவேடுகள் மூலம் களப்பணியில் நேரடிக் கண்காணிப்பு மூலமும், திட்டத்தின் முன்னேற்றங்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. பணியாளர்களின் வேலைத்திறன், பணி முறைகள் ஆகியவை அடிக்கடி ஆய்வு செய்யப்படுகின்றன. பணி முன்னேற்றத்திற்கான ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

தொழுநோயும் மற்ற நோய்களைப் போல ஒருவகைக்கிருமியால் உண்டாகின்ற சாதாரண நோய்.

வெளிறிய அல்லது சிவந்த உணர்ச்சியற்ற படை, தொழுநோயின் அறிகுறியாகும்.

புதிய கூட்டுமருந்துகள் தொழுநோயைக் குறுகிய காலத்தில் குணப்படுத்தும்.

ஆரம்பநிலைச் சிகிச்சை, தொழுநோயை முற்றிலும் குணப்படுத்தும். உடல் ஊனம் ஏற்படாமல் தடுக்கும்.

## ரூ.139.60இலட்சம் செலவில் 59 மழைநீர் வடிகால்கள்

சென்னை மாநகரில் மழை பெய்தால் அவற்றைத் தேங்காமல் வடியச் செய்ய மாநகராட்சி, மழைநீர் வடிகால்களை அமைக்கிறது.

சென்னை மாநகரில் சாலைகளின் மொத்த நீளம் 1600 கி.மீ. ஆகும். தற்போது மழைநீர் வடிகால் 550 கி.மீ. நீளத்திற்கு மட்டுமே உள்ளது. நகரின் மழைநீர் வடிகால் தேவையை நிறைவு செய்ய இன்னும் 530 கி.மீ. நீளத்திற்கேனும் மழைநீர் வடிகால்களைக் கட்டியாக வேண்டும். இதற்குச் சுமார் ரூ.53 கோடி செலவாகும்.

நிதிப் பற்றாக்குறை காரணமாக மாநகராட்சி ஒவ்வோராண்டும் படிப்படியாகப் புதிய வடிகால்களை அமைத்து வருகிறது. இந்த ஆண்டு, சென்னை மாநகராட்சி ரூ.139.60 இலட்சம் செலவில் 59 மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டு இருக்கிறது. இதனால் மாநகராட்சியில் மழைநீர் வடிகால்களின் நீளம் 12. கி.மீ. வரை அதிகரிக்கும்.

1989-90-இல் பெரம்பூர் சுரங்கப்பாதை, பெரியமேடு சைடன் ஆம்ஸ்சாலை. புரசைவாக்கம்நெடுஞ்சாலை, கண்ணன் தெரு மற்றும் புனித சேவியர் தெரு முதலிய இடங்களில் மழைநீர் வடிகால்கள் கட்டப்பட்டுத் தண்ணீர் தேங்கும் பிரச்சினை தீர்க்கப்பட்டது.

இந்த ஆண்டு, நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் சாலை, புளியந்தோப்பு, எண்ணூர் நெடுஞ்சாலை, வியாசர்பாடி, கொளத்தூர் டாக்டர் அம்பேத்கார் கல்லூரி சுரங்கப் பாதை, அமைந்தகரை, அசோக் நகர், நுங்கம்பாக்கம், கஸ்தூரிபாய் நகர், தேனாம்பேட்டை, தியாகராய நகர், விருகம்பாக்கம் ஆகிய இடங்களில் 12. கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

# சிங்கப்பூர் பாணியில் அமைப்பெற்ற மாபெரும் பல்பொருள் அங்காடி

# லக்கி பிளாசா A/C பல்பொருள் அங்காடி



* அழகு சாதனப்பொருட்கள்
* மாணவ-மாணவியருக்கான எழுது பொருட்கள்
* இமிடேஷன் நகைகள்
* ஊட்டச்சத்து உணவுப் பொருட்கள்
* விதவிதமான மிட்டாய் வகைகள்



* அரிசி முதல் உப்பு வரை அனைத்து வகையான மளிகை சாமான்கள்
* மிக்ஸி, குக்கர், வாட்டர் ஹீட்டர்
* பிளாஸ்டிக்-கண்ணாடிப் பொருட்கள்
* பரிசுப் பொருட்கள்
* சிறுவர் காலணிகள் லெதர்'பேக்'குகள்
* பிளாஸ்டிக் வாட்டர் பாட்டில்கள்
* அலுமினிய சேர்கள், குடைகள்
* சிறுவர் சைக்கிள்கள்
* விதவிதமான விளையாட்டுப் பொருட்கள் (Toys)



* சிறுவர் முதல் பெரியோர் வரை ரெடிமேட் ரகங்கள்
* சிறுமி முதல் மகளிர் வரை ரெடிமேட் வகைகள்
* அனைத்து பிரிவினருக்குமான உள் ஆடைகள்
* எண்ணற்ற சேலைவகைகள்
* பிளவுஸ் பிட்டுகள்
* சர்ட்-பேண்ட் பிட்டுகள்
* வேஷ்டிகள், கர்ச்சிப்புகள்
* ரெயின்கோட்டுகள்



## வாடிக்கையாளர்களுக்கு தினமும் ஒரு மிக்ஸி

எங்களிடம் வாங்கும் பொருட்களுக்கு ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் ஒரு இலவச பரிசுக்கூப்பன் வழங்கப்படும். அன்றைய தினமே குலுக்கல் நடத்தி அதிர்ஷ்டசாலிக்கு மிக்ஸி வழங்கப்படும்.



* டி.வி., வி.சி.ஆர். வி.சி.பி.
* பிரிட்ஜ், கிரைண்டர்
* ரேடியோ, டேப்ரிக்கார்டர்
* கைகடிகாரம், சுவர் கடிகாரம்
* வாக்கும் கிளீனர்கள்
* வீடியோ கேம்ஸ்கள்
* வயர்லெஸ் காலிங்பெல்
* வயர்லெஸ் சுவிட்ச் ஆன்-ஆப் கருவி
* கால்குலேட்டர்கள்
* வாஷிங் மிஷின்கள்

பிரதி ஞாயிறு விடுமுறைநாள்

* 9000 சதுர அடி பரப்பளவில் அமைந்த 4 அடுக்குக் கட்டிடம்
* கட்டிடம் முழுவதற்கும் குளுகுளு வசதி (A/C)
* எல்லா மாடிக்கும் சென்றுவர லிப்ட் வசதி
* உங்களுக்குத் தேவையானவற்றை நீங்களே எடுத்துச் செல்வதற்கு வசதியாக சுயசேவை முறை (Self Service System)
* கம்ப்யூட்டர் எந்திரம் மூலம் பில் போட்டு பணம் செலுத்தும் வசதி
* அதிக அளவில் பொருட்கள் வாங்குபவர்களுக்கு இலவச 'டோர் டெலிவரி'
* அங்காடிக்குள் வந்தவர்கள் சற்றே ஓய்வெடுக்க Snack Bar வசதி

* சிறுவர்கள் உல்லாசமாக விளையாட காசு போட்டால் இயங்கும் எலக்ட்ரானிக் கார், ரயில், குதிரைகள்
* இலவசமாக வீடியோ கேம்ஸ் விளையாட வசதி

**லக்கி பிளாசா A/C**

பல்பொருள் அங்காடி,

**214, கீழவெளிவீதி,**

**மதுரை - 625 001.**

**Ph: 35686**

**அம்பேத்கர் நூற்றாண்டு**



# அண்ணல் அம்பேத்கர்

**-டாக்டர் ஆஞ்சநேயலு**

**ஆ**திதிராவிட மக்களின் ஆற்றல் மிகுந்த தலைவராக மட்டுமின்றி இந்திய அரசியல் சாசனத்தின் பிரதான சிற்பியாகவும் திகழ்ந்தவர் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர். 1891-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிறந்த அம்பேத்கர் 1956 டிசம்பர் ஆறாம் நாள் புகழுடம்பு எய்தினார்.

சமூக, அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளை அம்பேத்கர் அணுகிய விதம், அவரது அறிவார்ந்த ஆற்றலைப் பறை சாற்றுவதாகும். இந்து சமூக அமைப்பானாலும், சாதி முறைகளானாலும் சூத்திரர்கள் என்று சொல்லப்படுபவர்கள் தோற்றம் பற்றிய கருத்துக்களானாலும், தீண்டத்தகாதவர்களுக்கு விமோசன வழியானாலும், ஜனநாயக அரசியல் நெறியானாலும், அவர் கூறும் கருத்துகள் அடிக்கடி சர்ச்சைக்குட்பட்டன. எனினும் அவை மிக முக்கியமான கருத்துக்களாகவே இருந்தன.

**அறிவுத் தாகம்:**

அம்பேத்கர் எந்த விஷயத்தைப் பற்றிப் பேசினாலும் அவ்விஷயம் குறித்த ஆழ்ந்த அடிப்படையான தகவல்களை ஆதாரத்துடனேயே பேசுவார். உண்மைகளை ஒருபோதும் அவர் விட்டுக்கொடுத்ததில்லை. அவரது அறிவுத்தாகமும் தனது ஆற்றலில் அவர் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கையும் சில சமயங்களில் அறிவுத்திமிர் என்று கூட வர்ணிக்கப்பட்டதுண்டு.

தீண்டத்தகாதவர்கள் என்று ஒதுக்கப்பட்டவர்களின் நலனுக்காக அரும்பாடுபட்ட இரு பெரும் தலைவர்கள் காந்தியடிகளும் அம்பேத்கரும். எனினும் இருவரும் இருவேறு துருவங்களாகவே செயல்பட்டனர். தாழ்த்தப்பட்ட மக்களை அழைப்பதில்கூட அவர்களிடையே கருத்து வேறுபாடு இருந்தது. பஞ்சமர்களான அம்மக்களைக் கடவுளின் குழந்தைகள் என்று பொருள் தரும்படியாக 'ஹரிஜனங்கள்' என்று காந்தியடிகள் அழைத்தார். ஆனால் காலங்காலமாக அடக்குமுறைக்கு ஆட்பட்ட அவர்களை இந்திய அரசுச் சட்டத்தில் உள்ளவாறு 'ஷெட்யூல்ட் சாதியினர்' என்றே கூறவேண்டுமென்று அம்பேத்கர் வாதிட்டார். சாதிப் பெயரை மட்டும் ஆறுதல் தருவதாக மாற்றினால் போதாது என்பதே வாதம். மறுக்கப்பட்ட உரிமைகள் அளிக்கப்பட்டு, அனைவராலும் சரிசமமாக மதிக்கப்படவேண்டியதே இப்போதைய தேவை. மாறாகக் கடவுளின் குழந்தைகள் என்று அழைத்தால் ஆகும் பயன் எதுவுமில்லை என்று அவர் அறிந்திருந்தார். சிதிலமடைந்துபோன வீட்டுக்கு வெள்ளையடிப்பது போன்றதுதான் அச்செயல். அஸ்திவாரம் ஆட்டங் கண்டுபோன நிலையில் அதனை முற்றிலும் இடித்துவிட்டுப் புதிதாக ஒரு கட்டடத்தைக் கட்டியாக வேண்டும் என்று அவர் கூறினார்.

**தீண்டாமை ஒழிய:**

தீண்டாமை என்பது ஓர் அடிமைத்தனம் என்று அம்பேத்கர் வர்ணித்தார். ஆனால் தீண்டாத அடிமைகளுக்குச் சோறுபோடும் பொறுப்பைச் சமூகம் ஏற்கவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். தீண்டாமைக் கொடுமையை அமைதியான வழியில் படிப்படியாக ஒழிக்க வேண்டும் என்று காந்தியடிகள் கூறினார். ஆனால் தீண்டாமைக்கு மூல வித்தான சாதியமைப்பையே ஒழிக்க வேண்டும் என்று தீவிரமாகக் குரலெழுப்பியவர் அம்பேத்கர். ''தீண்டாமைக்கு வேர் சாதிமுறை; சாதியமைப்புக்கு மூலம் வர்ணாசிரம முறையைச் சேர்ந்த சமயநெறி; வர்ணாசிரமத்துக்கு அடிப்படை பார்ப்பனீயம் நிறைந்த சமயம்; பார்ப்பனீய சமயத்திற்கு மூலம் அரசியல் அதிகாரம்'' என்று தர்க்க ரீதியாக வாதிட்டார் அண்ணல் அம்பேத்கர்.

**சமூகச சீர்திருத்தம்:**

சமூகச் சீர்திருத்தம் என்பதில் இரண்டு பரிமாணங்கள் உண்டு; ஒன்று இந்துக் குடும்ப அமைப்பில் சீர்திருத்தம் கொண்டுவருவது; மற்றொன்று இந்து சமுதாயத்தையே மாற்றியமைப்பது, முதலாவது சீர்திருத்தத்தில் விதவைத் திருமணம், குழந்தைத் திருமணத்தைத் தடுத்தல் போன்றவை அடங்கும். இரண்டாவது சீர்திருத்தம் என்பது சாதியமைப்பை ஒழிப்பது என்று அவர் கூறினார்.

சாதிப்பிரிவினைகள் காரணமாகப் பொருளாதாரத்திறன் மேம்படவில்லை, வாழ்க்கைத்தரம் முன்னேறவில்லை, சாதிப்பிரிவுகளால் எவ்வித நன்மையும் ஏற்படவேயில்லை என்று கூறிச் சாதியமைப்பை ஒழிக்க வேண்டும் என்று அம்பேத்கர் அயராது முயன்றார். "பொதுவாழ்வில் சாதிமுறையே வியாபித்திருக்கிறது; சாதியமைப்புக்கும் பொறுப்பாகவும் விசுவாசமுள்ளவர்களாகவுமே இந்துக்கள் நடக்கின்றனர். திறமையுள்ளவர்கள் அங்கீகரிக்கப்படவில்லை; தேவைப்படுபவர்களுக்கு உதவிக்கரம் நீட்டப்படவில்லை" என்று மனம் நொந்து அவர் கூறியிருக்கிறார்.

**சாதி ஒழிப்பு:**

இந்தியா, புதிய இந்தியாவாக வேண்டுமானால் சாதியை வேரோடு ஒழிப்பதைத் தவிர வேறு வழியில்லை. சாதி என்ற அஸ்திவாரத்தின் மீது ஒரு தேசத்தைநிர்மாணிக்க முடியாது; சாதியமைப்பின் மீது நிர்மாணிக்கப்படும் எதுவும் விரைவிலேயே விரிசல் கண்டுவிடும் என்று அவர் கூறினார். சாதியை ஒழிக்கக் கலப்பு மணமே வழி என்று அவர் கூறினார். விதிகள் நிறைந்த சமயத்தைக் காட்டிலும், கோட்பாடுகள் கொண்ட சமயமே தேவை என்றார் அவர். பிரிட்டனின் அரசியல் சிந்தனையாளரான எட்மண்ட் புரூக் கூறியவாறு, உண்மையான சமயமே சமூகத்துக்கு அடித்தளமாகும் என்றும், அதில்தான் உண்மையான அரசு அமையும் என்றும், கருதிய அம்பேத்கர். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய கோட்பாடுகளைக் கொண்ட ஜனநாயகமே உண்மையான சமயம் என்று நம்பினார்.

**பதவி விலகல்:**

இந்து சமூகத்தைச் சீர்திருத்துவதற்காக அம்பேத்கர் தமது பாணியிலேயே செயல்பட்டார். நேரு அமைச்சரவையில் சட்ட அமைச்சராக இருக்கையில், வாரிசுரிமை, திருமணம், மணமுறிப்பு, மகளிர் நிலை போன்ற இந்து சமய நெறிகளை ஒழிப்பதற்காக இந்து சட்ட வரைவு ஒன்றைக்கொண்டு வந்தார். சுயநல சக்திகளால் அவரது முயற்சி வெற்றி பெறவில்லை. எனவே 1950-ஆம் ஆண்டு, அமைச்சரவையிலிருந்து அவர் விலகினார்.

**புத்தர் நெறி:**

சுயமரியாதையையும், தனிமனித கண்ணியத்தையும் உயிருக்கும் மேலாகப் போற்றிய அண்ணல் அம்பேத்கர், சமத்துவத்தைப் போதித்த அருளாளர் புத்தரின் நெறியைப் பின்பற்றி, பௌத்த சமயத்துக்கு மதம் மாறினார். அவசரக் கோலத்தில் அவர் இம்முடிவை மேற்கொள்ளவில்லை. இஸ்லாம், சீக்கியம், மார்க்சிசம் உள்ளிட்ட பிறசமய நெறிகள் பற்றி விரிவான விவாதங்கள் நடத்திய பின்னரே புத்தமதத்தைத் தழுவினார். புத்தரின் நெறி மனிதனின் மனப்போக்கை மாற்றும் நெறி என்றும், மனிதனின் செயல்கள் எதுவாயினும் அது அவனது விருப்பமின்றி நிகழ்வதில்லை என்றும் கூறி, தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கப்பட்டவர்களுக்கு ஏற்றது புத்த சமய நெறியே என்று கூறினார். அதனால்தான் அம்பேத்கர், தான் இறப்பதற்கு இரண்டாண்டுகளுக்கு முன்னர்-1954-ஆம் ஆண்டில் கூறினார்: "உங்களுக்கு என்னுடைய இறுதியான அறிவுரை ... கற்பிப்பீர், போராடுவீர்,! ஒன்றுபடுவீர்... நமது போராட்டம் அதிகாரத்திற்கோ, சொத்து சுகங்களுக்கோ அல்ல;



## அந்த வாழ்வுதான் எந்த நாள் வரும்?

நாங்கள் சாந்தி நிகேதனுக்குச் சென்றிருந்த சமயம், அதிகாலையில் அங்குள்ள தெருக்களில் நாங்கள் நடைபோட்டபோது, சாந்தி நிகேதன் நிறுவனத்தைச் சேர்ந்த சில ஊழியர்கள் எங்களுடன் வந்து, "இதுதான் குருதேவர் தினமும் நடந்து செல்லும்பாதை! இதுதான் குருதேவர் அமரும் இடம்" என்றெல்லாம் பற்பல செய்திகளைச் சொல்லிக் கொண்டே வந்தார்கள்.

அந்தச் சமயத்தில் சிலர் சைக்கிள்களில் கூடைகளை வைத்துக் கொண்டு அந்தப் பாதை ஓரங்களில் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தோம். காய்கறிகளை விற்பனை செய்கிறார்களோ என்று நாங்கள் நினைத்தோம். பின்னர்தான் புரிந்தது அவர்கள் எல்லோரும் தாகூரின் திருவுருவப் பொம்மைகளை சைக்கிளில் கொண்டு வந்து விற்பனை செய்கிறார்கள் என்பது. மக்கள் அந்த பொம்மைகளை ஆர்வத்துடன் வாங்குகின்றனர். சில மணி நேரங்களில் அவர்கள் அந்த பொம்மைகளை எல்லாம் விற்றுவிட்டு அங்கிருந்து கிளம்பி விடுகிறார்கள். அந்தக் காட்சியைக் கண்டதும் வங்க மண்ணிற்கு - வங்க மக்களுக்கு தாகூரிடம் உள்ள பேரன்பு எனக்கு விளங்கியது. அந்தச் சிறப்பு பாவேந்தருக்கு எந்நாளில் கிடைக்கும் என்ற ஏக்கம் என்னுள் எழுந்தது.

டாக்டர் ஆறு. அழகப்பன்

(திருச்சியில் பாவேந்தர் நூற்றாண்டு தொடக்க விழாக் கருத்தரங்கில்)

—தகவல்: த.பி.



பம்பாயில் நடைபெற்ற அனைத்திந்திய தாழ்த்தப்பட்டோர் சம்மேளன மாநாட்டில் - நீதிக்கட்சி இளைஞரணித் தலைவரும் அனைத்திந்திய தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத் தலைவருமான ராவ்சாகிப் என். சிவராஜ் அவர்களுடன் அண்ணல் அம்பேத்கர்.

—படம் உதவி: என்.ஏ. கருணாகரன்

மனித ஆளுமையைப் புனரமைக்கவே நாம் போராடுகிறோம்''.

**அரசியல் சாசனச் சிற்பி:**

அரசியலமைப்பு வரைவுக் குழுவின் தலைவராக அண்ணல் அம்பேத்கர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அரிஜன் ஒருவருக்கு அளிக்கப்பட்ட சம்பிரதாய வாய்ப்பு அன்று அது. அறிவார்ந்த நீதித்துறை வல்லுநர் ஒருவரின் அரசியல் சாசன ஞானத்தை ஏற்றுக் கொள்கின்ற நடவடிக்கை அது. உலக நாடுகளின் அரசியல் சாசனங்களைக் கற்றுக் கரைதேர்ந்த அவர், இந்திய அரசியல் அமைப்புக்கு ஒரு வலுவான அடிப்படையே உருவாக்கினார்.

நமது அரசியல் சாசனத்தில் அடிப்படை உரிமைகள், நீதித்துறை பரிகாரங்கள் போன்றவை அம்பேத்கரின் கை வண்ணத்தால் மிளிர்ந்தன. சமஷ்டி குணாதிசயங்களைக் கொண்டிருந்தாலும் நமது அரசியலமைப்பில், மத்திய ஆட்சி முறையை அவர் பெரிதும் வலியுறுத்தினார். நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காக்க மத்தியில் அதிகாரம் குவிந்த ஆட்சியமைப்பே தேவை என்று அவர் நம்பினார்.

ஜனநாயக நெறி தழைத்தோங்க வேண்டுமானால், நாட்டின் அரசியலமைப்பு எவ்வாறிருக்க வேண்டும் என்பது மட்டுமின்றி, அந்நாட்டின் பொருளாதார அமைப்பும் எவ்வாறிருக்க வேண்டும் என்று விளக்கப்பட வேண்டுமென்று அவர் கூறினார். ஊராட்சி பற்றிச் சொல்லப்பட்ட போது தனிமனிதனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்று அவர் வாதாடினார்.

மதச்சார்பற்ற அரசு என்பதற்கு மக்களின் சமய நம்பிக்கைகளை நாம் பரிசீலிப்பதில்லை என்று பொருளல்ல; மக்களின் மீது எந்த ஒரு சமயத்தையும் திணிக்காத நிலையே மதச்சார்பற்ற அரசு என்று அம்பேத்கர் கூறினார். அரசின் நெறிமுறைக் கோட்பாடுகள் சோஷலிஸ நெறியில் செயல்படவில்லை என்றால், சோஷலிஸம் என்பதற்கே பொருளில்லை என்று அவர் கூறினார். அரசியலமைப்பு வெற்றிகரமாகச் செயல்பட வேண்டுமானால் எதிர்க்கட்சிகள் வலுவானவையாகவும் விழிப்புணர்வுடனும் செயல்பட வேண்டும் என்று அவர் கூறினார். அரசியலமைப்பு வெற்றி பெறாவிட்டால் அதற்குக் காரணம் மக்கள் தமது நிலையிலிருந்தும் இழிவான நிலைக்குச் செல்வதாகவே இருக்கும் என்றும் அதனால் அமைப்பைக் குறைசாட்ட வேண்டாம் என்றும்அவர் கூறினார்.

வகுப்புவாதம், மொழிவாதம் போன்றவற்றால் எதிர்ப்படும் அபாயங்களை உணர்ந்திருந்தார் அவர். இந்தியா உண்மையிலேயே ஜனநாயக நாடாக இருக்கவேண்டும் என்றால் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய கோட்பாடுகளே வேண்டியவை என்றும், ஜனநாயகம் வெற்றிபெற வேண்டுமானால், சமுதாய சமத்துவமும், பொருளாதார நீதியும் அடிப்படைத் தேவைகள் என்றும்அவர் கூறினார். அவருடைய வாழ்க்கைப் போராட்டத்தை அவர் அடிக்கடி கூறுவது போல் சொல்வதென்றால் அவர் பேச்சு உண்மையைப்போல் சுடும்; நீதியைப்போல் எதற்கும் விட்டுக் கொடுப்பதில்லை.

**(பத்திரிகைத் தகவல் அலுவலகம்)**

# தமிழ்நாடு மின்சார வாரியம்

## கோயம்புத்தூர் நீர் வழங்கு திட்டம்

## (உலக வங்கி உதவியுடன்)

# ஒப்பந்த அறிக்கை

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக, கீழே குறிப்பிட்டுள்ள பணிக்கு மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் (இரு பிரிவு ஒப்பந்தம்) **மூன்று நகல்களோடு** மேற்பார்வை பொறியாளர்/பொதுவியல் புனல் மின் அலுவலகம், இரண்டாவது தளம்/கிழக்கு, நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை, சென்னை-2 என்ற முகவரியில் கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | பணியின் பெயர் | கோயம்புத்தூர் நீர் வழங்கு திட்டம்- பில்லூர் நீர் தேக்கத்திலிருந்து; கோயம்புத்தூர் உள்ளாட்சி திட்டம் மற்றும் ஊரக பரப்புகளுக்கு நீர் வழங்கு திட்டத்திற்கான சுத்திகரிக்கப்படாத மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீர் சுரங்கங்கள் அமைத்தல். |
| 2. | ஏறத்தாழ பணியின் மதிப்பு | ரூ.400 இலட்சங்கள் மட்டும். |
| 3. | ஒப்பந்த வரை எண். | SECH. 16. |
| 4. | பிணை வைப்புத் தொகை | ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்). |
| 5. | ஒப்பந்தம் பெற்றுக்கொள்வதற்கான இறுதி நாளும், நேரமும். | 1990 ஜூலை 18-ஆம் நாள் புதன்கிழமை நண்பகல் 12.00 மணிவரை. |
| 6. | தொழில் நுட்ப இனங்களுக்கான ஒப்பந்தங்கள் திறப்பதற்கான நாளும், நேரமும். | 1990 ஜூலை 18-ஆம் நாள் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி. |
| 7. | ஒப்பந்த வரையறை ஒன்றின் விலை தமிழ் நாட்டிற்குள் (அல்லது) தமிழ் நாட்டிற்கு வெளியே. | (அனைத்து வரிகள் உட்பட) ரூ.844/- (ரூபாய் எண்ணூற்று நாற்பத்தி நான்கு மட்டும்). |
| 8. | ஒப்பந்தத்தை அனுப்புதல் | இது இரு பிரிவு ஒப்பந்த அறிவிப்பு. ஒப்பந்தங்கள் ஒப்பந்த வரையறையில் உள்ள பகுதி A. 3-ன் 17வது பிரிவில் கண்டுள்ள விதிகளின்படி அனுப்பப்பட வேண்டும். இவ்விதிமுறைகளுக்கு முரணாக சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும். |

**ஒப்பந்தப் புள்ளிக்காரர்களுக்கு தேவையான முன் தகுதிகள் கீழ்வருமாறு:**

1. ஒப்பந்தம் கொடுப்பவர், குறைந்த பட்சம் ஒவ்வொன்றும் 1000 மீட்டர் நீளமுள்ள இரண்டு சுரங்க வழிகளை வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்க வேண்டும்.
2. ஒப்பந்தம் கொடுப்பவர், குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு 150 மீட்டர் நீளமான சுரங்க வழி தொடர்ந்து இரண்டு மாதத்திற்கு நிறைவேற்றியிருக்க வேண்டும்.
3. ஒப்பந்தம் கொடுப்பவர், கடந்த மூன்று வருமான ஆண்டுகளில் வருடந்தோறும் குறைந்த பட்சம் வேலை செய்து முடிந்த அளவு (TURN OVER) ரூ.2.50 கோடிக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தம் கொடுப்பவர், வெடிமருந்து கொள்முதல் செய்வதற்காகவும், தகர்க்கவும், ஏற்றிச் செல்லவும், வெடி மருந்து கிடங்கு வைப்பதற்காகவும், உரிமம் வைத்திருத்தல் வேண்டும்.

ஒப்பந்த வரையறை வேண்டுவோர், தலைமை உள்தணிக்கை அலுவலருக்கு (முதல் தளம், கே.ஆர்.ஆர். மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை, சென்னை-600 002) ஒப்பந்த வரையறைக்கான விலையை பணமாகவோ/பணவிடை வாயிலாகவோ, ஒப்பந்த வரையறை எண் குறிப்பிட்டுச் செலுத்திப் பெறப்பட்ட ரசீதை இணைத்து, முழு முகவரியுடன் விண்ணப்பித்துக் கொண்டு, மேற்பார்வைப் பொறியாளர்/பொதுவியல் புனல் மின் அலுவலகத்தில் 25.6.1990 காலை 10.30 மணி முதல் 16.7.90 மாலை 5.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்த வரையறையின் விலைத் தொகை எக்காரணத்திற்காகவும் திரும்பத் தரப்படமாட்டாது. அஞ்சல் வாயிலாக வேண்டுவோர் ஒவ்வொரு ஒப்பந்த வரையறைக்கும் ரூ.100/- கூடுதலாக செலுத்த வேண்டும். அஞ்சலில் அனுப்பப்படும் ஒப்பந்த வரையறை தவறிப் போனாலும், காலதாமதம் ஆனாலும் மின்சார வாரியம் பொறுப்பு ஏற்காது. ஒப்பந்த வரையறை மாற்றத்தக்கதல்ல.

பிணை வைப்புத் தொகையின்றி வந்து சேரும் ஒப்பந்தங்களும், குறித்த காலத்திற்குப் பின்னர் வந்து சேரும் ஒப்பந்தங்களும் ஏற்கப்படாமல் விடுவதற்கு ஏதுவாகும்.

குறைந்த மதிப்பீடு கொண்ட அல்லது மற்ற எந்த ஒரு ஒப்பந்தத்தையோ ஏற்றுக் கொள்வதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னை கட்டுப்படுத்திக் கொள்ளாது. எக்காரணமும் தெரிவிக்காது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் தள்ளுபடி செய்யும் முழு உரிமை இவ்வாரியத்திற்கு உண்டு. எந்த ஒரு ஒப்பந்த வரையறையில் கண்டுள்ள எந்த ஒரு நிபந்தனையையும், தேவை எனக் கருதும்போது தளர்த்தவும், கைவிடவும் உள்ள உரிமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கே உரியது.

**தலைமைப் பொறியாளர்/பொதுவியல் வடிவமைப்பு**
சென்னை-2.

டிஐபிஆர்/1366/எம்எஸ்/90/அக்கார்ட்

# கண்ணாடிக் குச்சியில் கைவண்ணம்



சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்பார்கள்.

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்று கூறுவதுமுண்டு.

திறமை இருந்தால் எவரும் வாழ்க்கையில் உயரலாம்.

கண்ணாடிக் குச்சியைக் கொண்டு, கைவண்ணம் காட்ட முடியுமா? திறமை இருந்தால் எதுவும் முடியும்.

கண்ணாடி நமக்குப் பலவகையில் பயன்படுகிறது. முகம் பார்ப்பதற்கு மட்டுமல்லாமல், மருத்துவம், பொறியியல் போன்ற பல்வேறு துறைகளுக்கும் அது பெருமளவில் பயன்படுகிறது.

அதேபோல, கண்ணைக் கவரும் பலவகையான பொருள்களைச் செய்யவும், குறிப்பாக பொம்மைகள் செய்யவும் அது பயன்படுகிறது.

கண்ணாடிக் குச்சியைக் கொண்டு, கைவண்ணம் காட்டும் இருவரை அண்மையில் சந்தித்தோம்.

அதோ, ஒருவர் தீ ஜ்வாலையில் கண்ணாடிக் குச்சியைக் காட்டுகிறார். வெப்பத்தில் அது இளகுகிறது. ஒரு சில நிமிடங்களில் அது மானாக, மயிலாக உருவம் பெறுகிறது!

கண்கட்டு வித்தையோ என நாம் வியப்புறும்போது, அந்தக் கைவினைஞர் புன்னகைத்தவாறே நமக்கு விளக்கினார்.

''இந்தக் கண்ணாடிப் பொம்மைகள் செய்வதற்கு முக்கிய மூலப்பொருள், கெட்டியான கண்ணாடிக் குச்சிகள்தாம். இவை பம்பாயிலிருந்து தருவிக்கப்படுகின்றன.

இந்தப் பொம்மைகளைச் செய்வதற்குக் கற்பனையும்,





கைத்திறமையும் மிக மிக அவசியம்.

இந்தக் கலையில் இரட்டையர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

ஒருவர் திரு ஆர். சுப்பிரமணியம், மற்றவர் திரு கே.பி. விநாயகம்.

கண்ணாடிப் பொம்மைகளைச் செய்யும் திரு ஆர். சுப்பிரமணியம் கூறுகிறார்.

''சமையல் காஸ் ஜ்வாலை மூலம், கண்ணாடிக் குச்சியை இளக வைத்து, அந்தப் பக்குவத்திலேயே நாம் மனத்தில் நினைக்கின்ற பொருளை, கற்பனைத் திறனைக் கொண்டு, நீட்டியும் மடக்கியும், வளைத்தும் நிமிர்த்தியும் உருவாக்கலாம்.''

அருகே பார்க்கிறோம். இவர் கைவண்ணத்தால் உருவான பறவைகள், விலங்குகள், மனிதர்கள் என்று சிறிய பெரிய அளவில் கண்ணாடிப் பொம்மைகள் காட்சியளிக்கின்றன.

இந்தப் பொம்மைகள் எடைக்கேற்ப விலை நிர்ணயிக்கப்படுகிறது. குறைந்தது 3 ரூபாயிலிருந்து அதிகப்பட்சம் 3,000 ரூபாய் வரை இவை விற்கப்படுகின்றன.

இந்தப் பொம்மைகள் பூம்புகார், காதி கிராப்ட் ஆகியவற்றின் மூலம் டெல்லி, பம்பாய், குஜராத், ஆந்திரா, கேரளா, கர்நாடகா முதலான மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

சென்னை அமைந்தகரையில் தயாராகும் இந்தக் கலைப் பொருட்களை மேலை நாட்டுப் பயணிகளே விரும்பி வாங்கிச் செல்கின்றனர் என்றால், இதன் நேர்த்தியை என்னவென்று சொல்வது?

கண்ணாடிக் குச்சிப் பொம்மைகள் தவிர, காகித, மரப் பொம்மைகளையும் இவர்கள் தயாரிக்கிறார்கள்.

மரப் பொம்மைகளுக்குத் தேவையான 'வெப்பாலை' என்கிற ஒருவகை மரம், ஆந்திர மாநிலத்திலேயே சிறப்பாகக் கிடைக்கின்றதாம்.

மரப் பொம்மைகளுக்குத் தேவையான மூலப் பொருள்கள், அரக்கு, பவுடர், வர்ணம் ஆகியவையாகும்.

ஆந்திரத்தில் கிடைக்கும் இந்த மரங்கள் தரமாக இருப்பதால், அங்கேயே ஒரு நிறுவனத்தை வைத்து இவர்கள் பொம்மைகளைத் தயாரிக்கிறார்கள். அதாவது, அவற்றுக்கு வண்ணம் தீட்டுவதும் அங்கேயே; அங்கு செய்யப்படும் பொம்மைகளின் உதிரிப் பாகங்கள், சென்னைக்குக் கொண்டு வரப்பட்டு, பொருத்தப்படுகின்றன.

இந்த வேலையில் ஈடுபட்டு வருபவர்தான் திரு கே.பி. விநாயகம்.

சென்னைத் தீவுத் திடலில் நடக்கும் இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சியிலும், காதி கிராப்ட், பூம்புகார் ஆகியவை நடத்தும் பொம்மைக் கொலுவிலும் இந்தக் கைவினைஞர்கள் பங்கு கொண்டு தம் கைத் திறமையைக் காட்டி வருகிறார்கள்.

அண்மையில் கோயம்புத்தூரில் நடந்த, செய்தி-மக்கள் தொடர்புத் துறைப் பொருட்காட்சியிலும் இவர்களது காட்சி அரங்கு இடம் பெற்றிருந்தது.

''இந்தக் கலை அருகி வருகிறது. இது பெருகி வளர பொதுமக்கள் எங்களுக்கு நல்லாதரவு நல்கிட வேண்டும்.

''அரசுப் பொருட்காட்சிகளில் எங்களுக்கும் வாய்ப்புத் தந்து வருவதற்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்கின்றனர் மகிழ்ச்சியுடன் இந்த இரட்டையர்கள்.

—பி.வி.கிரி.

### பாவேந்தர் நூற்றாண்டு:



- தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு
சம்பாத்யம் இவையுண்டு தானுண் டென்போன்
சின்னதொரு கடுகுபோல் உள்ளம் கொண்டோன்!
- ஒருவன் புகழ்வான் ஒருவன் இகழ்வான்
இருவருக்கும் அப்பால் இரு.
- உடைந்திடக் கூடாது நெஞ்சம் - நீ
உண்மைக்குப் பாடுபடும் போதில்!

# நூல் நயம்

## SOCIO-POLITICAL PHILOSOPHY OF TIRUVALLUVAR

**ஆசிரியர்: எம்.எஸ். வெங்கடாசலம்**
**வெளியீடு:**
வி.எஸ்.பி. வெளியீட்டகம்,
திருச்சி 17.

விலை: ரூ 125 பக்கம்: 150

வள்ளுவர் பழையவர்; ஆனால் வள்ளுவம் இளையது. முன்னைப் பழமைக்கும் பின்னைப் புதுமைக்கும் பொருத்தமான பொருட்களைப் பற்றி அது பேசுவதால், காலத்தின் சுருங்கைகளுக்கும் அப்பாற்பட்ட கன்னித் தன்மையோடு அது காட்சி யளிக்கிறது.

பிளேட்டோவையும், கௌடில் யரையும் தெரிந்திருக்கும் உலகம் திருவள்ளுவரைத் தெரிந்து கொள் ளாமல் போனதற்கு 'மறைவாக நமக் குள்ளே பழங்கதைகள் பேசுகிற மனப்பான்மை'யே காரணம். இந்த நிகழ்கால நீரோட்டத்திலிருந்து விடுபட்டு, உலகச் சிந்தனையாளர் வரிசையிலே வள்ளுவனை உட்கார வைக்கிற ஒரு முயற்சியை மேற் கொண்டிருக்கிறார் திரு எம்.எஸ். வெங்கடாசலம் அவர்கள். அதுவே 'திருவள்ளுவரின் சமூக-அரசியல் தத்துவம்' என்னும் இந்த ஆங்கில நூல்.

இதுபோன்ற நூல்களைப் படைப்ப வர்க்குத் தேவையானவை நான்கு:

1) மூலநூலில் தோய்வதற்கும் ஆய் வதற்கும் தேவையான மொழிப் புலமை.

2) எழுதப் புறப்பட்ட துறைகளைப் பற்றிய ஆழ்ந்த அறிவு.

3) பலதுறை ஞானம் - பட்டறிவு

4) எழுதுகின்ற மொழியை இலா வகமாகக் கையாளுவதில் இணை யற்ற தேர்ச்சி.

இந்த நாற்பால் திறமும் நன்கு கைவரப்பெற்ற திரு எம்.எஸ். வெங்கடாசலம் முப்பாலை எப் பாலும் கொண்டு செல்லும் தமது முயற்சியில் முத்திரை பதித்திருக் கிறார். பத்தொன்பது பகுதிகளில் சமூகம் - அரசியல் பற்றிய வள்ளு வச் சிந்தனைகளை, வரலாற்று நாய கராம் உலகப் பெரியார்களின் சிந் தனைகளோடு ஒப்பிட்டுக் காட்டு கின்ற இந்த ஆய்வு நூல் ஆராய்ச்சி உலகுக்கு ஓர் அரிய வரவு.

நூலின் அச்சும் அமைப்பும் கண்ணுக்கு விருந்து. நூல் நுவலும் பொருள் - கருத்துக்கு விருந்து; சமுதாய நோய்களுக்குச் சரியான மருந்து!

**- இளந்தேவன்.**

## சுற்றுலாச் சுகம்

**ஆசிரியர்: மு. குப்புசாமி எம்.காம்.**
**வெளியீடு:**
ஜெயசக்தி பதிப்பகம்
45A, பம்மல் நெடுஞ்சாலை
பம்மல், சென்னை-600 075.

விலை: ரூ.14 பக்கம்: 121

பெரும்புகழ் படைத்தவர்கள்தான் சுற்றுலா சென்றுவந்த செய்தியை நூலாக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. தான் கண்டதை எடுத்துச் சொல்லும் உணர்வு- திறன்-பெற்ற எவரும் தமது சுற்றுலா அனுபவத்தை நூலாக்கலாம். அந்த வகையில் அரசு ஊழியர் ஒருவர், தமது நண்பர்களு டன் மேற்கொண்ட சுற்றுலாவின் சிறப்பை, ஒரு நூலாக உலாவரச் செய்துள்ளார். இந்நூலைப் படிக்கும் போது நாமும் அந்தச் சுற்றுலாக் குழுவில் இடம் பெற்றுள்ள உணர்வே நமக்கு ஏற்படுகிறது.

புகழ்பெற்ற நகரங்கள், பாடல் பெற்ற தலங்கள், வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர்கள் ஆகியவை குறித்து விளக்கமான முறையிலே தகவல் களைக் கொடுத்துள்ளார்.

இந்நூலில் புவியியல் இருக்கிறது, புராணக் கதை இருக்கிறது. வரலாறு இருக்கிறது, வண்ணத் தமிழ் இலக்கியம் இருக்கிறது. சுற்றுலாச் சுகம் என்ற தலைப்பே நமது உள் ளத்தில் சுகமான உணர்வை உரு வாக்குகிறது.

**- தமிழ்ப்பித்தன்**

## கடலுணவு

**ஆசிரியர்: கடலூர். கே. வேலாயுதம்**

**வெளியீடு:**
கே.என்.ஆர். பப்ளிகேஷன்ஸ்.
20 ஏ.ஜே. காலனி 2வது தெரு
சென்னை-600 013.

விலை: ரூ.15.50 பக்கம்: 128

நூலின் தலைப்புதான் கடலுணவு என்றிருக்கிறதே தவிர உள்ளே ஏகப்பட்ட செய்திகளை நயமான மேற்கோள்களோடு புள்ளி விவரங்களோடு கூறியிருக்கிறார் ஆசிரியர். எல்லாம் கடலுணவு மிகச் சிறந்தது, பயன் தரக் கூடியது என்பதை வலியுறுத்தவே.

உலகமீன் செய்தி, கருவாடு, ஓடு யிர்கள், மெல்லுடலிகள், கடல் தாவரங்கள் ஆகியவை சுவையான செய்திகள்.

**—என. குமாரசாமி**

## கவிஞர் முத்தெழிலன் கவிதைகள்

**ஆசிரியர்: மயிலை முத்தெழிலன்**
**வெளியீடு:**
மலர்முகம் பதிப்பகம்,
43, கோதண்ட ராமர் கோயில் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை-33.

விலை: ரூ.12/- பக்கம்: 112

மரபுக் கவிதைக் கனிகள் காய்த்துத் தொங்கும் தோட்டமாக இந்நூல் விளங்கு கிறது. எளிய இனிய நடையில் அமைந் துள்ள மரபுக் கவிதைகளுக்கு நடுவே ஓரிரு புதுக்கவிதைகளும் காட்சி தரு கின்றன. அவற்றைத் தவிர்த்திருக்கலாம்.

பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன், வாணிதாசன் போன்ற கவிஞர்களும் அண்ணல் காந்தி, இந்திரா காந்தி, சர்.ஏ. ராமசாமி, டாக்டர்.அ.சிதம்பரநாதன் போன்ற பெருமக்களும் கவிதை மலர் களால் பூஜிக்கப்பட்டுள்ளனர், இந் நூலில்.

அகத்துறையையும் நூலாசிரியர் மறக்க வில்லை. 'கொத்தன்' என்னும் தலைப் பில் உள்ள கவிதை, நயமாக உள்ளது. உள்ளுறை உவமம் போல - கொத்தனை

வைத்தே சுவையான அகப்பாடலை எழுதியுள்ள கவிஞரைப் பாராட்ட வேண்டும்.

## கம்பர் காட்டும் பாலைநிலம்

**ஆசிரியர்: புலவர் முத்து. எத்திராசன்.**
**வெளியீடு:**

அருண் புத்தகாலயம்,
104, பெரியார் தெரு, எம்.ஜி.ஆர்.நகர்.
சென்னை-600 078.

விலை:ரூ.12/- பக்கம்:112

தமிழ் மக்கள் நிலத்தை ஐந்து வகையாகப் பிரித்து அவற்றிற்குரிய ஒழுக்கங்களையும் வகுத்துள்ளனர். அந்த ஐந்து நிலங்களில் 'பாலை'யும் ஒன்று. தொல்காப்பியர் காலத்தில் பாலை நிலம் சுட்டப் படவில்லை. அவருக்குப் பின்னர் முல்லையும், குறிஞ்சியும் முறைமையில் திரிந்து பாலையாகியது.

பாலை என்றாலே, அது துன்பம் - கொடுமை, பிரிவுத்துயரம் போன்றவற்றின் உருவமாகத் திகழ்வது என்பது தெளிவு.

கம்பர் தமது இராமாயண காவியத்தில் பாலையைக் குறித்து வருணித்துப் பாடிய பாடல்களின் நயத்தை நூலாசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார் இந்நூலில். 'கம்பன் காட்டும் பாலை நிலம்' எனத் தலைப்பு இருந்தாலும், சங்கப் புலவர்கள் பலர், பாலை குறித்துப் பாடிய பாடல்களும் நூலில் விளக்கப் பட்டுள்ளன. மொத்தத்தில் இது ஓர் ஒப்பற்ற ஒப்பியல் நூலாகவே விளங்குகிறது. நூலின் நடை நம்மைக் கவர்கிறது.

## காவிய நாயகர் கலைஞர்

**ஆசிரியர்: கலவை. பா. வரதன்**
**வெளியீடு:**

சுந்தரா பதிப்பகம்,
27 ஏ, நடுசெங்குந்தர் தெரு,
கலவை, வடஆர்க்காடு மாவட்டம்.

விலை:ரூ.10/- பக்கம்:103

முதல்வர் கலைஞர் அவர்களின் பல்துறைத் திறன் குறித்தும், அவரது வாழ்க்கை ஏட்டின் அரிய நிகழ்ச்சிகள் சிலவற்றைத் தொகுத்தும் இந்நூலில் எழுதியுள்ளார் நூலாசிரியர்.

சிறுவயது முதலே கலைஞரிடம் காணப் பட்டு வந்த இயக்கத் தொண்டு, அறப் போர் முறை, வெற்றிக் கொடி நாட்டும் திறன் ஆகியவை நன்கு விளக்கப்பட்டுள்ளன இந்நூலில். பேரறிஞர் அண்ணாவும் கலைஞரும் முதன் முதலாகச் சந்தித்த நிகழ்ச்சி மிகவும் சுவை ததும்பச் சொல்லப் பட்டிருக்கிறது.

கலைஞரின் மேடைப் பேச்சுத்திறன், எழுத்தாற்றல், கவிதைத் திறன், பத்திரிகைப் பணி, திரைப்படச் சாதனை, தேர்தல் ஈடுபாடு ஆகியவற்றைத் தக்க சான்றுகளுடன் நிறுவியுள்ளார் நூலாசிரியர். நூலின் நடை - மரபுக் கவிதை நூல் ஒன்றைப் படிக்கும் மகிழ்ச்சியை நமக்கு அளிக்கிறது.

**— எஸ். எஸ். சுந்தரம்**

## புத்தகங்கள்

புத்தகங்கள் இருவகைப்படும். ஒரு வகை பொழுதுபோக்க உதவுகிறவை. மற்றொரு வகை வாழ்க்கைக்கு உதவுகிறவை.

—ரஸ்கின்

உலகில் சாகாவரம் பெற்ற பொருள்கள் புத்தகங்களே.

—கதே

நான் என்னைப் பொறுத்தவரையில் சிந்தனையற்றவனாய் இருந்தாலும் எந்தப் புத்தகமும் என் சிந்தனையைத் தூண்டத் தவறுவதில்லை.

—சார்லஸ் லாம்ப்

## பத்தாவது வகுப்பு படித்து முடித்தவர்களுக்குத் தொழிற்பயிற்சி வாய்ப்புகள்

**ஆசிரியர்: கேப்டன் மு. சிங்கராஜா**
**வெளியீடு:**

ரத்னபாலா மீடியா என்சினியர்ஸ்,
100, சி.குமாரசாமி ராஜா நகர்,
ராஜபாளையம்-626108.

விலை:ரூ.14/- பக்கம்:92.

தொழில் நுணுக்கத்தில் ஆர்வம் உள்ள மாணவர்கள் பத்தாவது வகுப்பு படித்து முடித்ததும் மேற்கொண்டு +2 படிக்க முடியுமா, பட்டதாரியாக முடியுமா, என்றெல்லாம் சிந்திப்பார்கள். பட்டதாரியாக முடியவில்லையே என்று சிலர் ஏங்குவார்கள். அத்தகைய மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டி நூலாக ''பத்தாவது வகுப்பு படித்து முடித்தவர்களுக்குத் தொழில் பயிற்சி வாய்ப்புகள்'' என்ற இந்நூலைப் பொறியாளர் கேப்டன் மு. சிங்கராஜா அவர்கள் எழுதியுள்ளார். நூலாசிரியர் எளிய இனிய நடையில் தொழிற் பயிற்சி சம்பந்தமாக எல்லா விவரங்களையும் தொகுத்து இந்நூலில் அளித்துள்ளார். தொழிற் பயிற்சி நிலையங்கள் பற்றிய முழு விவரங்கள், பயிற்சி வகுப்பில் சேர்வதற்கான விதிமுறைகள், சலுகைகள், இட ஒதுக்கீடு போன்ற பல விவரங்களை அரிதில் முயன்று சேகரித்துத் தொகுத்து, இந்நூலாசிரியர் தந்துள்ளார்.

தொழில் நுணுக்கப் பயிற்சி தொடர்பாக மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் அரிய யோசனைகளை அளிக்கும் சிறந்த பயன் உள்ள நூல் இது.

**—இராச மனோகரன்.**

## இலக்கியச் சிந்தனைகள்
### நூற்களஞ்சியம்: தொகுதி-1

ஆசிரியர்:
பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை.

வெளியீடு:
வையாபுரிப் பிள்ளை நினைவு மன்றம்,
2, 4-வது குறுக்குச் சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை-28.

விலை:ரூ.42 பக்கம்:532

இலக்கிய தீபமாய் விளங்கிய பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களின் ஆழ்ந்த புலமையில் விளைந்த அற்புத மலர்களே இக்கட்டுரைத் தொகுப்பு.

பேராசிரியர் அவர்கள் பல்வேறு கால கட்டங்களில் எழுதிய அரிய இலக்கியக் கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இந்த நூல் ஐந்து தொகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. முதற் தொகுதியில், இலக்கியச் சிந்தனைகளின் பிழிவைக் காண முடிகிறது. இரண்டாம் தொகுதியில், சங்க இலக்கியம் குறித்த தொகுப்பு கொடுக்கப்பட்டுள்ளது. கடைச் சங்கம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை பற்றிய விளக்கமும், சங்ககாலச் செய்யுட்களின் சிறப்பும் கவிதை நயத்தோடு கூறப் பட்டுள்ளன.

இலக்கியச் சுவையில் இமயமாய் விளங்குவதுமுத்தொள்ளாயிரம். இது இந்நூலில் அழகுற விவரிக்கப்படுகிறது. இது குறித்த மூன்று கட்டுரைகள் நம் சிந்தனைக்கு விருந்தூட்டுவனவாக அமைந்துள்ளன.

மூன்றாம் தொகுதியில், பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைப் பற்றிய அரிய ஆராய்ச்சிக் குறிப்புகள், தெளிவுரைகள் இடம் பெற்றுள்ளன.

நான்காம் தொகுதியில், முற்காலக் காவியங்களான சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி ஆகியவை சிறப்பித்துக் கூறப் படுகின்றன

ஐந்தாம் தொகுதியில், புறத்திரட்டு முதலான தொகை நூல்கள் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இதில் மறைந்துபோன நூல்கள் குறித்தும், முழுதும் அகப்படும் நூல்கள் குறித்தும் பேராசிரியரின் அரிய குறிப்புரைகள் பொதிந்துள்ளன.

தமிழ் இலக்கியக் கடலில் ஆழ்ந்தெடுத்த முத்துக்கள் கோத்த மாலையாக இந்நூல் விளங்குகிறது.

தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரியும் இந்தத் தொகுதி, ஆராய்ச்சி மாணவர்க்கு மட்டுமல்ல, தமிழ் ஆர்வலர்க்கும் பெரிதும் துணை புரியும் என்பது உறுதி.

**-பி.வி.கிரி**

அரசிடம் கையேந்தி நிற்காமல், அரசியல், சட்டம், பொருளாதாரம், வரிவிதிப்பு, நிர்வாகம் போன்ற வற்றில் மாநில அரசுகள் உரிய தன்னாட்சி உரிமையைப் பெற்றிருக்க வேண்டும்'' என்பது தேசிய முன்னணியின் தேர்தல் வாக்குறுதியாகும். இவ்வகையில், மத்திய அரசு, அனைத்து முதலமைச்சர்களுடனும் கலந்தாலோசித்து, மத்திய-மாநில அரசுகளின் உறவுகள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்படும் என்று, தேசிய முன்னணி அரசு உறுதி அளித்துள்ளது. அந்த அடிப்படையில், பல்வேறு மாநிலங்களில் வாழும் மக்களின் எண்ணங்களுக்கு மதிப்பளிக்கும்வகையில், இந்திய ஆட்சி முறையின் கூட்டாட்சித் தன்மை வலுப்படுத்தப்படும். இப்பொறுப்பை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படவேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

தற்போதைய திட்ட அமைப்பில், மாநிலங்களின் மூலதனச்செலவு பெரும்பாலும் பாசனம், மின்சக்தி, சாலைகள், நடுத்தர- பெரிய தொழில் மேம்பாடுகள் ஆகியவற்றிற்காகவே செலவிடப்படுகின்றன. மத்திய அரசு, எரிசக்தித்துறைக்கும், அடிப்படை வசதிகளான ரயில்வே, துறைமுகங்கள், தேசிய நெடுஞ்சாலைகள் போன்றவற்றிற்கும் முக்கியப் பொறுப்பு வகிக்கின்றது. இந்த முதலீடுகள், மாநிலத் திட்டங்களுக்குத் தகுந்த வழிகளில் உறுதுணை புரிவதாக இருக்க வேண்டும்.

**தமிழ்நாட்டில் மின்சக்தி உற்பத்தி**

மின்சக்தி உற்பத்தியில் தமிழ்நாடு தொடர்ந்து பற்றாக்குறை நிலையில் உள்ளது. இம்மாநிலம் மின்சக்தி உற்பத்தியில் நீர்வள ஆதாரங்களை ஏற்கனவே முழு அளவில் பயன்படுத்தியுள்ளது. இனி மின் உற்பத்தியைப் பெருக்க அனல், அணு மின் உற்பத்தி மேம்பாட்டையே நம்பியிருக்க வேண்டியுள்ளது.

இம்மாநிலம் அனல்மின் உற்பத்தி செய்யத் தேவையான நிலக்கரிக்காக மத்திய அரசை நம்பியிருக்க வேண்டியுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள அனல் மின் நிலையங்களுக்கு இதுவரையில் சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து நிலக்கரி வழங்கப்பட்டு வந்தது. ஆனால் இது நிறுத்தப்பட்டு, வட மாநிலங்களிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து இரயில்-கப்பல் மூலமாகக் கொண்டுவர வேண்டியுள்ளது. இதனால், இம்மாநிலத்திற்குக் கணிசமான அளவிற்கு நிதிச்சுமை ஏற்படுகிறது. தமிழநாட்டிலுள்ள அனல்மின் நிலையங்கள், மேலே குறிப்பிட்டவாறு, ஏனைய மாநிலங்களிலுள்ள நிலக்கரியையே பெரிதும் சார்ந்திருக்கையில், தமிழ்நாட்டில் வெட்டியெடுக்கப்படுகிற பழுப்பு நிலக்கரியிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிற மின்சாரத்தை அண்டை மாநிலங்களுக்கு வழங்குவது நியாயமற்ற செயலாகும். நெய்வேலியில் உற்பத்தி செய்யப்படுகிற மின்சாரம் முழுவதையும் தமிழ்நாட்டிற்கே ஒதுக்கீடு செய்து மத்திய அரசு நியாயம் வழங்கவேண்டும்.

நிலக்கரி வழங்குவதற்காக மாற்றியமைக்கப்பட்ட ஏற்பாட்டினால், உண்டாகக்கூடிய கூடுதல் நிதிச்சுமையும் சரிசெய்யப்பட வேண்டும்.

வேறுவகையில் சொன்னால், நாட்டிலுள்ள அனைத்து அனல்மின் நிலையங்களிலும் ஒரே விலையில் நிலக்கரி வழங்கப்படுகிறது என்பதை உறுதிசெய்வதற்காக, நேரடியாக உதவித்தொகை வழங்குவதை அல்லது நிலக்கரியை அனுப்புவதற்கான கப்பல் சரக்குக் கட்டணத்தை ஒரேமாதிரி வைத்துவரும் முறையை மீண்டும் கொண்டுவரலாமென்று நாம் கேட்டுக் கொள்கிறோம். கூடங்குளத்தில் அமைக்கப்படவுள்ள அணுமின்நிலையத்தின் வளர்ச்சிக்காகக் கணிசமான தொகையைச் செலவிட மாநில அரசு முன்வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த அணுமின்நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் குறைந்தது 75 சதவீதத்தையாவது இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்வதன்மூலம் மத்திய அரசு, இம்மாநிலத்திற்கு ஏற்படும் நிதிச்சுமையை ஈடுசெய்ய வேண்டும். மின்துறையில், தனியார்துறை பங்குகொள்வதை ஊக்குவிக்க விரைந்து முடிவெடுக்கவேண்டுமென்று நாம் விரும்புகிறோம். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஜெயங்கொண்டான் என்னுமிடத்தில் பழுப்பு நிலக்கரியை வெட்டியெடுப்பதற்காக மத்திய அரசு முதலீடு செய்வது குறித்தும், அரசுத் துறையும். தனியார் துறையும், இம்மாநிலத்தில் மின் உற்பத்தி செய்வதற்கென்றே பழுப்பு நிலக்கரியை ஒதுக்குவது குறித்தும் விரைந்து முடிவெடுக்க வேண்டும்.

**நெய்வேலி நிலக்கரி**
**தமிழகத்திற்கே தாரீர்!**

**தமிழகத்தில் பெருந் தொழில்கள்:**

சென்னையிலும், தஞ்சாவூர்ப் பகுதியிலும், உள்ள பெட்ரோலிய இரசாயனத் தொழிற்சாலைகளுக்கு, காவிரிப்படுகையில் கிடைக்கும் எண்ணெயைப் பயன்படுத்துவதிலும், பம்பாய்க் கடற்பகுதியிலிருந்து கிடைக்கும் இயற்கை எரிவாயுவுடன் தென்னகத்தை இணைக்க வேண்டும் என்பதிலும் மத்திய அரசு போதிய அளவு முதலீடு செய்ய வேண்டுமென்பதில் நாங்கள் ஆர்வமாக உள்ளோம். தற்போது, உருட்டாலையாக இயங்கி வருகிற சேலம் உருக்குத் தொழிற்சாலையை ஒருங்கிணைந்த உருக்குத் தொழிற்சாலையாக மாற்றவேண்டியது மற்றொரு முக்கியத் திட்டமாகும். சேதுசமுத்திரம் கால்வாய்த் திட்டம் தமிழ்நாட்டிற்குப் பயனளிப்பதோடு மட்டுமின்றி, இந்தியத் தீபகற்பம் முழுவதிலும் கப்பல் போக்குவரத்து லாபகரமாக நடைபெறுவதற்கும் பெரிதும் உதவும். தொழில் தொடங்குவதற்கான அனைத்து வசதிகளையும் ஒரே இடத்தில் பெறும் ஏற்பாட்டின்கீழ் இயன்றவரையில் தனியார்துறை முதலீடுகளுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்கும் நடைமுறை விரைவுபடுத்தப்படவேண்டுமென்றும், மாநில அரசுகள் அக்கறை கொண்டுள்ள பெரும் திட்டப்பணிகளுக்குச் சிறப்பு முன்னுரிமை அளிக்கப்படவேண்டுமென்றும்

நாங்கள் வலியுறுத்துகிறோம். குறிப்பாக, சென்னையில் அமைக்கக் கருதப்பட்டுள்ள நீர்க்கரிமப் பெட்ரோலிய ஆலைக்கு மத்திய அரசு ஒப்புதலளிக்க வேண்டுமென நாங்கள் வலியுறுத்துகிறோம். இத்தொழிற்சாலைக்குத் தேவையான அனுமதிக்கடிதம் வழங்கப்பட்டு, பல தொடக்கப்பணிகள் ஏற்கனவே முடிக்கப்பட்டுவிட்டன.

### நகர்ப்புற வளர்ச்சிக்குச் சிறப்பு உதவி

தமிழ்நாடு நகரங்கள் மிகுந்த ஒரு மாநிலமாக இருப்பதால், நகர்ப்புற வளர்ச்சிக்காக, குறிப்பாக குடிநீர்வழங்கல், சென்னை மாநகர விரைவுப் போக்குவரத்து ஆகிய திட்டங்களுக்காக இம்மாநிலத்திற்குச் சிறப்பு உதவி அளிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. எனவே, உயர் முன்னுரிமை அளித்து எட்டாவது திட்டத்தில் மத்திய அரசுத் திட்டங்களின் கீழ் வருகின்ற இந்த முக்கியமான திட்டப்பணிகளுக்குப் போதுமான நிதி ஒதுக்கப்படும் என நம்புகிறோம்.

முடிவாக, இந்தச்செயல்திட்ட அறிக்கையைத் தயாரித்து, விரிவான விவாதத்திற்காக தேசிய வளர்ச்சிக்குழுவின் முன் வைத்ததற்காகப் புதிய அரசையும், புதிய திட்டக்குழுவையும் மீண்டுமொருமுறை நான் பாராட்டுகிறேன். எட்டாவது திட்ட அறிக்கையைத் தயாரிக்கும் பணி விரைவுபடுத்தப்படும் என நம்புகிறேன். இத்திட்டம் வகுக்கப்படுகையில் அனைத்து நிலைகளிலும் மாநில அரசுகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு கலந்தாலோசிக்கப்படும் என்றும், தேசிய வளர்ச்சிக்குழு அவசியமானபோதெல்லாம் கூட்டப்பட்டு, திட்டம் வகுப்பதற்குத் தேவையான ஆலோசனையும், ஆதரவும் பெறப்படும் என்றும் நம்புகிறோம். நமது கூட்டாட்சி அமைப்பில் திட்டம் வகுக்கும் நடைமுறையை ஓர் இரயிலுடன் ஒப்பிடுவோமானால்,இந்தச்செயல்திட்ட அறிக்கை, அந்த இரயிலைச் சரியான பாதையிலேயே இயங்கச் செய்வது என்று கூறலாம். திட்டக்குழு என்னும் மத்திய அரசின் எஞ்சின், வேகம் பெற்று அனைத்து மாநிலங்களையும் ஒன்றாக இணைத்து இழுத்துச் செல்லவேண்டியது அவசியமாகும். மாநிலங்கள் ஒவ்வொன்றும் மக்களடங்கிய இரயில் பெட்டிகளாகும்.

## தேசிய வளர்ச்சிக் குழு
## இரண்டாம்நாள்
## கூட்டம்

எட்டாவது திட்ட அணுகுமுறை பற்றிய கருத்துக்களைக் கேட்டறியும் வாய்ப்பு நேற்று நமக்குக் கிடைத்தது. இன்று இந்தத் திட்டத்தில் அடங்கியுள்ள சில முக்கியமான பிரச்சினைகள் குறித்தும், நடைமுறை குறித்தும் விவாதிக்க இருக்கிறோம்.

முதலில் மக்கள் தொகை பற்றியும் மனிதவள மேம்பாடு பற்றியும் பேச விழைகிறேன். பிறப்பு விகிதத்தைத் தமிழகம் ஏற்கெனவே 22.5 ஆகக் குறைத்து விட்டிருக்கிறது. மக்கள் தொகைக் கட்டுப்பாடு முயற்சிக்குக் கிடைக்கும் வெற்றியானது, மாநிலத்தின் தேவைகளுக்குப் பாதகமாக முடிந்து விடும் என்று ஒரு அச்சம் இருந்து வருகிறது. இந்த அச்சத்தைப் போக்கியாக வேண்டும். மக்கட் தொகைக் கட்டுப்பாடு சம்பந்தமான இலக்குகளை அடைய திட்டவட்டமான ஊக்குவிப்புகளை மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய கட்டத்தை எட்டியிருக்கிறோம்.

### பெண்கள் மேம்பாட்டிற்காகப் பல்வேறு திட்டங்கள்

மனிதவள மேம்பாட்டின் முக்கியத்துவத்தை அதிலும் முனைப்பாக மகளிர், பிற்படுத்தப்பட்ட பிரிவினர், மிகப் பிற்படுத்தப்பட்ட பிரிவினர், ஆதி திராவிடர்கள், பழங்குடிப்பிரிவினர் ஆகியவர்களைக் கருத்தில் கொண்டு, இந்த முக்கியத்துவத்தை உணர்ந்து, தமிழகத்தில் அரசுப் பணிகளில் 30 சதவிகித காலி இடங்களை மகளிருக்காக ஒதுக்கியிருக்கிறோம். துவக்கப்பள்ளிகளில் மூன்றாவது வகுப்பு வரை பெண்கள் மட்டுமே ஆசிரியைகளாக நியமிக்கப்படுகிறார்கள்.

இந்த ஏற்பாட்டை ஐந்தாவது வகுப்பு வரை விரிவுபடுத்தவும் உத்தேசித்துள்ளோம். பதினெட்டு வயதில், எட்டாவது வகுப்பு படித்து முடித்துள்ள ஏழைப் பெண்களுக்கு ரூ.5,000 திருமண உதவி வழங்கும் புதிய திட்டமொன்றையும் தொடங்கியிருக்கிறோம். அதற்கு நல்ல வரவேற்பு உள்ளது. இதுவரை, ஓராண்டு காலத்தில் 18,000 பெண்கள் இதனால் பயனடைந்திருக்கிறார்கள். விதவைத் திருமணம் மற்றும் ஆதி திராவிடர், பழங்குடிப் பிரிவினருடன் நடக்கும் கலப்புத் திருமணம் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக, ரூ.5000 அளவுக்கு சிறப்பு உதவியும் அளிக்கப்பட்டு வருகிறது. பெண் குழந்தைகளுக்கு ''சொத்தில் சம உரிமையும்'' வழங்கியிருக்கிறோம். ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்குப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வியும் அளிக்கிறோம். மகளிருக்குப் பொருளாதார பலம் அளிப்பதற்காக, ரூ.45.8 கோடி செலவில் சிறப்புத் திட்டம் ஒன்றைத் துவக்கியுள்ளோம். வேளாண்மை, பட்டுப்பூச்சி வளர்ப்பு, கிராமக் கைத்தொழில்கள் ஆகிய துறைகளில் 40,000 பெண்கள் இதனால் பயனடைவர்.

### பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்காக

இந்த ஆண்டு பட்ஜெட்டில் மிகப் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்காக இருமடங்குத் தொகை ஒதுக்கியுள்ளோம். சென்ற ஆண்டில், மிகப் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்காக தனியாக 20 சதவிகிதம் ஒதுக்கியதன் மூலம், கல்வி மற்றும் வேலைவாய்ப்புத் துறைகளில் அவர்கள் குறிப்பிடத்தக்க அளவு பயனடையுமாறு பார்த்துக் கொண்டிருக்கிறோம். மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல் நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மத்திய அரசு விரைவில் மேற்கொள்ளும் என்றும் நம்புகிறோம்.

**நிலச் சீர்திருத்தத்திற்கு முக்கியத்துவம்**

தமிழகத்தில் மொத்த உழைப்பாளிகளில் விவசாயத் தொழிலாளர்களின் விகிதாச்சாரம் மிக அதிகமாக அதிகரித்துள்ளது. தேசிய சராசரி அதிகரிப்பு விகிதத்தைவிட மிகவும் அதிகமாக உள்ளது. நிலச் சீர்திருத்தங்களுக்கு நாங்கள் மிக அதிக முக்கியத்துவம் அளித்திருக்கிறோம். பினாமி நில பேரங்களைப் பற்றி விசாரணை நடத்தி, அத்தகைய நிலங்களை நிலமற்றவர்களுக்கு விநியோகிப்பதற்கான சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறோம். வளர்ச்சிப் பணிகளில், கிராமப்புற ஏழை மக்கள் பங்கேற்கச் செய்வதற்கான முயற்சிகளைப் பெருக்குவதற்காகப் பாடுபட வேண்டுமென்பதே எங்கள் நோக்கமாகும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளும் போது, நிலச்சீர்திருத்தங்களுக்காகக் கடனுதவி அளிக்கும் விஷயத்தில், வர்த்தக ரீதியிலான வங்கிகளும் பங்குபெற வேண்டியது அவசியமாகும்.

திட்ட வருவாய் மானியங்களை நிர்ணயிக்கும் விஷயத்தில், ஒன்பதாவது நிதிக் கமிஷன், மனித வள மேம்பாட்டுக்கான திட்டப்பணிகளைச் செயல்படுத்துவதில் நல்ல சாதனை கண்டுள்ள தமிழகம் போன்ற மாநிலங்களைத் தண்டித்திருப்பதாகவே தோன்றுகிறது. 1990 முதல் 1995-ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் மக்கள் தொகை எந்த அளவிலிருக்கும் என்பதை மதிப்பிட்டறியும் வகையில் உள்ள புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதன் மூலம், 9-வது நிதிக்குழு இந்த பின்னடைவை மேலும் சிக்கலாக்கி விட்டிருக்கிறது. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதற்கும், மனித வள மேம்பாட்டுக்கும் முதலீடு செய்துள்ள ஒரு மாநிலம் இந்த வகையில், மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினையை-குறிப்பாக, எட்டாவது திட்டத்தின் வெற்றிக்கே அச்சாணி போல் விளங்கும் மக்கள் தொகை, மனித வள மேம்பாடு ஆகிய பிரச்சினைகளைப் பரிசீலிக்கும்போது - இந்தக் கவுன்சிலின் ஒரு குழு இந்தப் பிரச்சினையை மறுபரிசீலனை செய்தாக வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

வேலை வாய்ப்பு நிலையங்களில் பதிவு செய்து கொண்டிருக்கும் வேலையற்றோர் எண்ணிக்கை, பல மாநிலங்களில் குறைந்திருப்பதாகச் சொல்லப்படும் நிலைமையில், தமிழகத்தில் இந்த எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. மொத்த உழைப்பாளிகள் தொகையில், நிலமற்ற கிராம விவசாயத் தொழிலாளர்களின் விகிதாச்சாரம் வேகமாக அதிகரித்து வருவது, தீவிர கவலைக்கு உரிய விஷயமாகும். வேலை வாய்ப்பு உத்தரவாத திட்டத்தை, நாடு பூராவிலும் அமல் நடத்த வேண்டும். ஒரு சில மாவட்டங்களுடன் மட்டும் நிறுத்திக் கொண்டு விடலாகாது. வேலை வாய்ப்பை நோக்கமாகக் கொண்ட தொழில் மற்றும் தொழில் நுட்பக் கல்விக்குத் தனிப்பட்ட முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

திறமை மற்றும் சிக்கனத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதை நான் ஆமோதிக்கிறேன். இந்த விஷயத்தில் தமிழ்நாட்டின் சாதனை நல்ல படி உள்ளது. எங்களது பாசன வாய்ப்புகள் அனைத்தையும் முழு அளவில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். பாசன நீரைச் சேமிக்கும் பணிக்காக (சிக்கனப் படுத்தும் பணிக்காக) ஏராளமாக முதலீடு செய்து வருகிறோம். எங்களுடைய தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் லோட் ஃபேக்டர் (Load Factor) 80.1 சதவிகிதமாகும். நாட்டிலேயே மிக அதிக பட்ச சாதனை கண்டுள்ள மின்நிலையங்களில் இதுவும் ஒன்றாகும். எரிபொருளைத் (எண்ணெயை) திறம்படப் பயன்படுத்தும் விஷயத்தில் எங்களது போக்கு வரத்துக் கழகங்கள் நல்ல சாதனை புரிந்துள்ளது. வளங்களையும், வசதிகளையும் திறம்பட பயன்படுத்துவது பற்றி பேசுகையில், தமிழகத்தின் பழுப்பு நிலக்கரியைக் கொண்டு தயாரிக்கும் மின்சாரம் முழுவதையும், இந்த மாநிலத்தின் உபயோகத்துக்காக மட்டுமே ஒதுக்க வேண்டும் என்பதுதான் பொருத்தமாகும்.

வளர்ச்சிப் பணிகளில் அதிகாரங்கள் பரவலாக்கப் பட வேண்டும் என்பதற்கு எட்டாவது திட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறோம். அதிகாரப் பரவலை, வெவ்வேறு பாணிகளில் சாதிக்க முடியும். நாங்கள் ஏற்கனவே

**மாநிலங்களுக்குப் போதிய நிதி வசதி கிடைக்க வேண்டும்**

தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தில் பலதரப்பட்ட திருத்தங்களைச் செய்திருக்கிறோம். 5 ஆண்டுக்கு ஒரு முறை ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியத்துக்கும் ஒழுங்காகத் தேர்தல் நடத்த, இந்தத் திருத்தங்கள் வகை செய்துள்ளன. மகளிருக்கு 30 சதவிகித இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் அவர்களது எண்ணிக்கையின் விகிதாச்சாரத்தில் இடம் ஒதுக்கவும் வகை செய்யப்பட்டிருக்கிறது. திட்ட வட்டமாக சில பணிகளை நிறைவேற்றும் பொறுப்பை ஊராட்சி மன்றங்களிடம் ஒப்படைக்க வகை செய்யப்பட்டிருக்கிறது. உள்ளாட்சி அமைப்புகளின் நிதி வசதிகளைப் பெருக்குவதற்கான பரிந்துரைகளை அளிக்க வல்லுநர் குழு ஒன்றை அமைக்க வகை செய்திருக்கிறது. இந்த வல்லுநர் குழு ஏற்கனவே அமைக்கப்பட்டுவிட்டது. உள்ளாட்சி அமைப்புகளின் நிதி வசதியைப் பெருக்குவதற்கான முடிவுகளை விரைவில் எடுக்கவிருக்கிறோம்.

நான் நேற்று சொன்னது போல, அதிகாரத்தைப் பரவல் ஆக்குவது என்பது, மத்தியிலிருந்து தொடங்க வேண்டும். நிதியுதவி அமைப்புகள் வழங்கும் கடனுதவிதான், எட்டாவது திட்ட வளர்ச்சிப் பணிகளில் முக்கிய பங்கு வகிக்கப் போகின்றது. முடிவுகள் எடுக்கும் அதிகாரத்தைப்

பிரவலாக்க வேண்டுமானால், வர்த்தக ரீதியிலான வங்கிகளுக்கு ஸ்தல வாரியங்களை (Local Boards) அமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். மத்திய-மாநில உறவு முறை பற்றி விவாதிப்பதற்காக, மாநிலங்கள் குழுவின் (இண்டர் ஸ்டேட் கவுன்சில்) கூட்டம் விரைவில் பெங்களூரில் நடக்கும் என்று பிரதமர் நேற்று தெரிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன். வருங்காலத்துக்கு இது ஒரு நல்ல அறிகுறியாகும். தேசிய வளர்ச்சிக் கவுன்சிலும் அடிக்கடி தென்மாநிலங்கள் ஏதாவது ஒன்றில் கூட வேண்டும் என்றும் யோசனை கூற விரும்புகிறேன்.

**அரசுத்துறை நிறுவனங்கள் மூலம் கடன் பத்திரங்கள்!**

இப்போது, நிதி வசதி நிர்வாகப் பிரச்சினை சம்பந்தமாக சில திட்டவட்டமான யோசனைகளைக் கூற விரும்புகிறேன். மாநிலங்கள் எட்டாவது திட்டப்பணிகளைப் பயனுள்ள வகையில் மேற்கொள்ள வேண்டுமெனில், அவற்றின் நிதி வசதி அடிப்படையை வலுப்படுத்தியாக வேண்டும். மத்திய ஆயத்தீர்வைகளில் அனைத்து மாநிலங்களின் பங்கு 37.5 சதவிகிதமாக இருந்து வருவதை 42.5 சதவிகிதமாக உயர்த்தியாக வேண்டும். இது முதலில் 40 சதவிகிதமாக இருந்தது. ஒன்பதாவது நிதிக் கமிஷன் இதை 37.5 சதவிகிதமாகக் குறைத்து விட்டது. அதைச் சரி செய்வதற்காகத்தான் இந்த யோசனை. மனிதவள மேம்பாடு, அதிகாரப் பரவல். வேலைவாய்ப்பு ஆகியவற்றுக்குச்சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில், மாநிலங்களுக்குப் போதிய நிதி வசதி கிடைக்கச் செய்வது தான் பொருத்தமாகும். சாதாரணமாக, மாநிலத் திட்டங்களுக்கு மத்திய உதவி 10 சதவிகித அளவில் இருந்து வருகிறது. இதைப் பெரிதும் அதிகரித்தாக வேண்டியது அவசியமாகும். அரசுத் துறை நிறுவனங்கள் மூலதன மார்க்கெட்டில் கடன் பத்திரங்கள் வெளியிட இப்போது வாய்ப்பு இல்லை. அரசுத்துறை நிறுவனங்கள் மூலதனக் கடன் பத்திரங்கள் வெளியிடுவதை அனுமதிக்க வேண்டும் என சிபாரிசு செய்கிறேன்.

கடன்பத்திர வெளியீடுகள் மூலம் எழுப்பப்படும் நிதியில், தற்போது மாநிலங்களின் பங்குக்கு 28 சதவிகிதந்தான் கிடைக்கிறது. இதை 50 சதவிகிதமாக அதிகரிக்க வேண்டும். மாநிலங்களின் திட்டங்களுக்கு நிதி வசதி திரட்டுவதில், சிறு சேமிப்பின் பங்கு மிகவும் முக்கியமானதாக ஆகிவிட்டிருக்கிறது. ஆனால், துரதிருஷ்டவசமாக, அண்மை ஆண்டுகளில் மத்திய அரசு செய்துள்ள மாறுதல்கள் சிறுசேமிப்பு வசூலைப் பாதித்துள்ளது. இந்தப் பிரச்சினை பற்றிப் பரிசீலிக்க ஒரு குழுவை அமைக்கலாம்.

''கன்சைன்மெண்ட் டாக்ஸ்'' என்று சொல்லப்படும் சரக்குக் கட்டண வரி விதிப்பது பற்றி ஏற்கனவே ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் இதற்கான சட்டத்தைக் கொண்டு வந்தாக வேண்டும். கார்ப்பரேஷன் வரியைப்பகிர்ந்தளிக்க வேண்டும் என்று, தொடர்ந்து பல நிதிக் கமிஷன்களும், சர்க்காரியா கமிஷனும் பரிந்துரைகள் செய்திருக்கின்றன. கார்ப்பரேட் துறைக்கு வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதில், மாநில அரசுகளே அதிக பொறுப்பு ஏற்க வேண்டியிருப்பதால், இந்த வரியையும் பகிரத்தக்க வரியாக ஆக்க வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

எட்டாவது திட்டம் சம்பந்தப்பட்ட பல முக்கியப் பிரச்சினைகள் பற்றி நாம் பயனுள்ள வகையில் விவாதித்திருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். மனம் விட்டுப் பேசி நாம் நடத்திய இந்த விவாதம், 8-வது திட்டம் நமது மக்களுக்கு, குறிப்பாக ஏழை-எளிய மக்களுக்கு உண்மையிலேயே பயன் அளிக்கும் வகையில் அமைய உதவும் என நம்புகிறேன்.

**(புதுடெல்லியில் ஜூன் 18,19 ஆகிய இரு நாட்கள் நடைபெற்ற, தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரை)**

## ஜி.டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்



**கோவையிலே பிறந்து விஞ்ஞானத் துறையிலே அதிக வசதி வாய்ப்புகள் இல்லாத கால கட்டத்திலேயே விஞ்ஞானத்தில் பல புதுமைகளைச் செய்து, விவசாயத்துறையிலே பல அற்புதங்களைச் செய்து காட்டியவர் ஜி.டி. நாயுடு என்பதை அனைவரும் அறிவோம். ஆனால் அவருக்கு அன்றிருந்த அரசுகள் எந்தவிதமான அனுமதியும், அங்கீகாரமும் தராத காரணத்தால் குடத்திற்குள் வைக்கப்பட்ட விளக்காக அவருடைய ஆராய்ச்சிகள் போய்விட்டன.**

**அவருடைய பெருமையை உலகிற்கு எடுத்துச் சொல்ல இந்த வேளாண்மைப் பல்கலைக் கழகம் ''ஜி.டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்'' என்று அறிவிக்கப்படுகிறது. வேந்தர் அவர்களையும் கலந்து கொண்டு இதனை அறிவிக்கிறேன்.**

**—முதல்வர் கலைஞர்**

**(வேளாண்மைப் பல்கலைக் கழக விழாவில்)**

**24-6-90**



# தலைசிறந்த தேசபக்தர் காயிதே மில்லத்

## — மாண்புமிகு முதல்வர் கலைஞர்

கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்களுடைய பிறந்த இனிய நாளில் அவர் அமைதி கொண்டிருக்கின்ற இடத்தில் மலர்ச்சரங்களை வைத்து மரியாதை செலுத்துவது மாத்திரமல்ல, அவர் ஆற்றியுள்ள பெரும் பணிகளையும், அவருடைய ஆற்றலையும், அன்பையும், பண்பையும் எண்ணிப் பார்த்து, அவர் விட்டுச் சென்றுள்ள செயல்களைத் தொடர்ந்து நடத்துவதற்கு உறுதியெடுத்துக் கொள்கிற ஒரு நிகழ்வாக இதனைக் கருதி நாமெல்லாம் இங்கே குழுமியிருக்கிறோம்.

அப்தல் லத்தீப் அவர்கள் இங்கு காயிதே மில்லத் அவர்களைச் சிறப்பித்து- பெருமைப் படுத்தி- அவருடைய அரிய பெரிய ஆற்றல்களையெல்லாம் எடுத்தியம்பி, அதோடு 3-ஆம் தேதி அன்று மழை வந்து விட்ட காரணத்தால் என்னைப்பற்றி அன்று அதிகம் பேச முடியாத சூழ்நிலையில் அவைகளையெல்லாம் இங்கே பேசி தன்னுடைய ஆசையைத் தீர்த்துக் கொண்டிருக்கிறார்.

அவர் இந்தத் தொகுதியிலே இந்த நிகழ்ச்சிக்கு நான் வந்தேன் என்பதைத் தொகுதி மக்களைத் திருப்திப்படுத்த எடுத்துச் சொன்னார் என்றாலுங் கூட, இஸ்லாமியப் பெருமக்களால் போற்றத்தக்க ஒரு பெருமகனின் இந்த நாளை இன்றைக்கு நினைவுகூர்வதும், அவர் எந்த ஒற்றுமைக்காக, எந்த சகோதரத்துவத்திற்காகப் பாடுபட்டாரோ அதை நிலைநாட்டுவதும் நம்முடைய கடமை என்பதை உணர்ந்திருக்கின்ற நாம்- தமிழ்நாட்டில் கடந்த சில திங்கள்களாக அங்கொன்றும், இங்கொன்றுமாகச் சில சம்பவங்கள் சுட்டிக்காட்டப்படும்போது, நமக்கு அந்தச் சம்பவத்தினுடைய நடப்புகளைப் பற்றிய நினைவுகள் வருவதற்கு முன்பு, காயிதே மில்லத் அவர்கள், பெரியார் அவர்கள், அண்ணா அவர்கள் ஆகியோருடைய நினைவு தான் முந்திக்கொண்டு வருவது இயல்பாக இருக்கிறது.

அவர் இந்தியத் திருநாட்டிலே குறிப்பாகவும், சிறப்பாகவும் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டத்தக்க வகையிலே தமிழ்நாட்டில் மத வேறுபாடுகளைக் களையவும், அதன்காரணமாக வருகின்ற பூசல்களுக்குத் தடுப்புச் சுவர் எழுப்பவும் பாடுபட்ட ஏந்தல் என்ற காரணத்தால்தான் பெரியாரை, அண்ணாவை எண்ணுகிற நேரத்தில் தொடர்ந்து எண்ணப்படுகின்ற ஒரு பெயராக காயிதே மில்லத் அவர்களின் பெயரும் இருந்து வருகின்றது. சகிப்புத் தன்மையின் மறுவடிவமாகத் திகழ்ந்தவர் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள். எளிமையின் திருவுருவமாகத் திகழ்ந்தவர் காயிதேமில்லத் அவர்கள். இனிய இயல்புகளின் உறைவிடமாகத் திகழ்ந்தவர் காயிதே மில்லத் அவர்கள்.

எனக்கிருக்கின்ற ஆறுதல் எல்லாம் அவர் வாழ்ந்த காலத்திலே வாழ்ந்தது மாத்திரமல்ல- வாழ்ந்து கொண்டிருப்பது மாத்திரமல்ல- அவரோடு நெருங்கிப் பழகுகின்ற, அளவளாவுகின்ற நிலைமைகள் பலமுறை ஏற்பட்டதுதான் எனக்கிருக்கின்ற ஆறுதல்- மன மகிழ்ச்சி.

அரசியல்ரீதியாக, சமுதாயரீதியாக, பல பிரச்சினைகளை அவரோடு கலந்து பேசி அளவளாவுகின்ற கட்டங்கள் எத்தனையோ உண்டு. அவரு

# இலக்கியம் - வயல்!
# இலக்கணம் - வரப்பு!



**முதலிலே இலக்கணமா, இலக்கியமா என்றால், முதலிலே இலக்கியம் தான் இருந்திருக்க முடியும். சீப்பு செய்து கொண்டு அதற்குப் பிறகு யாரும் தலை முடியை வளர்க்க மாட்டார்கள். தலை முடி வளர்ந்தால்தான் சீப்பு செய்வார்கள். வரப்புக் கட்டிக் கொண்டு அதற்குப் பிறகு யாரும் வயலை உருவாக்க மாட்டார்கள். உருவான வயலுக்குத்தான் வரப்பு கட்டுவார்கள். அதைப் போல இலக்கியத்திற்கு வரப்பாக இலக்கணம் - இலக்கியத்தை அழகு படுத்துகின்ற சீப்பாக இலக்கணம் அமைந்திருக்கிறது.**

**—முதல்வர் கலைஞர்**

டைய பல்வேறு கோரிக்கைகள்- பொதுநல அடிப் படையிலே எழுந்த கோரிக்கைகள்- முன்பு கழக அரசு இருந்த காலத்திலும்-மீண்டும் அவர் இல்லாது நம்முடைய உள்ளத்திலே இருக்கின்ற நேரத்தில், இப்போது கழக அரசு அமைந்திருக்கின்ற நேரத் திலும் ஏற்கப்பட்டு ஆவண செய்யப்பட்டு வரு கின்றன.

மேலும் சிறுபான்மை சமுதாயமாக இருக்கின்ற இஸ்லாமிய சமுதாயத்தினருக்கு ஒரு பாதுகாப்பு அரணாக இன்றுள்ள அரசு அமைந்திருக்கின்றது. அரசு என்கிற நிலையிலே மாத்திரமல்ல. இந்த அரசை நடத்துகின்ற கழகம் என்ற நிலைமையிலே கூட எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஆளுங்கட்சி யாக இருந்தாலும் என்றைக்கும் சிறுபான்மை மக்களுக்கு- குறிப்பாக இஸ்லாமியப் பெருமக் களுக்கு தி.மு.கழகம் ஒரு பாதுகாப்பு அரண் என் பதை இன்றைக்கு அல்ல- இந்த இடத்திலே அல்ல- எல்லா இடத்திலும் நான் எடுத்துச் சொல்லி வருபவன்.

தலைசிறந்த தேச பக்தர் காயிதே மில்லத் அவர்கள். ஆனால் வானத்திலே இருக்கின்ற சூரியனைப் பார்த்து சில நேரங்களில் பூமியிலே இருக்கின்ற ஓணான்கள் அண்ணாந்து பார்த்துப் பழிப்பதுண்டு. சூரியனுக்கு அருகே சென்றால் என்னவாகுமென்று அதற்குத் தெரியாது. நமக்குத் தெரியும். அதைப்போல காயிதே மில்லத் அவர் களின் தேச பக்தியைக் கேலி செய்கின்ற, விமர் சனம் செய்கின்ற சிலர்- அவர் மறைந்த பிறகும் கூட இன்றைக்கும் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது வேதனையே மிஞ்சுகின்றது. ஏனென்றால் அவர் தலைசிறந்த தேச பக்தர் என்பதற்கு வேறு எடுத்துக்காட்டுகள் தேவையில்லை. பாராளுமன்றத்திலே அவர் ஆற்றிய உரை ஒன்றே போதுமானது. பாகிஸ்தான் ஆக்கிர மிப்பின்போது- பாகிஸ்தான் போராட்டத்தின் போது- இந்திய ராணுவத்தில் என்னுடைய மகனைச் சேர்த்து, போருக்கு அனுப்ப நான் தயாராக இருக் கிறேன் என்று சொன்ன உரை ஒன்றே அவர் எத்தகைய தேச பக்தர் என்பதற்குச் சரியான சான்றாகும்.

அப்படிப்பட்ட தேச பக்தர், நாட்டுப் பற்றாளர், மொழிப் பற்றாளரும்கூட! தமிழ்மொழி இந்தியா வின் பொது மொழியாக, தேசிய மொழியாக ஆக வேண்டும் என்று திட்டவட்டமாக தெளிவாகத் தெரிவித்தவர். இந்தியாவின் பொது மொழியாக எது இருப்பது என்ற சர்ச்சை அரசியல் நிர்ணய சபையிலே எழுந்த நேரத்தில்- இலக்கிய ரீதியாக, இலக்கண ரீதியாக, வரலாற்று ரீதியாக, வளம் பொருந்திய ஒரே மொழி தமிழ் மொழிதான், அந்த மொழிதான் இந்தியாவின் பொது மொழி யாக இருக்க வேண்டுமென்று எடுத்துக்கூறி தமிழ் மொழிப் பற்றாளர் என்பதை எடுத்துக்காட்டி யிருக்கிறார்.

அவருடைய புகழை இங்கு பாடுகின்ற இந்த நேரத்தில் லத்தீப் அவர்கள் சொன்னதைப்போல எனக்கொரு வாய்ப்பாக நான் பிறந்தது- ஜூன் திங்கள் 3-ஆம் தேதி, அவர் பிறந்தது ஜூன் திங்கள் 5-ஆம் தேதி என்பதேகூட— எப்படியும் நான் இந்த 5-ஆம் தேதியன்று அவர் அமைதி கொண்டிருக்கின்ற இடத்திற்கு வரக்கூடிய வகை யிலே, 3-ஆம் தேதி என்று என்னுடைய பிறந்த நாள் அமைந்திருப்பதால் நான் சென்னையிலே 5-ஆம் தேதியிருக்கவும், இங்கே வரவுமான சூழ் நிலை அமைந்திருப்பது- இயற்கையிலே இது நம் மிடையே இருக்கின்ற ஒற்றுமைக்கு அடையாளம் என்று கூறி வாழ்க காயிதே மில்லத் அவர்களின் புகழ் என்று வாழ்த்துகிறேன்.

**(கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் 95-வது பிறந்த நாளை யொட்டி, மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவரது நினைவிடத்திற்குச் சென்று மலரஞ்சலி செலுத்தி ஆற்றிய உரையிலிருந்து)**

நான்காம் அட்டை சொல்லும் செய்தி

# சென்னைத் துறைமுக வரலாறு



சென்னைத் துறைமுகம் உருவான கதையே மிகச் சுவையான ஒன்று. இப்போது நாமிருக்கும் இந்த சென்னை நகரம் 16-ஆம் நூற்றாண்டிலே, அதாவது ஏறத்தாழ 400 ஆண்டுகளுக்கு முன்னால் - மீன் பிடிப்பவர்கள் வசிக்கும் ஒரு குக்கிராமமாகவே இருந்தது. அப்போது இதை சென்னைப் பட்டணம் என்பார்கள். நமது நாட்டிற்கு அப்போது வந்த ஆங்கிலேயர்கள், கிழக்கிந்திய கம்பெனி என்கிற ஓர் ஆங்கிலேய வாணிப நிறுவனத்தை இங்கே அமைத்தார்கள்.

17-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் 'இவர்களுடைய வாணிபம் இங்கே மும்முரம் அடைந்தது. இந்நிலையில், இங்கே துறைமுகம் இல்லாதது அவர்களுக்குத் தொல்லையாயிருந்தது. எனினும், கடலில் கரையிலிருந்து கால் மைல் தூரத்தில் கப்பல்களை நிறுத்தி, மசூலா எனப்படும் சிறிய படகுகள் மூலமாக சரக்குகளைக் கொண்டு வந்து கரை சேர்த்தார்கள். இந்தப் படகுகள் 1 டன் முதல் 10 டன் எடையுள்ள சரக்குகளையே ஏற்றிவரும் சக்தி படைத்தவையாக இருந்தன.

அப்போது ஆங்கிலேயரின் வாணிப நிறுவனம் தற்போது தமிழக அரசு தலைமைச் செயலகம் இருக்கும் செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளேயே இருந்தது. கப்பல்கள் வருவதற்கு வசதியாக இருக்கும் வகையில், கோட்டையிலேயே 1796-ஆம் ஆண்டு 100 அடி உயரமுள்ள கலங்கரை விளக்கத்தை அமைத்தனர். இது தேங்காய் எண்ணெய்யால் எரிந்தது. கடல் பகுதிக்குள் இதன் ஒளி 17 மைல் தூரம் தெரிந்தது.

1875-ஆம் ஆண்டு வரை இங்கே இயற்கைத் துறைமுகம் என்றோ, செயற்கைத் துறைமுகம் என்றோ ஒன்றும் கிடையாது. திறந்த மணல் வெளிப்பரப்பே இருந்தது. இது மழையாலும், புயலாலும் பாதிக்கும் பகுதியாகவே இருந்தது.

18-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஆங்கிலேயரின் வணிகம் பெருகியது. அதனால், கிழக்கிந்திய கம்பெனி வலுவடைந்து வந்தது. வியாபாரிகளின் வசதிக்காக கோட்டைக்குள் இருந்த சுங்க இலாகா அலுவலகம், இப்போதிருக்கும் கடற்கரை மின் வண்டி நிலையத்திற்கு அருகில் இருக்கும் சுங்க இலாகா அலுவலக இடத்திற்கு மாற்றப்பட்டது. இதன் காரணமாக கோட்டைக்கு எதிரே கடலில் நிறுத்தப்பட்டு வந்த கப்பல்கள், கடற்கரை மின் வண்டி நிலையத்திற்கு அருகில் மாற்றப்பட்ட சுங்க இலாகா அலுவலகத்திற்கு எதிரே, கடலில் நிற்கத் தொடங்கின. நாளடைவில் கப்பல்கள் அதிகமாக வரத் தொடங்கியதால், மசூலா படகுகள் மூலம் சரக்குகளை ஏற்றிக் கொண்டு கரைக்கு வருவதில் நட்டம் ஏற்பட்டது. இதைத் தடுப்பதற்காக திட்டம் தீட்டினார்கள். இதுதான், பின்னாளில் துறைமுகம் தோன்றுவதற்கும் ஒரு முன்னோடியாக இருந்தது.

முதற்கட்டமாக - தற்போதிருக்கும் சுங்க இலாகா அலுவலகத்திற்கு எதிரே மேற்கிலிருந்து கிழக்காக, கரைக்கு செங்குத்தாக கடலுக்குள் 1100 அடி நீளமுள்ள பாலம் போன்ற ஓர் இரும்பு மேடையை ஏற்படுத்தி, அந்த மேடையின் முனையில் 30 அடி ஆழமுள்ள அந்தப் பகுதியில் - கப்பல்கள் கட்டுவதற்கான வசதியைச் செய்தார்கள். 1859-ல் இந்த இரும்பு மேடை அமைக்கும் பணி ஆரம்பமானது; 1861-ல் பணி முடிவடைந்தது. இதனால் மசூலா படகுகளைக் கடினப்பட்டுக் கரை சேர்க்கும் துன்பம் தீர்ந்ததோடு, காலமும் பணமும் மீதமானது.

1868-ல் மூன்று இலட்சம் டன் சரக்குகள் கையாளும் நிலைக்கு நிலைமை உயர்ந்தது. கப்பல் போக்குவரத்தும், சரக்குகள் சென்னைக்கு வருவதும் அதிக அளவில் இருந்ததால் இங்கு ஒரு துறைமுகம் அமைப்பது பற்றி அப்போதிருந்த சென்னை வாணிபக் கழகம் 1868-ல் திட்டம் ஒன்று தீட்டியது. அதன்படி, 1875 டிசம்பர் 15-ல் துறைமுகம் அமைப்பதற்கான முதல் துவக்கப்பணி இங்கிலாந்து நாட்டு வேல்ஸ் இளவரசரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

திரு. வில்லியம்ஸ் பார்க்ஸ் என்ற துறைமுக திட்ட நிபுணர் திட்டத்தின்படி, முதலில் மேற்கிலிருந்து கிழக்காக இரண்டு அலைதடுப்புச் சுவர் 3000 அடி இடைவெளியில், ஒரு மைல் நீளத்திற்குக் கட்டுவது; பின்



மையத் துறையில் முன்பிருந்த துறைமுக நிர்வாக அலுவலகக் கட்டடம்.

அவற்றை ஒன்றையொன்று நோக்கித் திரும்பச் செய்து கிழக்குச் சுவராக இணைப்பது. இந்தக் கிழக்குச் சுவரில் 550 அடி அகலத்திற்கு பாதை விட்டுவிட்டால், அதன் வழியாக கப்பல்கள் உள்ளே வரலாம். இதன்படி 1876-ல் வடதிசை அலைதடுப்புச் சுவர் அமைப்புப் பணியும், 1877-ல் தென்திசை அலைதடுப்புச் சுவர் பணியும் துவங்கின. கட்டி முடிந்ததும், இந்த இரு சுவர்களின் முனைகளையும் இணைத்து, அதாவது மூன்று பக்கமும் சுவர்கட்டி உள்ளடக்கமாக ஒரு துறைமுகம் உருவாக்கப்பட்டது. இந்தச் சுவருக்கான கற்களை பல்லாவரம் கல் சுரங்கத்திலிருந்து கொண்டு வந்தார்கள். இதற்காகவே தென்னிந்திய இரயில்வே நிர்வாகத்தினர் கடற்கரை (பீச்) வரை இரயில்பாதை அமைத்துத் தந்தனர். அதுவே அப்போது இரயில் பாதையாக இருந்தது.

துறைமுக அமைப்புப் பணியின் போது - துறைமுக நுழைவாயில் அருகில் மணல் குவியத் தொடங்கியது. இதனால் கிழக்குப்புறம் இருந்த நுழைவாயில் - சுவர் எழுப்பி அடைக்கப்பட்டு, வடகிழக்குப் பகுதியில் புதிதாக நுழைவாயில் அமைக்கப்பட்டது. இந்த நுழைவாயிலில் மணல் சேராமல் இருக்க 1200 அடி நீளத்திற்கு தடுப்புச் சுவர் எழுப்பப்பட்டது.

1894-ல் சென்னை உயர்நீதி மன்றக் கட்டடத்தின் மைய மண்டபத்தில் கலங்கரை விளக்கம் கட்டப்பட்டு செயல்படத் துவங்கியது. இதுவும் மண்ணெண்ணெய் விளக்கே. 1952-ல் இதில் மின்விளக்கு அமைத்தனர். இதன் ஒளி கடலில் 20 மைல் தூரம் தெரிந்தது.

1904-ல் துறைமுகத் தலைவராக நியமிக்கப்பட்ட சர் பிரான்சிஸ் ஸ்பிரிங், இத்துறைமுகத்தை மிகச்சிறந்த வாணிபத் தளமாக உருவாக்கினார். இதனால் உலகப் படத்தில் கடல் வாணிபம் புரியும் துறைமுகமாக இது குறிப்பிடப்பட்டது.

1920-ல் படகுகள் பாதுகாப்பாக நிற்பதற்காக படகுத்துறை கட்டப்பட்டது. படகுகள் பழுது பார்க்கும் வசதியும் உடையதாக கட்டப்பட்டது.

1931-ல் மேற்குத் துறைக்கும், இராயபுரத்திற்கும் இடையேயான இரயில்பாதை செயல்படத் துவங்கியது. 1936 முதல் தெற்குத் துறை 2-ம், 1959 முதல் பயணிகள் நிலையமும், 1964 முதல் ஜவகர் துறையும் செயல்படத் துவங்கின.

1950-ல் இங்கிருந்து இரும்புக்கனிகள் கூடைகளின் மூலமாக கப்பல்களில் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. வேகமாக ஏற்றுமதி செய்ய, துறைமுகத்தின் வடக்குத் துறையை அடுத்து முழுதும் இயந்திர மயமாக்கப்பட்ட இரும்புக் கனித்துறை மேடை பாரதித் துறையில் உருவாக்கப்பட்டது. இது மணிக்கு 8,000 டன் இரும்புக்கனி ஏற்றுமதியாகும் சக்திமிக்கது. இது 1974 முதல் செயல்படத் துவங்கியது. அதே பாரதித் துறையில், நவீன எண்ணெய்த்துறை ஒன்றும் 1972 முதல் செயல்படத் துவங்கியது. 1984-ல், இரண்டாவது எண்ணெய்த் துறையும் உருவானது. எண்ணெய், மணிக்கு 4,000 டன் இறக்குமதியாகிறது.

1977-ல் வானொலி நிலையத்திற்கு எதிரில் புதிய கலங்கரை விளக்கம் அமைக்கப்பட்டது. கடலில் இதன் ஒளி 28 மைல் தூரம் செல்லும்.

உலகெங்கிலும், கன்டெயினர் - அதாவது பல வகையான பொருள்களையும் ஒரு பெட்டிக்குள் வைத்து அடைக்கப்பட்டிருக்கும் கொள்கலப் பெட்டியின் மூலம் வாணிபம் நடைபெறும் முறை வரவேற்கப்படும் நிலையில் - இந்தியாவிலேயே முதன் முதலாக இத்துறைமுகத்தில் கன்டெயினர் துறை அமைக்கப்பட்டு, மறைந்த பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் 1983 டிசம்பரில் துவக்கி வைத்தார். அப்போதே மீன்பிடி துறைமுகமும் துவக்கி வைக்கப்பட்டது. துறைமுக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது இந்த நிகழ்ச்சி.

தற்பொழுது 380 மீட்டர் நீளமுடையதாக இருக்கும் கன்டெயினர் துறையின் நீளத்தை 220 மீட்டர் நீட்டித்து, ஆண்டுக்கு 80,000 கன்டெயினர்கள் கையாளும் வசதி படைத்ததாக மாற்ற திட்டம் தீட்டப்பட்டு 1988 ஏப்ரல் முதல் அப்பணிகள் மிக வேகமாக நடந்து வருகின்றன.

தற்போது ஒரு இலட்சத்து 40 ஆயிரம் டன் இரும்புக்கனி ஏற்றிச் செல்லும் தகுதி படைத்த இரும்புக் கனி கப்பல்கள் வந்து போகின்றன. ஒரு இலட்சத்து 70 ஆயிரம் டன் இரும்புக்கனி ஏற்றிச் செல்லும் கப்பல்கள் வருவதற்கு ஏற்ப, பாரதித் துறையை ஆழப்படுத்தும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. அதே போல் எண்ணூரிலேயே ஆண்டுக்கு 8 இலட்சம் டன் நிலக்கரியைக் கையாளும் வகையில் துணைத் துறைமுகம் அமைப்பதற்கான திட்டமும் தீட்டப்பட்டுள்ளது.

நன்றி : 'சென்னைத் துறைமுகம்



**பாவேந்தர் நூற்றாண்டு:**

செவ்வையுற மகளிர்க்குக் கல்வி நலம் தேடல்
செயற்பால யாவினுமே முதன்மைஎனக் கொண்டே
அவ்வகையே செயல்வேண்டும்! அறிவுமனை யாளால்
அமைதியுல குண்டாகும் என்னஇதில் ஐயம்?

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

அதி / நவீன / பாலியெஸ்டர் / வகைகள்




உங்கள் மனதைக் கவர்ந்தவை மலர்கள்.
அவைகளின் அற்புத வண்ண ஜாலங்களை
உங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது,
மிக நவீனமாக அழகு மிளிரும்
பாலியெஸ்டர் புட[illegible]வ வகைகளில்!

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

**கோ-ஆப்டெக்ஸ்**
தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

தமிழரசு



சென்னைத் துறைமுகத்தில் உள்ள ஜவகர் துறையின் தோற்றம்.